நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொள்வதற்கான தர்ம போதனைகள்

# மாற்றமுறாத உன்னத சத்தியம்

பூஜைக்குரிய கிரிபத்கொடை ஞானானந்த தேரர்

நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொள்வதற்கான தர்ம போதனைகள்

**மாற்றமுறாத உன்னத சத்தியம்**

பூஜைக்குரிய கிரிபத்கொடை ஞானானந்த தேரர்

முதலாம் பதிப்பு 2014 வருடம்.

© 2015 All rights Reserved. Shraddha Media Network |www. tamilbuddhist.com
Tel: 0112 571 471 | e-mail : shraddhatv@gmail.com

# மாற்றமுறாத உன்னத சத்தியம்

**பூஜைக்குரிய கிரிபத்கொடை ஞானானந்த தேரர்**

நிகழ்த்திய தர்ம போதனைகளிலிருந்து
தெரிவு செய்யப்பட்டவையாகும்.

# உள்ளடக்கம்.


01. தம்மசக்க பவத்தன சூத்திரம் - 07

02. தம்மசக்க பவத்தன சூத்திரம் பாகம் 2 - 41

03. எதற்காக சமயத்தினை பின்பற்ற வேண்டும்? - 82

04. விபங்க சூத்திரம். -

**சப்ப பாபஸ்ஸ அகரணங் - குசலஸ்ஸ உபசம்பதா**
**சசித்த பரியோதபனங் - ஏதங் புத்தான சாசனங்**

“சகல பாவங்களையும் செய்யாதிருத்தல்,
நல்லறத்தையே செய்தல் மற்றும் மனதை
தூய்மை படுத்தல் இவையே அனைத்து
புத்தர்மார்களதும் போதனையாகும்.”

*நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மாசம்புத்தஸ்ஸ*
அந்த பாக்கியமுள்ள அரஹத்* சம்மாசம்புத்த** பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 01.
# தம்மசக்க பவத்தன சூத்திரம்

**இருபத்திரண்டு உலகங்கள் வரை பரவிய ஆச்சரியமிகுந்த தர்மம்.**

இன்று நாம் கற்பது சம்யுக்த நிகாயம் எனும் புனித நூலில் ஐந்தாம் பாகத்தில் அமைந்துள்ள ஸச்ச சம்யுக்த பகுதிக்குரிய 'தம்ம சக்க பவத்தன' சூத்திரத்தையாகும். இதுதான் புத்த பகவானது முதல் போதனையாகும். புத்த பகவான் சம்புத்த நிலையை அடைந்த பின்னர் ஏனையோரும் இந்த தர்மத்தினை உய்த்துணர வேண்டும் என போதித்த முதல் போதனை இதுவே. இந்த போதனையை இருபத்திரண்டு உலகவாசிகள் செவிமடுத்தனர். அந்த உலகங்கள் தான், இந்த மனித உலகம், ஆறு தேவ உலகங்கள் மற்றும் பதினைந்து பிரம்ம உலகங்கள் என்பனவாகும். புத்த பகவானது முதலாவது போதனையையே இருபத்திரண்டு உலகத்தோர் செவிமடுத்துள்ளனர்.

---

*ஆசை, கோபம், அறியாமை போன்ற மனமாசுகள் அற்ற
**நாற்பேருண்மைகளை சுயமாக உய்த்தறிந்த

## தேவ மனிதர்களின் அகத்தே சுழலும் தர்ம சக்கரம்.

இந்த போதனையின் பெயர் தம்மசக்க என்பதாகும். 'தம்ம' என்றால் உய்த்தறியபட்ட ஞானமாகும். 'சக்க' என்றால் சக்கரமாகும். சக்கரம் சுழலும் இயல்பினை கொண்டதாகும். புத்த பகவானது தர்மமும் அவ்வியல்பினை உடையதாகவே விளங்குகிறது. அதாவது இந்த தர்மம் ஓரிடத்தில் நின்று கொண்டிருக்கும் ஒன்றல்ல. மனிதர்களுடைய உள்ளத்திலே சுழன்று கொண்டிருப்பதாகும். ஆகையால் தான் புத்த பகவானது தர்மம் 'தம்ம சக்க' என அழைக்கப்படுகிறது. புத்த பகவானது முதல் போதனையை தொடர்ந்து இறுதி போதனை வரை அனைத்து போதனைகளும் இவ்வியல்பினை கொண்டதாகவே காணப்படுகிறது.

## மான்களின் அபய பூமியில் தன் முதல் ஐந்து சீடர்களுடன்.

புத்த பகவான் மிக மிக அபூர்வமான, இதுவரை கேட்டிராத விடயங்களை இப்போதனையிலே மொழிந்துள்ளார். இந்த தம்ம சக்க சூத்திரத்தை மொழிவதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? புத்த பகவான் இப்போதனையை ஒரு அபய பூமியிலிருந்தே போதித்தார். இது மான்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு அபய பூமியாகும். இந்த அபய பூமியில் சிறு சிறு ஆச்சிரமங்களை அமைத்து கொண்டு ஐந்து தவசிகள் வசித்து வந்தனர்.

புத்த பகவான் சம்புத்த நிலையை அடைந்து தனது முதல் போதனையை யாருக்காக போதிக்க வேண்டும் என சிந்தித்தார். புண்ணியவர்களே! சித்தார்த்த போதிசத்துவர் தர்மத்தினை உய்த்துணர முயற்சிக்கும் காலத்தில் ஞானமிகுந்த இரு முனிவர்களிடம் வீடுபேறு அடையும் வழிமுறையை அறிந்து கொள்வதற்காக சென்றிருந்தார். இந்த சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவர்களின் பெயர் நினைவிருக்கிறதா? ஆம் ஆலாரகாலாம மற்றும் உத்தக இராமபுத்த எனும் இருவரே அவர்கள். சம்புத்த நிலையை அடைந்த புத்த பகவான் அவர்களிலுருவரும் எங்கிருக்கின்றனர் என பார்த்தார். அவர்கள்

இருவருமே மரணித்துள்ளனர் என்பதனை உணர்ந்தார். அவர்கள் மீண்டும் பிறந்த இடத்தினையும் தேடிப்பார்த்தார். அவர்களிருவரும் தர்மத்தினை செவிமடுக்க முடியாத பிரம்மலோகங்களில் பிறந்திருப்பதனை உணர்ந்தார். அடுத்ததாக புத்த பகவான் இந்த தர்மத்தினை யாருக்காக போதிக்க வேண்டும் என சிந்தித்தார். அப்போது அவருக்கு, சித்தார்த்த போதிசத்துவர் தர்மத்தினை உய்த்துணர முயற்சிக்கும் காலத்தில் தனக்காக ஐந்துபேர் துறவு பூணடிருந்தது நினைவிற்கு வந்தது. அந்த ஐந்து தவசிகளுக்கும் தர்மத்தினை போதிக்க வேண்டும் என நினைத்து அவர்கள் எங்கிருக்கின்றனர் என்று பார்த்தார். வாராணாசியின் இசிபத்தன எனும் மான்களின் அபய பூமியில் இருப்பதனை உணர்ந்து அங்கு வருகை தந்தார். புத்த பகவான் தூரத்தே வருகை தருவதை அந்த ஐந்து தவசிகளும் கண்ணுற்றனர்.

## தவசிகளுக்கும் தவறியது.

பெரும்பாலான மனிதர்களின் சிந்தனை வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது. இந்த ஐந்து தவசிகளது சிந்தனையும் அவ்வாறு குறுகிய மனப்பான்மையுடையதாகவே இருந்தது. புத்த பகவானை கண்ட அவர்கள் தமக்குள்ளே இவ்வாறு பேசிக்கொண்டனர் ‘ஆ.. கௌதமர் வழி தவறிவிட்டார். அத்தகிலமதானுயோகத்தால் (கடுமையாக உடலை வருத்துதல்) மிக தெளிவாக மோட்சத்தினை உய்த்துணரும் உன்னத வாய்பினை தவற விட்டு இப்போது எம்மை தேடி வந்து கொண்டிருக்கிறார்’ என்று. ‘நாம் அவருக்கு பணிவிடை செய்யத்தேவையில்லை. உயர் குலத்தில் பிறந்த ஒருவரென்பதால் ஒரு ஆசனத்தை மாத்திரம் வழங்குவோம். அதற்கு மேல் ஒன்றும் செய்யத்தேவையில்லை’. என்று தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தனர்.

## தவறான கருத்து தன்னையறியாமலே மறைந்து விட்டது.

இவ்வாறு தமக்குள் பேசிக்கொண்டாலும் புத்த பகவான் தம் அருகில் நெருங்க நெருங்க இவர்களது மனம் மாறியது. இவர்கள் தம் கருத்துக்களை மறந்துவிட்டார்கள். ஒருவர் புத்த பகவானின் திருப்பாதங்களை கழுவுவதற்கு நீர்ப்பாத்திரத்தை

தயார் செய்தார். இன்னுமொருவர் அமருவதற்காக சிறந்த ஆசனமொன்றை தயார் செய்தார். ஒருவர் வரவேற்று புத்த பகவானுடைய சீவரம் மற்றும் உணவு பாத்திரத்தை எடுத்து கொண்டார். புத்த பகவான் ஆசனத்தில் அமர்ந்த பின்னர் ஒருவர் சாமரம் வீசினார். அவ்வாறு சாமரம் வீசுவதினால் எமக்கு இது கோடை காலம் என்பதனை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இந்த தம்ம சக்க சூத்தரத்தை புத்த பகவான் போதித்தது ஆடி மாதத்திலாகும். ஆடி மாதம் என்பது கோடை காலத்திற்குரியதாகும்.

**அமிர்தம் கிடைத்தது.**

புத்த பகவான் தனக்கு பணிவிடை செய்யும் அந்த தவசிகளை பார்த்து "எனக்கு அமிர்தம் கிடைத்துவிட்டது. நான் தேடியது எனக்கு கிடைத்து விட்டது. நான் இப்போது அந்த மோட்சம் எனும் அமுதத்தினை அறிவேன்" என மொழிந்தார்.

அவர்கள் சம்புத்தர் என்றால் யாரென்று அறியாதவர்கள். அதனால் முன்னர் சித்தார்த்த போதிசத்துவத்துவரிடம் பேசியதை போல் 'ஆவுசோ' எனும் அடைமொழியை பயன்படுத்தி அழைத்தனர். ஆவுசோ எனக்கூறுவது அக்காலத்தில் தவசிகள் தமக்குள் அழைத்து கொள்ளும் ஒரு வார்த்தையாகும்.

அந்த தவசிகள் புத்த பகவானிடம் ''ஆவுசோ நீங்கள் எம்மோடு இருக்கும் காலத்தில் மிகுந்த வீரியம் கொண்டு அத்தகிலமதானுயோகத்தை பயிற்சி செய்தீர்கள். அவ்வாறு உடலை வருத்தியே உங்களால் மோட்சத்தினை உய்த்துணர முடியவில்லை. ஆனால் நன்றாக உணவினை உட்கொண்டு உடலை வலிமையாக்கிக்கொண்டு எவ்வாறு தர்மத்தினை உய்த்துணர்ந்தீர்கள்?" எனக்கேட்டனர்.

**இன்று போல் அன்றும் தவறான கண்ணோட்டத்துடனே பார்த்தார்கள்.**

இந்த கூற்றின் மூலம் அக்காலத்தில் தர்மத்தினை அதாவது மோட்சத்தினை உறுதி செய்வதற்கு உடலை வருத்த வேண்டும் எனும் எண்ணம் நிலைத்திருக்கிறது, என்பதனை

உணரலாம். அன்று மட்டுமல்ல இன்றளவிலும் இக்கருத்து எம்மிள் பெரும்பாலோருக்கு இருக்கிறதல்லவா? எவராயினும் ஒரு துறவி மிகவும் உடலை வருத்தி வாழ்வாராயின் அவரிடம் ஓடுவார்கள். அவருடைய புறத்தோற்றத்திற்கு ஏமாறுவார்களேயன்றி அவர் என்ன கூறுகிறார்? அவர் கூறும் கருத்து சரியா? பிழையா என்பதனை தேட மாட்டார்கள். முன்பும் அப்படித்தான். ஒருவர் என்ன தர்மத்தினை உய்த்துணர்ந்தார் என்பதனை தேட மாட்டார்கள். அவர் அமரும் ஆசனம், அவர் உண்ணும் உணவு, அவர் அணியும் ஆடை என்பவற்றையே பார்ப்பார்கள். குட்டையான ஒரு ஆசனத்தில் அமர்வாராயின், மறக்கறியோடு மாத்திரம் உணவு உண்ணுபவராயின் அவர் மீது பக்தி கொள்வார்கள். அவர் கூறும் விடயங்கள் எப்படிப்பட்டவையாயினும் பரவாயில்லை. அந்த ஐந்து தவசிகளும் புத்த பகவானையும் அதே கண்ணோட்டத்தினாலயே பார்த்தார்கள். அவர்களுக்கு புத்த பகவானது தோற்றத்தை கண்டதும் மிகப்பெரிய கேள்விகுறி ஒன்று தோன்றியது. ஒருவர் எவ்வாறு அழகாகவும் ஒழுங்காகவும் இருந்து கொண்டு தர்மத்தை எவ்வாறு உய்த்துணர முடியும்? மோட்சத்தை எவ்வாறு உறுதி செய்ய முடியும்? எனும் கேள்வியே அவர்களது அகத்தே எழுந்த கேள்வியாகும்.

**ததாகதர் அரஹத் சம்மா சம்புத்த பகவானேயாவார்.**

புத்த பகவான் அப்போது அந்த தவசிகளை பார்த்து “புத்த பகவான் ஒருவருக்கு ‘ஆவுசோ’ என அழைக்கவேண்டாம்.” எனக்கூறினார். மேலும் புத்த பகவான், **‘ததாகதோ பிக்கவே அரஹங் சம்மா சம்புத்தோ’** “பிக்குக்களே! ததாகத அரஹத் சம்மா சம்புத்த பகவானொருவருக்கு ஆவுசோ என அழைக்க வேண்டாம்”. என்று கூறினார்.

இப்படி கூறியும் மீண்டும் அவர்கள் தோழமையுடன் புத்த பகவானிடம் உறையாடினார்கள். “ஆவுசோ நீங்கள் எவ்வளவு துன்பங்களை உங்களது உடம்பிற்கு கொடுத்தீர்கள். அப்போதெல்லாம் உய்த்துணர முடியாத தர்மத்தினை நீங்கள்

இப்போது எப்படி உய்த்துணர்ந்தீர்கள்?" எனக்கேட்டனர். புத்த பகவான் மீண்டும் அவர்களிடம் "புத்த பகவான் ஒருவருக்கு 'ஆவுசோ' என தோழமையுடன் அழைக்கவேண்டாம். நான் ததாகத புத்த நிலையை அடைந்தவராவேன். நான் மோட்சம் எனும் அமிர்தத்தை உறுதி செய்தவராவேன். என்னால் அதனை உங்களுக்கு போதிக்க முடியும். அதனை செவிமடுங்கள்" எனக்கூறினார். இருப்பினும் அவர்கள் மூன்றாவது முறையாகவும் புத்த பகவானிடம் இதே வினாவை வினவினர். அப்போது புத்த பகவான் "நான் உங்களிடம் ஒரு கேள்வியை கேட்கிறேன். நான் இதற்கு முன்பு ஒருபோதும் நான் சம்புத்த நிலையை அடைந்தேன், என கூறியிருக்கிறேனா?" அதற்கு அவர்கள் இல்லை. என பதிலளித்தனர். அப்படியாயின் நீங்கள் **'ததாகதோ பிக்கவே அரஹங் சம்மா சம்புத்தோ'** "பிக்குக்களே! ததாகதர் அரஹத் சம்மா சம்புத்த பகவான் ஒருவராவார். எனக்கு செவிமடுங்கள்" இவ்வாறு புத்த பகவான் கூறியவுடன் அந்த ஐந்து தவசிகளின் ஒரு தவசிக்கு பகவானின் பேச்சின் மீது நம்பிக்கை ஏற்பட்டது.

### நம்பிக்கை கொண்ட கொண்டஞ்ஞ தவசி

நம்பிக்கை ஏற்பட்ட தவசி யார்? அவர்தான் கொண்டஞ்ஞ தவசியாவார். அந்த தவசி "இவர் அதற்கு முன்பு தர்மத்தினை உய்த்துணர்ந்ததாகவோ அல்லது மோட்சத்தினை உறுதி செய்ததாகவோ ஒருபோதும் கூறவில்லை. அப்படியாயின் இப்போது இவர் கூறும் கூற்று சத்தியமாக இருக்க வேண்டும்" என சிந்தித்தார். புத்த பகவான் "**(ஓதஹத பிக்கவே சோத்தங்)** புண்ணியமிகு பிக்குக்களே! நான் தர்மத்தினை மொழிகின்றேன். நன்றாக செவிமடுங்கள்" என்று கூறினார். அப்போது கொண்டஞ்ஞ தவசி நம்பிக்கையோடு செவிமடுக்க துவங்கினார். அப்படியாயின் பாருங்கள், இது உண்மை என நம்பிக்கை கொண்டு செவிமடுக்கும் போதுதான் யோனிசோ மனசிகாரம் (அறிவால் ஆராயும் திறன்) செய்ய முடியும். கொண்டஞ்ஞ தவசி நம்பிக்கையோடு செவிமடுத்தாலும் ஏனைய நான்கு தவசிகளும் சந்தேகத்துடனே செவிமடுத்தனர். இவ்வாறு அவர்கள் தமது

வாழ்வின் சத்தியத்தை செவிமடுப்பதற்கு தயாராகினார்கள். ஆம்! இதுவரை ஒருபோதும் கேட்டிராத தத்தமது வாழ்க்கை தொடர்பாக செவிமடுப்பதற்கே.

### தர்மத்தினை உய்த்துணருவதற்கு தர்மத்தின் மீது நம்பிக்கை வேண்டும்.

இன்றும் நம்பிக்கையுடன் தர்மத்தினை ஒருவர் செவிமடுப்பாராயின் தர்மத்தினை உய்த்துணருவதற்கு இலகுவாக இருக்கும். ஆனால் தற்காலத்தில் நம்பிக்கையுடன் தர்மத்தினை செவிமடுப்போர் மிகவும் குறைவான எண்ணிக்கையானோரே. அல்லது இல்லை என்றே கூறலாம். நூற்றிற்கு ஐந்து வீதமானோரேனும் நம்பிக்கையுடன் தர்மத்தினை செவிமடுப்பார்கள் எனக்கூற முடியாது. பெரும்பாலோனோர் தத்தமது கருத்துக்களை முதன்மை படுத்தியே தர்மத்தினை செவிமடுப்பதால் தர்மத்தினை உய்த்துணரும் அரிய வாய்ப்பினை இழந்து விடுகிறார்கள். அதற்கு காரணம் அவர்கள் இதுவரை கேட்டிருக்கும் அர்த்தமற்ற கருத்துக்களினாலயே அன்றி அவர்களின் பிழையினால் அல்ல.

### செவிமடுப்பதன் பின்னர் அறிவால் ஆராய வேண்டும்.

ஒருவர் மூட நம்பிக்கைகளை விடுத்து சம்மா திட்டி (தெளிவான பார்வை) ஏற்படும் வண்ணம் தர்மத்தினை செவிமடுப்பது இலகுவானதல்ல. புத்த பகவான் சம்மா திட்டி ஏற்படுவதற்கு இரு காரணிகள் அவசியமென கூறியுள்ளார். சத்தரமத்தினை செவிமடுத்தல் மற்றும் யோனிசோ மனசிகாரம் அதாவது செவிமடுத்த தர்மத்தினை அறிவால் ஆராய்தல் எனும் இரு காரணிகளாகும். அதேபோல் ஒருவர் மூடநம்பிக்கைகளை நம்புவதற்கும் இரு காரணிகள் அவசியமாகும். அவைதான் அதர்மத்தினை செவிமடுத்தலும் அயோனிசோ மனசிகாரம் அதாவது செவிமடுத்த அதர்மத்திற்கேற்ப சிந்தித்தலுமாகும். தற்காலத்தில் நாம் செவிமடுக்கும் பெரும்பாலான விடயங்கள் உண்மையானவையல்ல. புத்த பகவானது தர்மத்தினை செவிமடுக்க கிடைக்கும் வாய்ப்பானது மிக மிக அரிதாகவே கிடைக்கும். பெரும்பாலாக நாம் வாசிக்கின்ற விடயங்கள் மூலமாகவோ அல்லது கேட்கும் விடயங்கள் மூலமாகவோ

யதார்தத்தை உணர முடியுமா? இல்லை.

வாழ்வின் யதார்த்தம் தொடர்பான விடயங்களை நாம் புத்த பகவானது தர்மத்தினால் மாத்திரமே அறிந்து கொள்ளலாம். இன்று எமக்கு ஒரே புகலிடமாக அமைவது, முழுமையாக போதிக்கப்பட்ட புத்த பகவானது பரிபூரணமான தர்மத்தினாலே ஆகும். ஆனால் இன்று எவ்வித சிரமத்தினையும் மேற்கொள்ளாது எமக்கு அதர்மத்தினை செவிமடுக்க கிடைப்பதால் பெரும்பாலானோர் தத்தம் மூடகருத்துக்களில் முடங்கி இருக்கின்றனரே தவிர நம்பிக்கையோடு தர்மத்தினை செவிமடுக்க தவறிவிடுகின்றனர். அதனால் தர்மத்தினை அவர்கள் செவிமடுத்தாலும் அதனை உய்த்துணர முடியாது. அவ்வாறு ஒருவர் தர்மத்தினை உய்த்துணர வேண்டுமாயின் அவர் தான் செவிமடுத்த தர்மத்தினை அறிவினால் ஆராய வேண்டும். இன்று அவ்வாறு தம் அறிவை பயன்படுத்தி தர்மத்தினை ஆராய்வோர் மிக மிக குறைவு. அவ்வாறு அறிவால் ஆராய்வோர் இருந்தால் இன்றளவிலும் இந்த தர்மத்தினை உய்த்துணர முடியும். இவ்வாறு நடக்காததற்கு காரணம் அவர்களது பலவீனமல்ல. அவர்களது ஊழ்வினையினாலுமல்ல. மாறாக அவர்கள் தர்மத்தினை செவிமடுத்த முறையிலேயே தவறுள்ளது. இவர்கள் அத்தவறை நிவர்த்தி செய்து தர்மத்தினை நாடிவரும் போது வெற்றிபெருவார்கள்.

**அரஹத் தேரரது மண்டையோட்டின் வித்தியாசம்.**

ஒருநாள் அந்தணனொருவர் புத்த பகவானை சந்திக்க வந்தார். அவரது பெயர்தான் 'வங்கீச'. பாரதத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒருவர். அவருக்கு வித்தியாசமான திறமை ஒன்றிருந்தது. அதுதான் ஒருவர் மரணித்த பின்னர் மரணித்தவரது மண்டையோட்டினை அவருக்கு கொண்டுவந்து கொடுத்தால் அவர் ஒரு சுலோகத்தினை கூறி அதனை தட்டுவார். அதன்மூலம் மரணித்தவர் எங்கு பிறந்தார், என அவரால் கூற முடியும். இதுவே அவரது விசேட திறமையாகும். மக்களும் அவர்களது உறவினர்கள் மரணித்த பின்பு அவர்களது மண்டையோடுகளை

வங்கீச பிராம்மணரிடம் கொடுப்பார்கள். அவர் அதனை தட்டி அவர்கள் எங்கு பிறந்தார்கள் எனும் விபரங்களை மக்களுக்கு தெரிவிப்பார்.

இவர் புத்த பகவானை காணச்சென்று புத்த பகவானிடம் தனது திறமையை கூறினார். புத்த பகவான் மனமாசுகளோடு மரணித்த ஒருவரது மண்டையோடு ஒன்றினையும் மனமாசுகளை அழித்த அரஹத் தேரர் ஒருவரது மண்டையோடு ஒன்றினையும் கொணர்வித்தார். முதலில் மனமாசுகளோடு மரணித்தவரது மண்டையோட்டினை வங்கீச பிராம்மணரிடம் கொடுத்து அது தொடர்பாக எதிர்வுகூறலை கூறுமாறு கூறினார். வங்கீச அந்தணர் அதனை தட்டி மரணித்தவர் எங்கு பிறந்தார் என சரியாக கூறினார். புத்த பகவான் அவரிடம் மனமாசுகளை அழித்த அரஹத் தேரர் ஒருவரது மண்டையோட்டினை கொடுத்து அது தொடர்பாக எதிர்வுகூறலை கூறுமாறு கூறினார். வங்கீச அந்தணர் சுலோகத்தை சொல்லி அதனை தட்டிப்பார்த்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அவரால் அதனை கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் புத்த பகவானிடம் “பகவானே! எனக்கு இதுவரை இவ்வாறு தவறியதில்லை. எனக்கென்றால் இவர் பிறந்த இடம் தொடர்பாக எதுவும் கூற முடியாது.” எனக்கூறினார்.

## வெற்றி பெறுவதற்கு ஞானமிருந்தது.

புத்த பகவான், “இதனை உங்களால் கூறவும் முடியாது. உங்களால் புரிந்து கொள்ளவும் முடியாது. இது முனிவர்களது தர்மமாகும்” என மொழிந்தார். அப்போது வங்கீச அந்தணர் “பாக்கியமுள்ள பகவானே! எனக்கும் அந்த முனி தர்மத்தினை கற்று தருவீராக” என வேண்டினார். புத்த பகவான் அவருக்கு அமிர்த்தத்திலும் இனிய சுவை மிகுந்த தர்மத்தினை மொழிந்தருளினார். வங்கீச அந்தணர் தனது பழைய கருத்துக்களையும் பழைய திறமைகளையும் கைவிட்டார். மனதினை ஒன்றிணைத்து தர்மத்தினை செவிமடுத்தார். அதன் விளைவாக புத்த பகவான் மீது அசைக்க முடியாத திடகாத்திரமான நம்பிக்கையுடன் கூடிய பக்தி (சத்தா) கொண்டு

புத்த பகவானிடத்தில் பிக்குவாக துறவு பூண்டார். உபசம்பதா சீலத்தினையும் பெற்றுக்கொண்டார். குறுகிய காலத்தலேயே உன்னதமான அரஹத் நிலையை அடைந்தார்.

**பெறுமதியானதை தெரிவு செய்வதற்கு அறிவு வேண்டும்.**

வங்கீச அந்தணர் துறவு பூண்டதன் பின்னர் சக பிக்குமார்களுக்கு மண்டையோட்டிற்கு தட்டும் போது கூறும் மந்திரத்தினை அறிய வேண்டும், என்ற தேவை இருக்கவிலை. அதற்கு காரணம் என்ன? அவர்களுக்கு அதனை விட பெறுமதியான விடயமாக தர்மம்தான் இருந்தது. அவர்கள் தர்மத்தினை ஒப்பற்ற சிறந்த விடயமாக அறிந்திருந்தனர். அந்த தர்மத்தினை பயிற்சி செய்யும் ஒருவருக்கு இம்மாதிரியான விடயங்கள் பெறுமதியற்றவையாகும். தற்காலத்தில் இதுபோன்ற விசேடமான திறமை இருக்கும் ஒருவர் இருந்தாரெனில் தர்மத்தினை விடுத்து அனைவரும் அவர் பின்னாலே ஓடுவார்கள். பாருங்கள், இன்று இந்நிலமை இல்லையா? இருக்கிறது. பாருங்கள் இன்றும், தூய்மையான தர்மம் இருக்கும்போதே எத்தனையோ பேர் மூடநம்பிக்கைளின் பின் ஓடுகிறார்கள் அல்லவா?. இதனிலிருந்து இன்றைய சமூகத்தில் பெறுமதியானதை இணங்கண்டு கொள்பவர்கள் எவ்வளவு குறைவான எண்ணிக்கையானோர் என்பதனை உணரலாம்.

அங்கிருந்த எந்த பிக்குவும் அவரிடம் அந்த மந்திரத்தை கேட்டு வரவில்லை. அனைத்தையும் விட பெறுமதியான விடயமாக தர்மத்தினை கருதினார்கள். அதனால்தான் அந்த காலத்து மக்கள் விரைவாக தர்மத்தினை உய்த்துணர்ந்து கொண்டனர். இன்றும் எவரேனும் ஒருவர் முழுமையான ஈடுபாடுடன் தர்மத்தினை செவிமடுப்பாராயின் அவருக்கும் தர்மத்தினை உய்த்துணர முடியும். ஆனால் தற்காலத்தில் அதற்கான சந்தர்ப்பங்கள் மிக மிக குறைவாகவே இருக்கிறது. ஏனைனில் புத்த தர்மம் எனும் பெயரில் பல்வகையான மூடகருத்துக்கள் இந்த சமூகத்தில் பரவி இருக்கிறது, மட்டுமல்லாது புத்தகங்களும் வெளியிடப்படுகிறது. புத்த பகவானது தர்மத்தின் சாரத்தை உணர்ந்த ஒருவருக்கு

ஏனைய மூட கருத்துவாதங்களையும் மூட நம்பிக்கைகளையும் விடுத்து தர்மத்தினை பின்பற்ற முடியும்.

**காம சுகத்தின் மீது பற்றுடன் வாழ்வதானது கீழ்தரமானதாகும்.**

ஐவகை தவசிகளும் புத்த பகவான் கூறப்போகும் விடயத்தினை செவிமடுப்பதற்கு மிகவும் ஆவலாக அமர்ந்திருந்தனர். புத்த பகவான் மொழிகிறார். **'த்வே மே பிக்கவே அன்தா பப்பஜிதேன ந சேவிதப்பா'** பிக்குக்களே! துறவிகள் பின்பற்ற கூடாத இரு அந்தங்கள் உண்டு. துறவு பூண்டோர் இவ்விரு அந்தங்களையும் பழக்கப்படுத்த கூடாது. முதலாவது அந்தம் என்ன? **'யோசாயங் காமேசு காமசுகல்லிகானுயோகோ'** அதாவது துறவிகள் காம சுகத்தில் பற்றுடையவராக காம சுகத்தில் திளைத்து வாழ்வது உசிதமல்ல. அவ்வாறு வாழ்வாராயின் அது **'ஹீனோ'** அதாவது மிக மிக கீழ்தரமான விடயமாகும். **'கம்மோ'** இழிவானதாகும். **'போதுஜ்ஜனிகோ'** ஞானமுள்ளோரது பாராட்டிற்குட்படாததாகும். **'அனத்தசங்ஹிதோ'** பயனற்றதாகும்.

**காமத்தின் மீது பற்றுக்கொள்வதானது இழிவானதாகும்.**

காமத்தின் மீது பற்றுகொண்டு வாழ வேண்டாம் எனக்கூறுவதன் அர்த்தம் யாது? இங்கு காமத்தின் மீது பற்றுகொண்டு வாழ்தல் எனக்கூறப்படுவது உருவங்கள், சப்தங்கள், நறுமணங்கள், சுவைகள், உடலுணர்வுகள், எனும் இவ்வைந்து விடயங்கள் மீது மிகுந்த பற்றோடு வாழ்தலாகும். துறவிகளுக்கு, இவ்வாறான காமத்தின் மீது பற்றுடன் வாழ வேண்டாம் எனக்கூறக்காரணம் யாது? சற்று சிந்தித்து பாருங்கள். மக்கள் ஏனைய உயிர்களை கொல்லுதல், களவு எடுத்தல் தவறான காம செயலில் ஈடுபடுதல், பொய் கூறுதல், மதுபானம் மறறும் போதைபொருள் உபயோகித்தல் போன்ற இழிவான கீழ்த்தரமான விடயங்களை செய்வது காமத்தின் மீது கொண்டு கொண்ட பற்றுதலின் காரணமாகவல்லவா? வீடுவாசல், நிலம் என்பனவற்றிற்காக சண்டையிட்டு கொண்டு பில்லி சூனியம் வைத்து கொண்டு இருப்பதற்கு காரணம் என்ன? காம சுகத்தின் மீது கொண்ட பற்றுதலேயாகும்.

அண்மையில் நேபாள அரச குடும்பத்திற்கு நடந்த சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? மகனுடைய காதலுக்கு மறுப்பு தெரிவித்ததால் சினம் கொண்ட மகன் தன் தாய் தந்தையரையும் ஏனையோரையும் கொலை செய்து தானும் தற்கொலை செய்து கொண்டான். பாருங்கள், இந்த அசர குமரன் ஆனந்தரிய பாவத்தினைழு செய்து கொண்டானல்லவா? இப்போது இந்த அரச குமரன் நரகத்திலேயே பிறந்திருப்பான். அதற்கு காரணம் என்ன? காமத்தின் மீதான பற்றுதானே! அது இழிவான விடயமல்லவா? போதுஜ்ஜனருக்கே உரித்தானதல்லவா? இந்த அரச குமரன் பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொண்டவராக இருந்திருப்பின் இந்த விபரீதம் ஏற்பட்டிருக்காதல்லவா? இதுதான் வேறுபாடு.

காமத்தின் மீது பற்றுதலை கொண்டவராக இருப்பதனால் ஒருவர் எவ்வளவு துன்பத்தினை அனுபவிக்கிறார் என்பதனை அவதானித்து பாருங்கள். மனிதனானவன் காம சுகத்தின் மூலமாக தேடும் விடுதலை ஒரு போதும் கிடைக்காது. இந்த சத்தியத்தை நாம் புரிந்துணர வேண்டும்.

**இல்லறத்தார் அதன் ஆபத்தினை உணர்ந்தோராக இருக்க வேண்டும்.**

நாம் இவ்வாறு நினைத்து பார்ப்போம், காம சுகத்தின் மீது பற்றுடைவராக வாழ்ந்த ஒருவர் மரணிக்கும் தருவாயில் இருக்கிறார். என்று. அவரால் மரணிக்கும் தருவாயில் தான் அனுபவித்த காம சுகத்தினை விட்டுச்செல்ல விருப்பம் இருக்குமா? இல்லை. காம சுகத்தினையே தேடியலையும் ஒருவருக்கு எவ்வளவோ பாவங்கள் செய்ய நேரிடும். பொறாமையினாலும் கஞ்சத்தனத்தினாலும் வாழ வேண்டும். இங்கு கஞ்சத்தனம் என்பது தமது சொத்துக்களின் மீது போன்றே ஏனையோரது சொத்துசுகங்களின் மீதும் பேராசை கொண்டு வாழ்தலாகும். தன்னுடைய சொத்து சுகங்களை ஏனையோருக்கு பகிர்ந்தளிப்பதுவுமில்லை. தான் அனுபவிப்பதுவுமில்லை. நாய் வைக்கோலை சாப்பிடாது. சாப்பிடும் எருமைக்கும் இடம் கொடுக்காது. என்ற பழமொழியை கேள்விபட்டிருப்பீர்களல்லவா?

அதுபோலத்தான் இந்த கஞ்சத்தனமும். இதற்கெல்லாம் காரணம் தான் காம சுகத்தின் மீது மிகுந்த பற்றுடன் வாழ்தலாகும். புத்த பகவான், முக்தியடைய விரும்பும் துறவி இந்த காமத்தினை துறந்துவிட வேண்டும் எனவும் இல்லற வாழ்வினை வாழும் ஒருவர் அந்த காமத்தின் ஆபத்தினை உணர்ந்த வண்ணம் வாழ வேண்டும் எனவும் மொழிந்துள்ளார்.

எமக்கு தெரியும் எமது பாட்டிமார்கள் விடிந்தவுடனேயே என்ன செய்வார்கள்? ஊன்றுகோலை எடுத்து கொண்டு தோட்டத்திலுள்ள தென்னை மரங்களையும் பலா மரங்களையும் வலம் வருவார்கள். ஏன்? மரத்திலிருந்து விழுபவை யாரேனும் எடுத்து செல்வார்களோ? என்று பார்ப்பதற்காகத்தான். சிலர் வயது முதிர்ச்சியடையும் போது முன்னரை விட அதிகமாகவே உலோபத்தனத்தால் திளைக்கிறார்கள். சிறு சிறு விடயங்களுக்கும் மிகவும் ஆசை கொண்டவர்களாக இருக்கிறார்கள். எனக்கு தெரிந்த ஒரு வீட்டில் ஒரு பாட்டி இருந்தார். ஒரு நாள் இந்த பாட்டியிடம் அவளது பேத்தி “பாட்டி உங்களுக்கு சாப்பிடுவதற்கு என்ன விருப்பம்?” எனக்கேட்டாள். இப்போது பாட்டியிடம் இதுவரை தோன்றியிராத ஆசை தோன்றியது. பாட்டி “உரொட்டி சாப்பிட வேண்டும்” எனக்கூறினாள். சிறிது காலத்திற்கு பின்னர் இந்த பாட்டி நோயுற்றாள். நோயுற்ற பின்னரும் அந்த பாட்டி தன் பேத்தி உரொட்டி கொண்டுவரும் வரை பார்த்து கொண்டிருந்தாள். அதை பற்றியே பேசிக்கொண்டிருந்தாள். ஆனால் பேர்த்தி உரொட்டி கொண்டுவரவில்லை. அந்த பாட்டியால் அந்த ஆசையை பூர்த்தி செய்து கொள்ள முடியாது போய்விட்டது. அவள் அதை சிந்தித்து கொண்டே மரணித்து பிரேதலோகத்தில் பிறந்தாள். அப்படியாயின் இந்த ஆசை எம்மை எங்கு வரை கொண்டு செல்கின்றது என்று எம்மால் உணர முடிகிறதல்லவா? அதனை புத்த பகவான், (அனரியோ) உன்னத நிலைக்கு உட்படுத்தாதது. (அனத்த சங்ஹிதோ) அர்த்தமற்றவையாகும். என மொழிந்தார். இந்த தர்மத்தினை அந்த பாட்டி அறிந்திருந்தால் இவ்வாறானதொரு விபரீதம் ஏற்பட்டிருக்காதல்லவா?

**உடலை வருத்துவதால் உன்னதமடைய முடியாது.**

அடுத்ததாக புத்த பகவான், **'யோசாயங் அத்தகிலமதானுயோகோ துக்கோ அனரியோ அனத்தசங்ஹிதோ'** என்று மொழிந்தார். அதாவது உடலை வருத்துதல். உடலை பல்வேறு துன்பங்களிற்குட்படுத்தல் போன்றவை மென்மேழும் துன்பத்தினையே தரும் விமோட்சனமல்ல. உன்னத நிலையை அடைய முடியாது (அனரியோ) அர்த்தமற்றதாகும். (அனத்தசங்ஹிதோ). அக்காலத்தில் விமோட்சனம் அடைவதற்காக மக்கள் தம்முடைலை துன்புறுத்தியுள்ளார்கள். அக்காலத்தில் தம் உடலை வருத்தியாவது முக்தியடைய வேண்டும், அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுபடவேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலோனர்கள் மத்தியில் இருந்தது. இவ்வாறாக மக்கள் முக்தியை தேடும் காலத்தில்தான் உலகிற்கு புத்தர்கள் தோன்றுவார்கள். அக்காலத்தில் சிலர் முக்தியடையும் வழி தெரியாது பல மூட நம்பிக்கைளுடன் கூடிய விரதங்களை கடைபிடித்து வந்துள்ளனர்.

**உடலை வருத்துவது பயனற்றது என்பதனை உணரும் போது அதனை கைவிடுவதற்கு அறிவு வேண்டும்.**

புத்த பகவான் போதித்த ஒரு போதனையில் இரு நண்பர்களை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களிருவரதும் பெயர்கள் முறையே 'சேனிய' மற்றும் 'புண்ண' ஆகும். இவர்களிலிருவரும் ஒருநாள் புத்த பகவானை சந்திக்க வந்து புத்த பகவானிடம் "பாக்கியமுள்ளவரே! நாமிருவரும் நீண்ட காலமாக ஒரு விரதத்தை அனுஷ்டிக்கிறோம், அதாவது நான் நாயை போல் வாழ்வதால் முக்தியடைவேன் எனும் நம்பிக்கையில் நாயை போன்று நாயின் நடத்தைகளோடு வாழ்ந்து வருகிறேன். எனது நண்பரான இவர், அதே நம்பிக்கையில் எருதினை போல் வாழ்கிறார். நாம் பிறவிப்பெருங்கடலிருந்து விடுதலையடைவதறகாகவே இவ்வாறு செய்கிறோம். எமது இந்த நடவடிக்கையை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?" என்று கேட்டனர்.

அதற்கு புத்த பகவான் "நாம் இவ்விடயத்தினை தவிர்த்து வேறு

விடயத்தினை பற்றி பேசுவோம்" என்று கூறினார். அவ்விருவரும் மீண்டும் அதே கேள்வியை கேட்டனர். அப்போதும் பகவான் அதே பதிலை கூறினார். ஆனால் மூன்றாவது முறையாகவும் அதே கேள்வியை அவர்களிருவரும் கேட்டனர். அப்போது புத்த பகவான், "நான் வேறு விடயம் தொடர்பாக பேசுவோம் எனக்கூறும் போதும் நீங்கள் அதே கேள்வியையே கேட்பதால் இப்போது நான் கூறுகிறேன். இப்போது நீங்கள் உண்பது, பருகுவது, உறங்குவது உல்லாமே நாயினை போன்றுதானே.. நீங்கள் அனுஷ்டிப்பது நாய் தவசாகும். நீங்கள் உள்ளத்தினால் நினைத்து கொண்டு அதை வார்த்தையினால் பழக்கப்படுத்தி கொண்டு உடம்பினால் பழக்கப்படுத்துவதும் அதனையே. இதனால் உங்கள் மனம் மீண்டும் நாயாக பிறப்பதற்காகவே தயாராகும். நீங்கள் இவ்வாறான விரத்தினை மேற்கொள்வதால் விமோட்சனத்தினையும் எதிர்பார்க்கிறீர்கள். இது பிழையாகும். அது ஒரு மூடநம்பிக்கையாகும். இவ்வாறான மூட நம்பிக்கைகள் கொண்ட ஒருவருக்கு இருவகையான பிறப்புக்களே உள்ளது. ஒன்று நரகத்தில் பிறத்தல் அல்லது மிருகலோகத்தில் பிறத்தல் எனும் இரண்டுமாகும்." என்று மொழிந்தார். இவர் இதனை செவிமடுத்ததும் அழுது புலம்பினார். அவருடைய நண்பருக்கும் இதே விடைதான் கிடைத்தது. அவர்களிருவரும் தாம் இதுவரை பழக்கப்படுத்திய நாய் மற்றும் எருதுக்களை போல் வாழும் விரதங்களை விடுத்து புத்த சாசனத்திலே துறவு பூண்டார்கள். துறவு பூண்டு சிறிது காலத்திலேயே அனைத்து மனமாசுகளையும் அழித்து உன்னதமான அரஹத் நிலையை அடைந்தார்கள்.

**தர்மத்தினை போல் தோன்றும் ஆனால் தர்மமல்லாத விடயங்களை ஏற்றுக்கொண்டால் அழிவுதான்.**

இதிலிருந்து நாம் ஒரு விடயத்தினை உணரக்கூடியதாக உள்ளது. அதுதான் ஒருவருக்கு உன்னதமான அரஹத் நிலையை அடையக்கூடிய புண்ணியம் இருந்தாலும் அவர் பிழையான நம்பிக்கைகளை கொண்டிருந்தால் அவரின் நிலை துர்ப்பாக்கியமானதென்பதாகும். தர்மமல்லாததை தர்மம் என

நினைத்து அதன் வழி வாழும் எத்தனை மக்கள் வீடுபேறு அடையும் பாக்கியத்தை இழந்து விடுகிறார்கள், என்பதனை இப்போது எம்மால் உணரக்கூடியதாக உள்ளதல்லவா? தற்காலத்தில் எத்தனையோ பேர் அதர்மத்தினை தர்மம் என்று ஏற்றுக்கொண்டு தர்க்கங்கள் செய்து வாதங்கள் செய்து தவறான கருத்துக்ளை கொண்டு அவற்றை ஏனையோர் மத்தியில் பரப்பச்செய்து எவ்வளவு பாவங்களை சேர்த்து கொள்கிறார்கள்? இவ்வாறான தவறான வழியில் செல்வது தர்மத்தினை உய்த்துணரக்கூடிய திறமையை உதறித்தள்ளியல்லவா?

புத்த பகவான் இவ்வாறாக உடலை வருத்தி செய்யும் விரதங்கள், தவங்கள் என்பன **'துக்கோ'** துன்பமானதாகும். **'அனரியோ'** அனார்யமானது ஒருவரை உன்னத நிலைக்கு உட்படுத்தாதது. **'அனத்தசங்ஹிதோ'** அர்த்தமற்றதாகும்.

**சுகபோகங்கள் மத்தியில் வாழ்வினை உய்த்துணர முடியாது.**

இல்லற வாழ்வினை வாழும் போது சித்தார்த்த இளங்குமரன் உயர்ந்த சுகபோகங்கள் மத்தியிலே வாழ்ந்தார். அவர் ஒர அரசகுமரன். மிகவும் சொகுசான வாழ்வையே அவர் வாழ்ந்தார். மூன்று பருவங்களுக்கு ஏற்றாற் போன்ற மூன்று மாளிகைகளில் வசித்தார். பருவங்கள் முடிவுறும் வரை மாளிகையை விட்டு கீழிறங்கியத்தில்லை. உலகிலேயே அழகு மிகுந்த மங்ககையே தனது மனைவியாக கொண்டிருந்தார். சித்தார்த்த குமரன் இவ்வாறான சுகபோகமான வாழ்க்கையையே துறந்தார். அவ்வாறில்லாது சாதாரண ஒரு குடும்பத்திலிருந்து சித்தார்த்தன் துறவு பூண்டிருந்தால் உலகத்தோர் 'உண்ண உணவில்லாததால்தான் இவர் துறவு பூண்டிருக்கிறார்' என ஏளனம் செய்திருப்பார்கள். குறைகளை கூறுவதற்காகவே காத்துகொண்டிருப்பது சமூகத்தின் இயல்புதானே!. தற்காலத்திலும் அப்படிப்பட்டோர்கள் இருக்கிறார்கள் தானே. 'புத்த சமயத்தில் துன்பத்தினை பற்றி மாத்திரமே கூறப்படுகிறது. அசுபத்தினையே கூறிக்கொண்டிருக்கிறார்கள்'. என்று கூறும்

முட்டாள்கள் இன்றும் இருக்கிறார்கள் தானே!. தர்மம் என்றால் என்னவென்றே அறியாத மூடர்கள் தான் இவ்வாறு கூறுவார்கள்.

சித்தார்த்த குமரன் சுகபோகங்களை அனுபவித்தது போன்று இன்று இவ்வுலகில் யாரும் சுகபோகங்களை அனுபவித்திருக்க் மாட்டார்கள். சித்தார்த்த குமரன் இந்த சுகபோகங்களில் எவ்விதமான அர்த்தமுமில்லை என்பதனை உணர்ந்தார். இந்த சுகபோகங்களை அனுபவிப்பதனால் வாழ்வின் யதார்த்தத்தினை உணர முடியாது. இந்த சுகபோகங்ளையும் மீறிய ஏதோ ஒன்று இவ்வாழ்க்கையில் உள்ளது என சிந்தித்து அவர் அனைத்து சுகபோகங்களையும், தமக்கு கிடைக்கவிருந்த அரச பதவியையும் துறந்தார்.

### உடலை வருத்துவதால் முக்தி அடைய முடியாது.

சுகபோகம் எனும் அந்தத்தினை துறந்து அடுத்த அந்தத்தினை பின்பற்ற துவங்கினார். அடுத்த அந்தம் எது? அதுதான் தனது உடலை தானே வருத்துவது. அதுதான் அத்தகிலமதானுயோகம் என அழைக்கப்படுவது. அதன் முடிவினையும் காணும் வண்ணம் அதனை பழக்கப்படுத்தினார். மரணத்தின் ரணம் உணரும் வண்ணம் அதனை பழக்கப்படுத்தினார். மரணிக்கும் நிலை வந்தபோதுதான் அதனை துறந்தார்.

### புத்த பகவானை முன்மாதிரியாக கொண்ட அறிவாளிகள்

புத்த பகவான் சன்சாரத்தில் நீண்ட காலமாக சம்புத்த நிலையை அடைவதற்காகவே வீரியம் செய்தவர். அப்படியிருக்க அவர் ஏன் மோட்ச வழியை தேட செயற்பாட்டில் ஈடுபட்டார். பிரார்த்தனை செய்து கொண்டிருந்திருக்கலாமே..! இதுதான் அறிவுள்ளோர்களின் தேடுதலின் இலட்சணம். தனது குறிக்கோளை அடைவதற்காக முயற்சி செய்வார்கள். வீரியம் செய்வார்கள். செயற்படுவார்கள்.

புத்த பகவானது மனிதாபிமானம் தொடர்பான செயற்பாடுகளை கூறுகையில் எனக்கு ஒரு சம்பவம் நினைவு வருகிறது. புத்த சாசனத்தின் ஆரம்ப காலகட்டத்தில் துறவு பூண்டோர்கள் சாதாரண

மக்கள் அல்ல. அரச குடும்பத்தினர் செல்வந்த குடும்பத்தினர் போன்றோரேயாவர். உங்களுக்கு நினைவிருக்கிறதா? புத்த பகவான் கபிலவஸ்து நகரிற்கு வருகை தந்தபோது சாக்கிய மற்றும் கோலிய எனும் இரு இராஜ வம்சங்களிலிருந்தும் முறையே ஒரு குடும்பத்திலிருந்து ஒருவர் என்ற எண்ணிக்கையின் அடிப்படையில். ஆயிரம் அரச குமரர்கள் துறவு பூண்டனர். இந்த அரச குமரர்கள் துறவறம் செய்தது வாழ்வதற்கு வேறு வழியில்லாமலா? இல்லை. அவர்களது பெற்றோர்கள் ‘மகனே நீ துறவறம் செய்துகொள். இந்த பயங்கரமான சன்சார பயணத்திலிருந்து மீள்வதற்கு முயற்சி செய்’ என்று கூறி வழியனுப்பி வைத்தார்கள். அவர்களும் உன்னதமான துறவறத்தை மேற்கொண்டார்கள். பெரும்பாலானோர் அனைத்து துன்பங்களிலிருந்தும் நிரந்தரமாகவே நீங்கிவிட்டார்கள். அக்காலத்தில் ஒவ்வொரு குடும்பங்களிலிருந்தும் ஒருவராவது துறவு பூணுவது வழக்கமாக இருந்தது.

### சிலர் சீவரத்திற்கு ஏமாறினார்கள்.

அக்காலத்தில் பிக்குமார்கள் ஓரிரு சீவரத்தினால் திருப்தியடைந்திருந்தார்கள். இப்படியிருக்கும் போது மழையினால் நனைந்து வெயிலினால் காய்ந்து போன உக்கிய சீவரங்களை தரித்திருந்த பிக்குமார்களிடம், இல்லறத்தோர் சீவரங்களை தானமளித்தார்கள். அதனை ஏற்றுக்கொள்ளுமாறும் புத்த பகவான் அனுமதியளித்தார். அதனால் நேர்ந்தது என்ன? அரச குலத்திலிருந்து துறவு பூண்டவர்களல்லவா? தாய் என் மகனுக்குதானே என்று ஒரு சீவரத்தை தானமளித்தாள், தந்தையும் ஒன்று தானமளித்தார். இப்போது எத்தனை சீவரங்கள் ? இரண்டு. அதுமட்டுமல்லாது அக்கா, அண்ணா, தம்பி, தங்கை, மாமா, மாமி என அனைத்து உறவினர்களும் தானமளித்தார்கள். கிடைத்த சீவரங்களோ தன்தலைக்கும் மேல் உயர்வாக இருக்கிறது. வீடு, வாசல், மனைவி, மக்கள், தம் பதவிகள் என அனைத்தையும் துறந்து துறவியான துறவிகள் சீவரங்களினால் துன்பத்திற்குள்ளாகினார்கள். இந்த பிக்குமார்கள் எங்கு சென்றாலும் அந்த சீவரங்களை

பொதி செய்து தலையில் சுமந்தபடியே செல்ல நேர்ந்தது. மோட்சமடைய வேண்டும் என அனைத்தையும் துறந்த துறவிகள் சீவரத்தில் சிக்கி கொண்டார்கள். இவர்கள் தர்மத்தினை உய்த்துணர்ந்தவர்கள் அல்ல. தர்மத்தினை பயிற்சி செய்பவர்களாவர். பரீட்சை எழுதுவோர்கள் சிலவேளைகளில் சித்தியடையாமல் இருப்பதில்லையா? ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக கற்பதற்கு எடுக்கும் முயற்சிகளில் சிலர் தோல்வியடைவதில்லையா? அதேபோன்றுதான் இவர்களும். மோட்சமடைய வேண்டும் என அனைத்தையும் துறந்தவர்களும் ஒரு சிறு விடயத்தினால் தோல்வியடைந்தார்கள். இன்றும் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றதல்லவா?

## புத்த பகவான் கருணை மேற்கொண்டு கூறிய தீர்வு

இந்த பிக்குமார்கள் சீவரங்களை தலையில் சுமந்தபடி அங்குமிங்கும் செல்வதனை கண்ணுற்ற மகா கருணை படைத்த புத்த பகவான் அனைத்தையும் துறந்து சிறு விடயத்தினை கைவிட முடியாமல் இருப்பதானது இவர்களுக்கு பெரும் அனர்த்தத்தையே உருவாக்கும் என்று சிந்தித்தார். இவர்கள் உபயோகிக்கும் சீவரங்களையும், புதிதாக சீவரங்களை ஏற்றுகொள்வதையும் வரையறுக்க வேண்டும் என புத்த பகவான் முடிவு செய்தார்.

பாருங்கள் புண்ணியவர்களே! சம்புத்த பகவான் ஒருவரது மகா கருணையை. சாதாரண ஒருவரது உணர்ச்சிகளை கருணையை அடிப்படையாகக்கொண்டே புத்த பகவான் பார்த்தார். புத்த பகவான் மிகவும் குளிர்ச்சி பொருந்திய நள்ளிரவு வேளையில் சீவரத்தினுள் அணியும் அந்தனம் எனக்கூறப்படும் ஒரு ஆடையை மட்டும் அணிந்து கொண்டு வெட்ட வெளியில் அமர்ந்திருந்தார். மிகவும் குளிராக இருப்பதனை உணர்ந்தார். அதன் பின்னர் அதன் மேல் தனி சீவரத்தினையும் போர்த்திக்கொண்டார். ஆனாலும் அதிக குளிராக இருப்பதனை உணர்ந்தார். அதன் பின்னர் அதன் மேல் இருசீவரங்களுக்கு போதியளவான துணியை ஒன்றாக இணைத்த சீவரத்தினை (தெபட்ட

சீவரம்) போர்த்தி கொண்டார். அதனை தரித்த பின்பு குளிர் குறைந்ததை உணர்ந்தார். அன்றைய இரவு முழுமையாக புத்த பகவான் இதனை பரீட்சித்து பார்த்தார். மறுநாள் பகவான் ஒரு முடிவுக்கு வந்தார். தன் சீடர்களை ஒன்றுகூடுமாறு பணித்தார். அனைவரும் ஒன்றுகூடினர். புத்த பகவான் தன் சீடர்களிடம் "நான் உங்களிடம் இதற்கு முன்பு இல்லறத்தோர் தானமளிக்கும் சீவரங்களை ஏற்றுக்கொள்ளுமாறு பணித்திருந்தேன். ஆனால் பெரும்பாலானோர் அதன் வரையறையை அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். நான் நேற்று இரவு குளிரில் அந்தனத்தினை மாத்திரம் அணிந்த வண்ணம் திறந்த வெளியில் அமர்ந்திருந்தேன். ஆனால் அவ்வாடையை மாத்திரம் அணிந்திருப்பதால் குளிரிலிந்து மீள முடியாது. அதன் பின்பு நான் அந்தனத்துடன் தனி சீவரத்தினையும் போர்த்தியபடி அமர்ந்திருந்தேன். அதனை மாத்திரம் போர்த்தியபடி இருப்பதால் குளிரிலிந்து மீள முடியாது. அதன் பின்னர் நான் அந்தனம், தனி சீவரம் மற்றும் தெபட்ட சீவரத்தினையும் போர்த்திய படி குளிரில் அமர்ந்திருந்தேன். அப்போது குளிரிலிருந்து உடலை பாதுகாத்து கொள்ள இந்த மூன்று சீவரங்களால் இயலுமானதாக இருந்தது. இந்த மூன்று சீவரங்களும் ஒருவருக்கு போதியளவானதாக இருக்கிறது. எனவே இதன் பின்னர் மூன்று சீவரங்களுக்கு மேல் ஒருவர் வைத்திருக்க வேண்டாம்." என்று மொழிந்து சீவரங்களை ஏற்றுக்கொள்ளும் எண்ணிக்கையை வரையறை செய்தார்.

**பெரும்பாலான சட்டங்கள்.**

பாருங்கள் புண்ணியவர்களே! புத்த பகவான் ஒருவருக்கு ஒரு விடயத்தை கூற முற்படும்போது எவ்வளவு மனிதாபிமானமாக நடந்து கொண்டிருக்கிறார் என்று. ஒரு ஆன்மீக தலைவனுக்குரிய அத்தனை பண்புகளும் புத்த பகவானிடத்திலே பரிபூரணமாக இருந்தது. சில முட்டாள்கள், "சன்சாரத்தில் சம்புத்த நிலையை அடைய போதிசத்துவர் பாரமீ தர்மங்களை பூரணப்படுத்தினார் என்றால் ஏன் அவரால் ஒரே முயற்சியில் சம்புத்த நிலையை அடைய முடியாமல் போனது? அவர் ஏன் ஆறு வருடமாக துன்பத்திற்குள்ளானார்?" என்று அர்த்தமற்ற பேச்சுக்களை

பேசுகின்றனர். இவ்வாறாக பேசுவது ஏனைய மதத்தினோரல்ல. பௌத்தர்களாக தம்மை அடையாளப்படுத்தும் மூடர்களேயாவார்.

## இரு முடிவுகளுக்குள் முடிந்து விடாமல்.

எந்த ஆன்மீக தலைவர். இவ்வாறாக வாழ்வினை உய்த்துணருவதற்காக ஆராய்ச்சிகள் நடத்தியவர்? புத்த பகவான் இவ்வாறான ஆராய்ச்சிகளை நடத்திராவிட்டால் “பிக்குக்களே! இந்த இரு அந்தங்களையும் பழக்கப்படுத்த வேண்டாம். அவை துன்பத்திற்கள்ளாக்குபவை, அர்த்தமற்றவை” என்று கூற முடியுமா? முடியாதல்லவா? அதனால் புத்த பகவான் போதித்தார். **‘ஏதே தே பிக்கவே உபோ அன்தே அனுபகம்ம’** பிக்குகளே! இந்த இரு அந்தங்களுக்குள் இல்லாமல் **‘ததாகதேன அபிசம்புத்தோ’** ததாகதரால் உய்த்துணரப்பட்டது. எவ்வாறு உய்த்துணரப்பட்டது? **‘மஜ்ஜிமா படிபதா ததாகதேன அபிசம்புத்தா’** அதாவது மேற்கூறப்பட்ட இரு அந்தங்களுக்குட்படாது நடுநிலையிலிருந்து உய்த்தறியப்பட்டது என்பதாகும். அந்த நடுநிலை மார்க்கம் சாதாரணமானதல்ல. எப்படிப்பட்டது?

## நடுநிலை மார்க்கத்தில் பயணிக்கும் போது..

**‘சக்குகரண’** தர்மவிழிகளை உருவாக்கி தரும். தர்ம விழிகள் என்றால் வாழ்க்கை தொடர்பான, உலகம் தொடர்பான யதார்த்தத்தினை காணக்கூடிய திறமையை உருவாக்கி தரும். அடுத்தாக **‘ஞானகரண’** என்று கூறுவது வாழ்க்கை தொடர்பான உண்மை நிலையை உய்த்துணரும் ஞானத்தை பெற்றுத்தரும். **‘உபசமாய’** கிலேசங்களை தூண்டாதது. கிலேசங்களை தணிய வைப்பது. **‘அபிஞ்ஞாய’** நாற்பேருண்மைகளை காணக்கூடிய வண்ணம் உய்த்துணர்வினை தோற்றுவிப்பது. **‘சம்போதாய’** நாற்பேருண்மைகளின் உய்த்துணர்வினை தோற்றுவிக்கும். **‘நிப்பானாய’** மோட்சத்திற்கு இட்டுசெல்லும். ஒருவர் இவ்வாறாக வழிநடத்தப்படுவது எதனால்? நடுநிலை மார்க்கத்தினாலயே.

### நடுநிலை மார்க்கம் என்றால் என்ன?

அடுத்ததாக புத்த பகவான் வினவுகிறார். தர்மவிழிகளை பெற்றுத்தரும் ஞானத்தை தோற்றுவிக்கும், கிலேசங்களை தணிய வைக்கும், விசேட ஞானத்தினை தோற்றுவிக்கும், நாற்பேருண்மைகளின் உய்த்துணர்வினை தரும் மோட்சத்திற்கு இட்டுச்செல்லும் நடுநிலை மார்க்கம் யாது? **'கதமா ச சா பிக்கவே மஜ்ஜிமா படிபதா'** அதுதான் **'அயமேவ அரியோ அட்டங்கிகோ மக்கோ'** அதுதான் இந்த எண்சீர் மார்க்கம்.

### எட்டு அங்கங்களை கொண்ட செயற்பாடு

உலகின் முதன் முதலாக எட்டு அங்கங்களை கொண்ட ஆர்ய பாதையான மோட்சத்தின் வழியை அனைவரும் அறிந்து கொண்டனர். மார்க்கம் என்றால் என்ன? பின்பற்ற வேண்டிய செயற்பாடு என்பதாகும். அதாவது எட்டு அங்கங்களையுடைய பின்பற்ற வேண்டிய சயற்பாடாகும். எட்டு அங்கங்கள் யாவை? புத்த பகவான் அதனை பின்வறுமாறு விபரிக்கிறார். சம்மா திட்டி, சம்மா சங்கல்ப்பம், சம்மா வாச்சா, சம்மா கம்மந்த, சம்மா ஆஜீவ, சம்மா வாயாம, சம்மா சதி, சம்மா சமாதி.

### நாற்பேருண்மை தொடர்பான அறிவே முதலாவது அங்கமாகும்.

இங்குள்ளவர்கள் யாரேனும் சம்மா திட்டி என்றால் என்ன என்று கூறுங்கள் ? ஆ..ஒருவர் சரியான பார்வை என்ற சொல்கிறார். எதனை சரியாக பார்க்கிறார்? சரியான பார்வை என்று சொல்ல வேண்டாம். ஆம்...பிரித் புத்தகத்திலும் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளதாம். பிரித் புத்தகத்தில் மாத்திரமல்ல ஏனைய புத்தகங்களிலும் அப்படித்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எமக்கு இவ்வளவு காலமும் தவறியதற்கு காரணம் அதுதான். அப்படியாயின் நன்றாக நினைவில் வைத்து கொள்ளுங்கள். சம்மா திட்டி எனும் வார்த்தையின் அர்த்தம் தான் நாற்பேருண்மைகள் தொடர்பாக தனக்கிருக்கும் உய்த்துணர்வு என்பதாகும். இவ்வாறாக உணராத ஒருவரால் எண்சீர் மார்க்கத்தில் பயணிக்க

முடியாது. அப்படியாயின் நாற்பேருண்மைகள் தொடர்பாக பகவானது சீடருக்கிருக்கும் உய்த்துணர்வு தான் சம்மா திட்டி எனப்படுகிறது.

### உய்த்துணர்வுக்கு இரு அங்கங்கள் துணை செய்யும்.

நான் இப்போது கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லுங்கள். சம்மா திட்டி தோன்றுவதற்கு எத்தனை காரணிகள் அவசியமாகும்? இரண்டு. அந்த இரண்டும் எவை? சத்தர்மத்தினை செவிமடுத்தலும் அறிவினால் ஆராய்தலும் எனும் இரண்டுமாகும். சத்தர்மத்தினை செவிமடுத்தலும் அறிவினால் ஆராய்தலும் எனும் இரண்டும் இல்லாமல் ஒருவர் நாற்பேருண்மைகளை உய்த்துணர முடியாது. பாருங்கள், அடுத்தாக புத்த பகவான் சம்மா திட்டிக்கு அவசியமானதையே குறிப்பிடுகிறார். அதாவது சம்மா திட்டி இல்லாமல் சம்மா சங்கல்ப்பம் தோன்றாது. சம்மா திட்டி இல்லாமல் சம்மா வாச்சா தோன்றாது.

### முதலாவது அங்கம் கட்டாயமானது

நாம் அதனை சரளமான மொழிநடையில் அவதானிப்போம். சம்மா திட்டி இல்லாமல் உய்த்துணர்விற்காக மனதை செயற்படுத்த முடியாது. சம்மா திட்டி இல்லாமல் உய்த்துணர்வோடு வார்த்தைகளை பிரயோகிக்க முடியாது. சம்மா திட்டி இல்லாமல் உடலினால் இழைக்கப்படும் தவறுகளை தவிர்க்க முடியாது. சம்மா திட்டி இல்லாமல் வாழ்க்கை தூய்மையடையாது. சம்மா திட்டி இல்லாமல் வீரியம் செய்ய முடியாது. சம்மா திட்டி இல்லாமல் விழிப்புணர்வை மேம்படுத்த முடியாது. சம்மா திட்டி இல்லாமல் உய்த்துணர்வுடன் கூடிய உளச்சமாதியை ஏற்படுத்திகொள்ள முடியாது.

### மோட்சத்தின் பாதையை முழுமையாக மொழிந்தருளினார்.

பாருங்கள் புண்ணியவர்களே! புத்த பகவான், தர்மவிழிகளை பெற்றுத்தரும் ஞானத்தை தோற்றுவிக்கும், கிலேசங்களை தணிய வைக்கும், விசேட ஞானத்தினை தோற்றுவிக்கும், நாற்பேருண்மைகளின் உய்த்துணர்வினை தரும் மோட்சத்திற்கு

இட்டுச்செல்லும் நடுநிலை மார்க்கமான எண்சீர் பாதையினை எவ்வளவு பரிபூரணமாக மொழிந்துள்ளார் என்பதனை. எமது புத்த பகவான் தனது முதல் போதனையிலேயே அதனை அர்த்தம் மிக்கதாக போதித்துள்ளார்.

நாம் இவ்வளவு நேரமும் பேசிய விடயங்களை சுருக்கமாக நினைவு கூறுவோம். புத்த பகவான் முதலாவதாக **'த்வே மே பிக்கவே அன்தா பப்பஜிதேன ந சேவிதப்பா'** பிக்குக்களே! துறவிகளால் பின்பற்ற கூடாத இரு அந்தங்கள் உண்டு. துறவு பூண்டோர் இவ்விரு அந்தங்களையும் பின்பற்ற கூடாது. முதலாவது அந்தம் என்ன? **'யோசாயங் காமேசு காமசுகல்லிகானுயோகோ'** அதாவது துறவிகள் காம சுகத்தில் பற்றுடையவராக காம சுகத்தில் திளைத்து வாழ்வது உசிதமல்ல. அவ்வாறு வாழ்வாராயின் அது **'ஹீனோ'** அதாவது மிக மிக கீழ்தரமான விடயமாகும். **'கம்மோ'** இழிவான விடயமாகும். **'போதுஜ்ஜனிகோ'** தர்மத்தினை உய்த்துணர்ந்தோரது பாராட்டிற்குட்படாததாகும். **'அனத்தசங்ஹிதோ'** அர்த்தமற்றதாகும்.

அடுத்ததாக புத்த பகவான், **'யோசாயங் அத்தகிலமதானுயோகோ'** அதாவது உடலை வருத்துதல். உடலிற்கு பல்வேறு துன்பங்களிற்குட்படுத்தல். **'துக்கோ'** துன்பத்தினையே தரும் **'அனரியோ'** உன்னத நிலையை அடைய முடியாது. **'அனத்தசங்ஹிதோ'** அர்த்தமற்றதாகும். அனர்த்தத்திற்கே வழிவகுக்கும். **'ஏதே தே பிக்கவே உபோ அன்தே அனுபகம்ம'** பிக்குக்களே! இந்த இரு அந்தங்களுக்குள் இல்லாமல் **'மஜ்ஜிமா படிபதா ததாகதேன அபிசம்புத்தா'** நடுநிலை மார்க்கத்தினூடாக ததாகதர் உய்த்துணர்ந்து கொண்டார்.

**'சக்குகரணீ'** தர்மவிழிகளை உருவாக்கி தரும். தர்ம விழிகள் என்றால் வாழ்க்கை தொடர்பாக, உலகம் தொடர்பாக யதார்த்தத்தினை காணக்கூடிய திறமையை உருவாக்கி தரும். அடுத்தாக **'ஞானகரண'** என்று கூறுவது வாழ்க்கை தொடர்பான உண்மை நிலையை உய்த்துணரும் ஞானத்தை பெற்றுத்தரும். **'உபசமாய'** கிலேசங்களை தூண்டாதது. கிலேசங்களை தணிய

வைப்பது. **'அபிஞ்ஞாய'** நாற்பேருண்மைகளை காணக்கூடிய வண்ணம் உய்த்துணர்வினை தோற்றுவிப்பது. **'சம்போதாய'** நாற்பேருண்மைகளின் உய்த்துணர்வினை தோற்றுவிக்கும். **'நிப்பானாய'** மோட்சத்திற்கு இட்டுசெல்லும். அதுதான் **'அயமேவ அரியோ அட்டங்கிகோ மக்கோ'** இந்த எண்சீர் மார்க்கம். அது என்ன? **'சம்மா திட்டி'** நாற்பேருண்மைகள் தொடர்பாக தனக்கிருக்கும் உய்த்துணர்வு, **'சம்மா சங்கல்ப்பம்'** உய்த்துணர்விற்கு ஏற்றாற்போல் சிந்தனையை வழிநடத்தல். **'சம்மா வாச்சா'** தவறான பேச்சுக்களிலிருந்து விடுபட்டு தர்ம உய்த்துணர்விற்கு துணை செய்யும் பேச்சுக்களை பேசுதல். **'சம்மா கம்மந்த'** உடலினால் எவ்வித பாவமும் செய்யாது ஏனையோருக்கு நன்மையை விளைவிக்கும் செயற்பாடுகளை செய்தல். **'சம்மா ஆஜீவ'** தமது வாழ்வினை அழுக்கடைய செய்யும் தவறான ஜீவனோபாயத்தினை விடுத்து வாழ்வினை தூய்மைபடுத்தி கொள்ளல். **'சம்மா வாயாம'** கிலேசங்களை அழிக்கவும் மனதினை தூய்மைபடுத்த துணை செய்யும் குசல தர்மங்களை விருத்தி செய்து கொள்ளவும் உணர்வுடன் கூடிய வீரியம். **'சம்மா சதி'** காயானுபஸ்ஸனம் (உடல் தொடர்பான விழிப்புணர்வு), வேதனானுபஸ்ஸனம் (அனுபவிப்பு தொடர்பான விழிப்புணர்வு) , சித்தானுபஸ்ஸனம் (மனம் தொடர்பான விழிப்புணர்வு), தம்மானுபஸ்ஸனம் (தர்மம் தொடர்பான விழிப்புணர்வு). எனும் நால்வகை சதிபட்டான தர்மங்களில் விழிப்புணர்வுடனிருத்தல். **'சம்மா சமாதி'** நான்காம் படிமுறை தியான நிலை வரை மனதினை விருத்தி செய்தல். இவ்வனைத்துக்கும் துணையாக இருப்பது சம்மா திட்டியாகும்.

### நாற்பேருண்மைகள் (சதுரார்ய சத்தியம்)

சம்மா திட்டி எனும் வார்த்தையின் அர்த்தம் என்ன? நாற்பேருண்மைகள் தொடர்பாக தனக்கிருக்கும் உய்த்துணர்வு. இதன் பிறகு புத்த பகவான் நாற்பேருண்மைகள் தொடர்பாகவே போதிக்கிறார். பாருங்கள் புண்ணியவர்களே! புத்த பகவான் தனது முதலாவது போதனையே எவ்வளவு முழுமையாக, தெளிவாக போதித்துள்ளார் என்று. அறிவினால் ஆராயும்

ஒருவருக்கு இந்த போதனை மிகவும் உறுதுணையாக இருக்கும்.

## துக்கம் ஓர் ஆர்ய சத்தியம்

அடுத்ததாக புத்த பகவான் இவ்வாறாக மொழிந்தருளினார். **'இதங் கோ பன பிக்கவே துக்கங் அரியசச்சங்'** பிக்குக்களே! இதுதான் துக்கம் எனும் ஆரிய சத்தியம். இப்போது கூறும் விடயம் எதற்கு துணையாக இருக்கும்? ஆம்! சம்மா திட்டிக்குதான் துணையாக இருக்கும். துக்கம் எனும் ஆர்ய சத்தியம் யாது? **'ஜாதிபி துக்கா'** பிறப்பு துக்கமாகும். **'ஜராபி துக்கா'** முதிர்ச்சி அடைதல் துக்கமாகும். **'வ்யாதிபி துக்கோ'** நோய் நொடிகள் ஏற்படுவது துக்கமாகும். **'மரணம்பி துக்கங்'** மரணமடைதல் துக்கமாகும். **'அப்பியேஹி சம்பயோகோ துக்கோ'** பிரியமற்றவைகளோடும் பிரியமற்ற நபர்களோடும் சேர்ந்திருத்தல் துக்கமாகும். **'பியேஹி விப்பயோகோ துக்கோ'** பிரியமான பொருட்களிலிருந்தும் பிரியமான நபர்களிலிருந்தும் பிரிவது துக்கமாகும். **'யம்பிச்சங் ந லபதி தம்ப்பி துக்கங்'** மேற்கூறப்பட்டுள்ள பிறப்பு, முதிர்ச்சி, நோய் நொடிகள், இறப்பு, பிரியமற்றவைகளோடும் பிரியமற்ற நபர்களோடும் சேர்ந்திருத்தல், பிரியமான பொருட்களிலிருந்தும் பிரியமான நபர்களிலிருந்தும் பிரிவது எனும் துக்கங்களை ஒருவர் பெறாமலிருக்கவே விரும்புவார். ஆனால் விரும்பாவிடிலும் அதுவே கிடைக்கும். தான் விரும்புவது கிடைக்காமை விரும்பாதது கிடைக்கின்றமை என்பதும் துக்கமாகும். **'சங்கித்தேன'** சுருக்கமாக கூறினால் **'பஞ்சுபாதானக்கந்தா துக்கா'** இந்த ஐந்து உபாதானஸ்கந்தங்களுமே துக்கமாகும். என்று புத்த பகவான் மொழிந்தார்.

## துக்கத்தின் தோற்றம் எனும் ஆரிய சத்தியம்.

அடுத்ததாக புத்த பகவான் பின்வருமாறு மொழிந்தார். **'இதங் கோ பன பிக்கவே துக்க சமுதயங் அரிய சச்சங்'** இதுதான் துக்கத்தின் தோற்றம் எனும் ஆரிய சத்தியம். **'யாயங் தண்ஹா போனோபவிகா'** அதாவது மீண்டும் மீண்டும் பலனளிக்க கூடிய வண்ணம் கர்மத்தினை தோற்றுவிக்கும் தண்ஹா எனப்படும் பேராசை. அவ்வாறாயின் துக்கத்திற்கான காரணம்

யாது? ஆம் தண்ஹா எனப்படும் பேராசையாகும். தண்ஹா எனப்படும் பேராசை பல இயல்புகளை கொண்டதாகும். மீண்டும் பலனளிக்க கூடிய வண்ணம் கர்மத்தினை தோற்றுவித்தல் தண்ஹா எனப்படும் பேராசையின் ஒரு இலட்சணமாகும். **'நந்திராகசஹகதா'** விருப்புடன் ஒட்டிக்கொள்ளும் இயல்பினை கொண்டதாகும். **'தத்ர தத்ராபிநந்தினீ'** அவ்வவ் இடத்தினை இன்பத்துடன் ஏற்றுக்கொள்ளும் இயல்பிலானது. புத்த பகவான் இந்த தண்ஹா எனும் பேராசையை மூன்று வகையாக வகுத்து கூறியுள்ளார். அவை முறையே காம தண்ஹா, பவ தண்ஹா, விபவ தண்ஹா என்பவையாகும்.

காம தண்ஹா என்றால் என்ன? உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வு, என்பனவற்றின் மீதான ஆசையாகும். பவ தண்ஹா என்றால் என்ன?. மீண்டும் மீண்டும் பிறப்பதற்கான ஆசையாகும். விபவ தண்ஹா என்றால் என்ன? இவை ஒன்றுமே இருக்கக்கூடாது என்றிருக்கும் ஆசையாகும்.

### துக்கத்தினை அழிக்கும் ஆரிய சத்தியம்.

அடுத்ததாக புத்த பகவான் இந்த துக்கத்தினை அழிக்கலாம் என மொழிந்துள்ளார். **'இதங் கோ பன பிக்கவே துக்க நிரோதங் அரியசச்சங்'.** புண்ணியமிகு பிக்குக்களே! இதுதான் துக்க அழிவு எனும் ஆரிய சத்தியமாகும். **'யோ தஸ்ஸாயேவ தண்ஹாய'** இந்த தண்ஹா எனப்படும் பேராசையை **'அசேச'** மீதமின்றி **'விராக'** ஒட்டிக்கொள்ளாது **'நிரோதோ'** இல்லாமல் செய்தல், **'சாகோ'** கைவிட்டுவிடல், **'படிநிஸ்ஸக்கோ'** முழுமையாக அழித்துவிடல். **'முத்தி'** இந்த பேராசையிலிருந்து மீளுதல், **'அனாலயோ'** ஆசையையே முழுமையாக கைவிட்டுவிடுதல் எந்த ஆசை? காம தண்ஹா, பவ தண்ஹா, விபவ தண்ஹா எனும் மூன்றிலிருந்து முழுமையாக விடுதலை அடைந்தால் அனைத்து துக்கத்திலிருந்தும் பரிபூரணமாகவே விடுதலை அடைந்தார் என்றே பொருளாகும்.

### துக்கத்தினை அழிப்பதற்கான வழிமுறையும் ஒரு ஆரிய சத்தியமாகும்.

'இதங் கோ பன பிக்கவே துக்க நிரோத காமினி படிபதா அரிய சச்சங்' புண்ணியமிகு பிக்குக்களே! இதுதான் துக்கத்தை அழிக்கவிருக்கும் ஆரிய சத்தியம். அது என்ன? நாம் முன்னர் விபரித்த எட்டு அங்கங்களையுடைய ஆரிய அட்டாங்கிக மார்க்கம் அதாவது எண்சீர் மார்க்கமாகும். இது தொடர்பான அறிவு ஒருவருக்கு கிடைத்தவுடன் அவருக்கு சம்மா திட்டி தோன்றும்.

## முதல் போதனையில் முதலாவதாக சம்மா திட்டி

புத்த பகவான் தம்மசக்க பவத்தன சூத்திரத்தில் மொழிந்ததை இப்போது உங்களால் உணரக்கூடியதாக இருக்கும். புத்த பகவான் தம்மசக்க பவத்தன சூத்திரத்தில் என்ன மொழிந்தார்? சம்மா திட்டி தொடர்பாக மொழிந்துள்ளார். இந்த போதனையில் இன்னுமொன்று தொடர்பாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. **'திபரிவட்டங்'**, **'த்வாதசாகார'** என்று இரு வார்த்தைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகள் எமக்கும் மிகவும் பொருந்தும் ஏனெனில் நாமும் தர்மத்தினை இங்கு கூறப்படும் முறைகளிலேயே உய்த்துணர வேண்டும். வேறு முறைகள் இல்லை.

இப்போது கூறுவதை நன்கு நினைவில் வைத்து கொள்ளுங்கள். நாற்பேருண்மைகள் தொடர்பான உய்த்துணர்விற்கு வரும் அளவிற்குதான் ஆரிய மார்க்கத்தினுள் பிரவேசிக்க முடியும். அதனால் தான் புத்த பகவான் ஆரிய அட்டாங்கிக மார்க்கம் எனப்படும் எண்சீர் வழியை கூறிய பின்பு சம்மா திட்டிக்கு துணை புரியும் விடயங்கள் தொடர்பாக மொழிந்துள்ளார். இப்பாகத்தினை அறியாதவர் சம்மா திட்டி என்றால் என்னவென்பதனை அறியாதோர்களாகவே இருப்பார்கள்.

## எமக்கும் சம்மா திட்டி

இப்போது நீங்கள் சம்மா திட்டி உருவாகுவதற்கு தேவையான காரணிகளை கற்றுகொண்டீர்களா? இல்லையா? கற்றுக்கொண்டீர்கள். பஞ்ச உபாதானஸ்கந்தம் (துக்கம்)

தோற்றம் பெறுவது எவ்வாறு? மறைவது எவ்வாறு என்பதனை கற்றுக்கொண்டீர்களா? இல்லையா? கற்றுக்கொண்டீர்கள். அப்படியாயின் துக்கத்தினை மாத்திரமா கற்றுக்கொண்டீர்கள்? இல்லை துக்கமும் துக்க தோற்றம் எனும் இரண்டு தொடர்பாகவும் கற்றுக்கொண்டீர்கள். நீங்கள் முதலிலேயே கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் இவைதான். அதன் பிறகு, துக்கம் அநித்தியமென்றால் துக்கத்தின் தோற்றமும் அநித்தியமென்றால் இந்த துக்கத்தினை அழிக்க முடியும் என்பதனையே கற்க வேண்டும். துக்கத்தினை அழிக்கும் முறை தொடர்பாக நாம் அறிந்து கொண்டோமல்லவா? ஆம்.! அதுதான் எண்சீர் மார்க்கம் எனப்படும் ஆரிய அட்டாங்கிக மார்க்கமாகும். நாம் அதனை மேன்மைபடுத்த வேண்டிய முறையையும் கற்றுக்கொண்டோம். இவ்வாறு நாம் கற்றுக்கொண்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டே நாற்பேருண்மைகள் எனப்படும் சதுர் ஆரிய சத்தியம் மீது தன்னுள் உய்த்துணர்வு தோன்றும். இந்த உய்த்துணர்வானது யோனிசோ மனசிகாரம் எனும் அறிவினால் ஆராயும் திறனை அடிப்படையாகக்கொண்டே தோன்றுவதாகும்.

### சரியான பார்வை பிழைகளற்று..

இவ்வாறான உய்த்துணர்வை பெற்ற பின்னர்தான் நாம் 'சரியான பார்வை' எனும் வார்த்தையை பிரயோகிப்பது உசிதமானது. நாம் சம்மா திட்டி எனும் போது சரியான பார்வை அல்லது Right understand என்று கூறுகிறோம் அல்லவா?

### பிழைகளோடு..

சரி. நீங்கள் உண்மையை கூறுங்கள். நாம் இப்போது சரியான பார்வை என்பதன் கீழ் உங்களுக்கு தெளிவுபடுத்திய விடயங்களை நீங்கள் முன்னர் அறிந்திருந்தீர்களா? இல்லை. இதற்கு முன்னர் புத்தகங்களில் சரியான பார்வை என்று குறிப்பிட்டிருக்கும் போது நாம் இம்மாதிரியான ஆழமான கருத்து இதிலடங்கியுள்ளது என்பதனை அறிந்திருந்தோமா? இல்லை. அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கவில்லை என்றே கூறுலாம். மொழிப்பெயர்புகளின் போது பாளி சொல்லை நேரடியாக நமது

மொழிக்கு மொழிப்பெயர்ப்பு செய்தார்களே தவிர அதனை புரிந்துகொள்ளும் வகையில் விபரிக்கவில்லை. ஆங்கிலத்திலும் நேரடியான மொழிப்பெயர்ப்பு மாத்திரமே உள்ளது. 'சம்மா' எனும் வார்த்தையை ஆங்கிலத்தில் சபைாவ என்றோ அல்லது correct என்றோ மொழிப்பெயர்ப்பு செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த வார்த்தைகளினால் சரியான அரத்தத்தை உணர முடியாது.

**சரியானதை பெற்றுக்கொண்டால் சம்மா திட்டி சேய்மையாகாது**.

நாற்பேருண்மைகள் தொடர்பாக தமக்கிருக்கும் உய்த்துணர்வு தான் சம்மா திட்டி என்பதனை நன்கு ஞாபகத்தில் வைத்திருக்கும் போது அதனை ஏனையோருக்கும் இலகுவாக கூற முடியும். நாம் இதற்கு முன்பு இந்த விடயத்தை அறிந்திருந்தால் இப்போது எவ்விதமான குழப்பமும் ஏற்பட்டிருக்காது. இதுதான் மொழிப்பெயர்ப்புகளின் போது ஏற்படும் மிகப்பெரிய குறைபாடாகும். ஆனால் இப்போது எமக்கு இந்த குறைபாடுகள் ஏற்படாத வண்ணம் தர்மத்தினை கற்றுணர முடியும். பெரும்பாலான போதனைகளிலே சம்மா திட்டி எனும் இந்த வார்த்தையை பகவான் வரைவிலக்கணப்படுத்தி கூறியுள்ளார். அநேகமான போதனைகளில் **'கதமாச பிக்கவே சம்மா திட்டி? துக்கே ஞானங், துக்க சமுதயே ஞானங், துக்க நிரோதே ஞானங், துக்க நிரோதகாமினி படிபதாய ஞானங்'** என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. சச்ச விபங்க சூத்திரத்திலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்மா திட்டி எம்முள் தோன்ற வேண்டுமாயின் நாம் என்ன செய்ய வேண்டும்? நாற்பேருண்மைகளை உய்த்துணர வேண்டிய காரணிகளையே செய்ய வேண்டும். அப்போது சம்மா திட்டியை உருவாக்கி கொள்ள முடியும். நாற்பேருண்மைகளை உய்த்துணர அவசியமான காரணிகளை நாம் அறிந்திருக்கிறோம். அவைதான் சத்தர்மத்தினை செவிமடுத்தல், யோனிசோ மனசிகாரம் எனப்படும் தர்மத்தினை அறிவினால் ஆராயும் திறமை, சமத மற்றும் விபஸ்ஸனா தியானம் என்பனவாகும்.

**விபஸ்ஸனா என்றால் என்ன?**

விபஸ்ஸனா என்றால் என்ன? வாழ்வின் யதார்த்தத்தினை (உண்மை நிலையை) உய்த்துணரும் வண்ணம் நால்வகை சதிபட்டான தர்மத்தினை அறிவினால் ஆராய்தலாகும். நாம் பஞ்ச உபாதானஸ்கந்தங்கள் தொடர்பாக முதலில் பார்த்தோம். அவை முறையே உருவம், அனுபவிப்பு, இணங்காணல், சிந்தனை, விஞ்ஞானயம் எனும் ஐந்துமாகும்.

## இவ்வாறு தான் அறிவினால் ஆராய வேண்டும்

உருவம் என்றால் என்ன? நால்வகை மகா தாதுக்களால் உருவாகியவை. எமது உடலில் இருப்பவை நால்வகை மகா தாதுக்களால் உருவாகிவையல்லவா? அப்படியாயின் ஒருவர் இவ்வுடல் தொடர்பாக விழிப்புணர்வுடன் இருப்பாராயின் அவருக்கு இவ்வுடல் தொடர்பான உய்த்துணர்வை பெற முடியும். அதேபோல் அனுபவிப்பின் மீது கவனம் செலுத்த வேண்டும். அது வேதனானுபஸ்ஸனம். அடுத்ததாக மனதினை அறிவினால் ஆராய வேண்டும். இதுதான் சித்தானுபஸ்ஸனம். அதன்பின்னர் படிச்சசமுப்பாதத்தின் (காரண காரிய செய்பாடு) படி தோற்றத்தினையும் அழிவினையும் ஆராய வேண்டும். காரணங்களால் தோற்றம் பெற்று காரணங்கள் அற்று போகும் போது இல்லாமல் போகும் பஞ்ச உபாதானஸ்கந்தத்தினை அறிவினால் ஆராய வேண்டும். இது தம்மானுபஸ்ஸனமாகும். ஒருவருக்கு இவற்றை தர்மத்தினை அறிந்திராமல் செய்ய முடியுமா? முடியாது. அறிவினால் ஆராயாமல் செய்ய முடியுமா? முடியாது. அப்படியாயின் நால்வகை சதிபட்டான தர்மத்தினை மேன்மைபடுத்தவும் சம்மா திட்டியே அவசியமாகிறது.

## தர்மம் தொடர்பான அறிவு

சம்மா திட்டி தோன்றுவதற்கு சத்தர்மத்தினை செவிமடுத்தல் மற்றும் யோனிசோ மனசிகாரம் எனும் அறிவினால் ஆராய்தல் எனும் இரு காரணிகளும் மிக மிக அவசியமானவையாகும். ஒருவர் இவ்விரு காரணிகளும் இல்லாமல் நான் சதிபட்டான தியானம் செய்கிறேன் என்றால் அது பிழையாகும். இவர் கண்டிப்பாக தர்மத்தினை தமது வாழ்விற்கு பழக்கப்படுத்தும் ஒருவராக

இருக்க வேண்டும். இதுவரை தாம் கேட்டிருந்த தர்மத்தினை சரியான முறையில் விளங்கிகொண்டு உய்த்துணர்விற்கு தேவையான காரணிகளை வளர்த்துகொண்டு தர்மத்தினை தமது வாழ்விலே நிலைநிறுத்த முயற்சி செய்ய வேண்டும்.

ஏனெனில் எமது மனம் புறவுலகிற்கே கவனம் செலுத்தி கொண்டிருக்கிறது. அதாவது நாம் பார்த்த விடயங்கள், கேட்ட விடயங்கள் என்பனவற்றுக்கே எமது மனம் பெரிதும் இடமளிக்கிறது. அதுவே எமது பழக்கமாகும். இதனிலிருந்து விடுபடுவதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் தர்மத்தினையே மீண்டும் மீண்டும் செவிமடுக்க வேண்டும். தர்மத்தினையே மீண்டும் மீண்டும் பேச வேண்டும், தர்மத்தினையே மீண்டும் மீண்டும் எமது வாழ்விற்கு பழக்கப்படுத்த வேண்டும்.

**தர்மத்தினை சரியான முறையில் கற்றுணர தூய்மையான தர்மத்தினையுடைய நூல்களை வாசிக்க வேண்டும்.**

இங்கு உள்ளோர்கள் பகவானது தர்மத்தினை சரியான முறையில் கற்றுணர முயற்சிக்கும் ஒரு கூட்டம் என்பதனால் இதனை கூறுகிறேன். தர்மத்தினை தூய்மையாக கற்க விரும்பினால் புத்த பகவானது சூத்திர போதனைகளையே வாசிக்க வேண்டும். தர்மம் என்று கூறப்படும் வேறு புத்தகங்களை வாசித்து குழம்புவோர்க்கு என்னால் ஒன்றும் செய்ய இயலாது. இறுதியில் நான் சொல்லாத விடயங்களையும் நானே கூறினேன் என என்னிடமே வந்து கூறுவார்கள். சூத்திர போதனைகளையே தேடித்தேடி வாசியுங்கள். இப்போது கூறும் விடயத்தினை நன்றாக ஞாபகம் வைத்து கொள்ளுங்கள். சன்சார விடுதலை, துக்கத்திலிருந்து விடுபடுதல், மன அமைதி, உய்த்துணர்வு என்பவற்றை யாராலும் ஊட்ட முடியாது. அவற்றை பெறுவதற்கு தானே தைரியத்துடனும் வீரியத்துடனும் அயராது முயற்சிக்க வேண்டும்.

இப்போது கூறுங்கள், இதற்கு முன்னர் அவுஸ்திரேலியா என்று ஒரு நாடு இருக்கவில்லையா? இருந்தது. ஆனால் அந்நாட்டை முன்னேற்ற வெள்ளையர்களே தறையிறங்கி வர

வேண்டியதாயிற்று. அங்கிருந்த சுதேச மக்களால் அதனை செய்ய முடியவில்லையல்லவா? தைரியத்துடனும் வீரியத்துடனும் அயராது முயற்சிப்போரால் தான் எதையும் செய்ய முடியும். தர்மத்தினை உய்த்துணருவது கூட அப்படிப்பட்ட ஒரு விடயம் தான். அதற்கு புத்த பகவானால் மொழியப்பட்ட தூய்மையான புத்த போதனைகளையே செவிமடுக்க வேண்டும்.

## இனி உங்கள் கைகளில் தான்

நான் உங்களுக்கு மிகப்பெரிய உதவி செய்துள்ளேன். புத்த பகவானது தூய்மையான தர்மத்தினை உங்களுக்கு கூறியிருக்கிறேன். அதனை எவ்வாறு செய்ய வேண்டும்? என்பதனையும் கூறியுள்ளேன். மிகுதியை நீங்கள் தான் செய்துகொள்ள வேண்டும். தனக்கு தெரிந்த அளவிற்கு தன்னுடைய வாழ்விற்கு தர்மத்தீனை பழக்கப்படுத்த வேண்டும்.

சரி இப்போது நான் ஒரு கேள்வி கேட்கிறேன், பொஜ்ஜங்க என்றால் என்ன? ஆம்..**'போதி'** என்றால் நாற்பேருண்மைகள் அதாவது சதுர் ஆரிய சத்தியம். **'அங்க'** என்றால் அதற்கு துணையாக இருப்பவை என்று பொருளாகும். அதாவது நாற்பேருண்மைகளை உய்த்துணர துணையாக இருக்கும் காரணிகளையே நாம் பார்த்தோம்.

## ஏழு அங்கங்கள்.

எத்தனை பொஜ்ஜங்க தர்மங்கள் உள்ளன? ஏழு. அவை முறையே சதி, தம்மவிசய, வீரிய, பீதி, பஸ்ஸத்தி, சமாதி, உபேக்கா என்பவையாகும். இந்த ஏழு பொஜ்ஜங்க தர்மங்களையும் நாற்பேருண்மைகள் தொடர்பாக அறிவினால் ஆராய்ந்து கொண்டு சமதம் மற்றும் விபஸ்ஸனா தியானங்களை மேற்கொள்ளும ஒருவருக்கு தோற்றுவித்து கொள்ள முடியும். அதாவது பஞ்ச உபாதானஸ்கந்தங்களின் உண்மையை ஆராயும் ஒருவர் உய்த்துணர்விற்காக சதி அதாவது விழிப்புணர்வினை கொண்டியங்குவார். அப்போது அவருக்கு தர்ம உய்த்துணர்விற்கு தேவையான ஒரு அங்கமாக விழிப்புணர்வு

வளர்ச்சியுறும். அவர் அநித்தியம், துக்கம், அநாத்மம் என்ற வகையில் பஞ்ச உபாதானஸ்கந்தம் மற்றும் படிச்சசமுப்பாதம் என்பவற்றை அறிவினால் ஆராயும் போது உய்த்துணர்விற்கு தேவையான அங்கமாக தம்மவிசயம் (தர்ம ஆராய்வு) எனும் அங்கம் வளர்ச்சியுறும். மனதிற்குள் கிலேசங்கள் தோன்றும் அவற்றை அகற்றி தர்மத்தினுள் மனதை நிலைநிறுத்த முயற்சி செய்யும் போது வீரியம் எனும் போதி அங்கமே வளர்ச்சியுறும்.

அப்போது தனது மனம் முன்பு போல் செயற்படாது தர்மத்தின் வழியில் செயற்படுவதை நினைக்கும் போது இன்பமாக இருக்கும். அதுதான் ப்ரீத்தி எனும் போதி அங்கமாகும் அதாவது இன்பமாகும்.. நால்வகை சதிபட்டான தர்மத்தினுள் மனதினை செயற்படுத்தும் போது ஏற்படும் உடல் உள இலகுவான நிலையே பஸ்ஸத்தி ஆகும். அந்த இலகுவான நிலையானது வெறுமையானதன்று. உய்த்துணர்வினால் ஏற்படும் ஒன்றாகும். தர்ம உய்த்துணர்விற்கு வித்திடுவதாகும். அடுத்தது சமாதியாகும். அதாவது மன ஒருமைபாடு. ஒருவர் உளச்சமாதி நிலையிலும் பஞ்ச உபாதானஸ்கந்தங்களின் அநித்தியத்தை மனதினால் அராயும் போது தர்ம உய்த்துணர்விற்கானதாகவே அமையும். உளச்சமாதியும் உய்த்துணர்விற்கு தேவையான ஒரு அங்கமானதாகவே வளர்ச்சியுறும். ஆனால் இவரது மனம், சமாதியின்பால் ஒட்டிக்கொள்ளாது. இப்போது மத்தியஸ்த நிலையை கொண்டதாகிறது. அதாவது மனம் சமநோக்குடையதாகிறது. இங்கு கூறப்படும் **'சமநோக்கு'** அதுக்கமசுக (இன்பமோ துன்பமோ அற்ற ) நிலையன்று. அது இன்பத்தினை இணங்கண்ட, சுகத்தினை இணங்கண்ட, உளச்சமாதியை இணங்கண்ட உய்த்துணர்வினூடாக உருவாகிய சமநோக்காகும். அதுவும் தர்ம உய்த்துணர்விற்கு துணையாக இருக்கும் ஒன்றாகும். சம்மா திட்டியுடன் கூடிய யோனிசோ மனசிகாரத்தினூடாக நால்வகை சதிபட்டான தர்மங்களின் மீது மனதை நிலைநிறுத்துவதனூடாகவே இவை தோன்றும். யோனிசோ மனசிகாரம் (அறிவினால் ஆராய்வு) நடத்தாமல் இவை ஒன்றும் ஏற்படாது. அதனால்தான் நான் மீண்டும் மீண்டும் யோனிசோ மனசிகாரத்தினை பற்றியே கூறுகிறேன்.

**தர்மத்திலுள்ள பெறுமதியான சொற்களை வெறுமனே உபயோகிக்க வேண்டாம்.**

யோனிசோ மனசிகாரம் தொடர்பாக கூறுகையில் முக்கியமான விடயம் ஒன்றை கூற வேண்டும். நாம் இப்போது தர்மம் தொடர்பான புதுப்புது வார்த்தைகள் தொடர்பாக கற்றிருக்கிறோம். ஒருசில மூடர்கள் தர்மம் தொடர்பான ஆழமான பெறுமதியான சொற்களை நையாண்டி செய்கிறார்கள். நாம் எடுத்த ஒரு பொருளினை எடுத்த இடத்திலேயே வைக்க முடியாது போய்விட்டது என்று வைத்துக்கொள்வோம். இம்மாதிரியான சமயங்களில் சிலர் “எங்கே உங்ளது யோனிசோ மனசிகாரம்? ஐயோ உங்களுக்கு சதிபட்டான்மே இல்லையே..!” என்று கூறுவார்கள். இவ்வாறான சாதாரண விடயங்களுக்கெல்லாம் தர்மத்திலுள்ள உன்னத வார்த்தைகளை பிரயோகிக்க வேண்டாம். அதனால் இழிவுக்குள்ளாவது தர்மம் தான். அதனால் இவ்வாறு கூறாதீர்கள். உங்கள் மீதுள்ள கருணையினால் தான் நான் இதனை கூறுகிறேன். நாமறியாமலே கூட இவ்வாறான வார்த்தகைளை நாம் பிரயோகிக்கலாம். ஆனால் ஒன்றினை நன்கு நினைவில் வைத்து கொள்ளுங்கள். அனைத்து மனமாசுகளையும் நீக்கிய அரஹத் தேரர்கள் உருவாகியதும் இந்த வார்த்தைகளினால் தான் என்பதனை. அதனால் சிறு சிறு விடயங்களின் போது புனிதமான வார்த்தைகளை பிரயோகித்து இழிவு படுத்தாதீர்கள். இந்த வார்த்தைகள் சம்புத்த பகவானொருவரது நிர்மலமான அகத்தே உதித்து மகா கருணை மேலிட்டு உலக உயிர்கள் விடுதலை பெறுவதற்காக மொழியப்பட்டவையேயாகும். தர்மத்தினை நாம் கடுகளவேனும் அவமதித்தல் கூடாது. ஏனெனில் என்றோ ஒருநாள் நாம் சன்சாரத்திலிருந்து விடுதலை பெறுவது இந்த தர்மத்தினாலயே ஆகும்.

**ஒருவராலும் செய்து கொடுக்க முடியாததை தர்மம் செய்து கொடுக்கும்.**

நாம் பெற்றோர்களிடம் கேலி செய்ய மாட்டோம், காரணம்

அவர்கள் மீது நாம் வைத்திருக்கும் கௌரவமாகும். ஆனால் பெற்றோராலும் செய்து கொடுக்க முடியாத விடயத்தினை தர்மம் செய்து கொடுக்கிறது. இந்த தர்மம் தான் அனைத்து துக்கத்திலுந்தும் விடுதலையடைய துணை செய்கிறது. அதனால் எமது உயர்ந்த கௌரவத்திற்கு உட்பட வேண்டிய உன்னதமானவர் தான் புத்த பகவான், அடுத்ததாக அவர் மொழிந்தருளிய ஸ்ரீ சத்தர்மம் மற்றும் மகா சங்கத்தினராவர். அதனால் ஒருபோதும் புனிதமான மும்மணிகளை அகௌரவம் செய்யக்கூடாது. புத்த பகவானை ஒருபோதும் கேலி செய்யக்கூடாது.

சிலர் இருக்கின்றனர் பன்சலையில் உள்ள பிக்குவோடு கோபித்துகொண்டு “இந்த பன்சலைக்கு புத்த பகவானே வருகை தந்தாலும் நான் வரமாட்டேன்” என்று கூறுவார்கள். இவ்வாறு கூறுவோர்கள் எத்தனையோபேர் எம் சமூகத்தில் வாழ்கின்றனர். ஆனால் அவர்கள், தான் கூறிய வார்த்திதையின் பாரதூரமான பின்விளைவுகளை அறியாதோர்களாகவே இருக்கின்றனர். இவ்வாறானவர்களுக்கு கருணையினால் கற்றுக்கொடுக்க வேண்டும்.

**சிரத்தை மேலிட்டு அறிவினால்ஆராயும் போது தர்மத்தினை காண முடியும்.**

நான் ஒருபோதும் இவ்வாறு (மேற்கூறப்பட்ட விடயம்) கூறமாட்டேன். எனக்கு நுற்றுக்கு நூறு வீதம் நம்பிக்கை உள்ளது. அதற்கு காரணம் தான் நான் பேசும் வார்த்தைகளை விழிப்புணர்வுடனேயே பேசுவேன். சில நேரங்களில் சாதாரண பேச்சுக்களின் போது தவறுகள் ஏற்பட்டாலும், தர்மத்திற்கு எதிரான தர்மத்திற்கு மாறுபட்ட விடயங்களை நான் ஒருபோதும் கூறியதில்லை. நான் கூறும் சாதாரண விடயங்கள் பிழையாகலாம். தவறலாம். நான் அதனை கூறவில்லை. ஒருபோதும் புத்த பகவான், ஸ்ரீ சத்தர்மம், ஆரிய மகா சங்கத்தினர் தொடர்பாக நான் கூறுகையில் மேற்குறிப்பிட்து போன்று நான் கூறமாட்டேன். அதற்கு காரணம் என்ன? மும்மணிகள் மீது எனக்கு அசைக்க முடியாத திடகாத்திரமான நம்பிக்கையுடன் கூடிய சிரத்தை

(பக்தி) உள்ளது. தர்மத்தினை உய்த்துணர்ந்தவர்களிடம் எம்மை விடவும் அசைக்க முடியாத திடகாத்திரமான நம்பிக்கையுடன் கூடிய சிரத்தை உள்ளது. தர்மத்தினை உய்த்துணர்வதும் எம்மை போன்றோர்களே. அசைக்க முடியாத திடகாத்திரமான நம்பிக்கையுடன் கூடிய சிரத்தையுடன் யோனிசோ மனசிகாரத்தில் (அறிவினால் ஆராய்வதில்) ஈடுபடும் ஒருவருக்குதான் தர்மத்தினை உய்த்துணர முடியும். அதனால் நாம் கற்றுக்கொள்ளும் இந்த தர்மத்தினை இவ்வாழ்விலேயே கடைபிடிக்க முயற்சி செய்ய வேண்டும். அரைகுறையாக தர்மத்தினை அறிந்து கொள்வதால் இது முடியாத காரியமாகும். ஏனெனில் ஒருவர் அரைகுறையாக தர்மத்தினை அறிந்துகொண்டால் அது சகல தேவ மனிதர்களுக்குமே தீங்காகவே அமையும். நாம் தர்மத்தினை கௌரவிக்கும் போது தான் எம்மோடு இருப்பவர்களும் தர்மத்தினை மதிப்பார்கள்.

புத்த பகவானுடைய தர்மம் அடங்கிய புனித நூல்களை நாம் இந்த தியான ஆஸ்ஸிரமத்திலே மிகவும் கௌரவத்துடனே வைத்துள்ளோம். வேறு வேறு புத்தகங்களோடு கலந்து வைத்தல் பிழையாகும். தர்ம கௌரவத்துடனே தர்மத்தினை கற்க வேண்டும். மும்மணிகளை சரணடையும் அனைவரும் மும்மணிகளை கௌரவிக்க வேண்டும். தர்மத்தினை நோக்கியே எமது வாழ்வினை கொண்டு செல்ல வேண்டும். அதனால் எம்மனைவருக்கும் சத்தர்மத்தினை செவிமடுத்து செவிமடுத்த தர்மத்தினை அறிவினால் ஆராய்ந்து உன்னதமான நாற்பேருண்மைகளை உய்த்துணரும் பாக்கியம் கிட்டுவதாக.

**சாது! சாது!! சாது!!!**

*நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மாசம்புத்தஸ்ஸ*
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மாசம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 02

# தம்மசக்க பவத்தன சூத்திரம் பாகம் 2

புண்ணியமிக்கவர்களே!
நாம் நேற்று புத்த பகவான் மொழிந்தருளிய முதலாவது போதனையின் ஒரு பாகத்தை கற்றோம். அதாவது தம்ம சக்க பவத்தன சூத்திரத்தின் முதலாவது பாகத்தினையே கற்றுக்கொண்டோம். இந்த போதனையில் மோட்சமடைய விரும்பும் சன்சாரத்திலிருந்து விடுதலையடைய விரும்பும் துறவிகளால் இரு அந்தங்களை கைவிட வேண்டும் எனக்கூறப்பட்டது. இவ்விரு அந்தங்களும் எவை? ஆம்.. காமசுகல்லிகானுயோகம் மற்றும் அத்தகிலமதானுயோகம் எனும் இரண்டுமாகும். அதாவது காம சுகத்தில் திளைத்து வாழ்தல் எனும் ஒரு அந்தமும். தன் உடலை வருத்தும் துன்பத்திற்குள்ளாகும் அந்தம் எனும் இரண்டுமாகும்.

**நடுநிலை..**

புத்த பகவான் இவ்விரு அந்தங்களையும் துறந்து புதியதொரு வழியை கண்டுபிடித்தார். அதுதான் நடுநிலை மார்க்கம் அதாவது **'மஜ்ஜிமா படிபதா'** ஆகும். இந்த நடுநிலை மார்க்கத்தில் பயணிப்பதால் என்ன

கிடைக்கும்? **'சக்குகரண'** தர்மவிழிகளை உருவாக்கி தரும். **'ஞா-னகரண'** என்று கூறுவது வாழ்க்கை தொடர்பான உண்மை நிலையை உய்த்துணரும் ஞானத்தை பெற்றுத்தரும். **'உபசமாய'** கிலேசங்களை தூண்டாதது. கிலேசங்களை தணிய வைப்பது. **'அபிஞ்ஞாய'** நாற்பேருண்மைகளை காணக்கூடிய வண்ணம் உய்த்துணர்வினை தோற்றுவிப்பது. **'சம்போதாய'** நாற்பேருண்மைகளின் உய்த்துணர்வினை தோற்றுவிக்கும். **'நிப்பானாய'** மோட்சத்திற்கு இட்டுசெல்லும்.

**எண்சீர் மார்க்கம் எனப்படும் ஆரிய அட்டாங்கிக மார்க்கம்.**

புத்த பகவான் எந்த குருவிடமிருந்தும் அறிந்து கொள்ளாமல், எந்த புத்தககங்களையும் பாராமல், எவரிடமுமே கேட்டறியாமல் முழுமையாக தன்னுடைய சுய ஞானத்தினாலே உய்த்துணர்ந்த நடுநிலை மார்க்கம் எது? **'அயமேவ அரியோ அட்டங்கிகோ மக்கோ'** எட்டு அங்கங்களையுடைய உன்னதமான மார்க்கமாகும். இங்கு கூறப்படும் எட்டு அங்கங்களும் யாவை? சம்மா திட்டி, சம்மா சங்கல்ப்பம், சம்மா வாச்சா, சம்மா கம்மந்த, சம்மா ஆஜீவ, சம்மா வாயாம, சம்மா சதி, சம்மா சமாதி. என்பனவாகும். இங்கு ஆரிய எனக்கூறப்படுவது எது? ஆம்.. ஆரிய என்றால் உன்னதமானது என்று பொருளாகும். எண்சீர் பாதை என்பது உன்னதமானதாகும். ஒருவர் உன்னதமான வழியை பின்பற்றினால் அவர் உன்னதமான நிலையையே அடைவார். இந்த ஆரிய அட்டாங்கிக்க மார்க்கம் எனப்படும் எண்சீர் வழியானது ஆரிய சத்தியமாகும். அது எத்தனையாவது ஆரிய சத்தியம்? நான்காவது ஆரிய சத்தியமாகும். முதலாவது ஆரிய சத்தியம் தான் **'இதங் துக்கங் அரியசச்சங்'** துக்கம் எனும் ஆரிய சத்தியம். இரண்டாவது ஆரிய சத்தியம் தான் **'இதங் துக்க சமுதயங் அரிய சச்சங்'** துக்கத்தின் தோற்றம் எனும் ஆரிய சத்தியம். **'இதங் துக்க நிரோதங் அரிய சச்சங்'** இதுதான் துக்க அழிவு எனும் ஆரிய சத்தியமாகும். நான்காவது ஆரிய சத்தியம் எது? ஆம்.. **'துக்க நிரோத காமினி படிபதா அரிய சச்சங்'** துக்கத்தை அழிக்கக்கூடிய செயற்பாடு எனும் ஆரிய சத்தியம்.

ஏன் புத்த பகவான் இந்நான்கையும் ஆரிய சத்தியங்கள் என்று குறிப்பிடுகிறார்? புத்த பகவான் இதற்கு விளக்கமளிப்பதற்கு சில சொற்களை உபயோகித்துள்ளார். அதில் ஒன்றுதான் **'ததா'** ததா என்றால் இவ்வுலகில் எந்தவொரு காலகட்டத்திலும் காணக்கூடியதாகும். அடுத்ததுதான் **'அவிததா'** மறுவடிவங்கள்

பெறாது உள்ளதை உள்ளவாறே உய்த்தறிய முடியும். காண முடியும். அடுத்ததுதான் **'அனஞ்ஞதா'** இந்த ஆரிய சத்தியம் ஒருபோதும் எந்த சந்தர்ப்பங்களிலும் மாற்றமுறாது. அதாவது புத்த பகவான் துக்கமெனும் ஆரிய சத்தியத்தில் பஞ்ச உபாதானஸ்கந்தம் துக்கம் என்று மொழிந்தார். இவ்வாறு அவர் மொழிந்த பஞ்ச உபாதானஸ்கந்தம் துக்கம். என்பது ஒருபோதும் சுகம் எனும் இயல்பினை அடையாது. அது துக்கம் எனும் மாற்றமுறாத ஆரிய சத்தியமாகும்.

இற்றைக்கு பல கோடி கல்பங்களுக்கு முன் தோன்றிய புத்தர்மார்கள் துக்கம் என்று எவ்விடயத்தினை உய்த்தறிந்தார்களோ இன்றும் எம்மால் துக்கம் என அதனையே உய்த்தறிய வேண்டியதாக இருக்கிறது. இதற்கு முதல் தோன்றிய புத்தர்மார்கள் துக்கத்தின் தோற்றம் என்று எதனை அழித்தார்களோ இன்று நாம் துக்கத்தின் தோற்றம் என்று அவ்விடயத்தையே அழிக்க வேண்டியதாக உள்ளது. இதற்கு முதல் தோன்றிய புத்தர்மார்கள் துக்கத்தின் அழிவு என்று உறுதி செய்த அதே விடயத்தினை தான் இன்று நாமும் துக்கத்தின் அழிவு என்று உறுதி செய்ய வேண்டிதாக இருக்கிறது. இதற்கு முதல் தோன்றிய புத்தர்மார்கள் துக்கத்தினை நீக்கும் பாதை என நடுநிலை பாதையான எண்சீர் வழியை பயிற்சி செய்தார்களோ இன்று நாமும் துக்கத்தினை நீக்கும் பாதையாக எட்டு அங்கங்களையுடைய அதே எண்சீர் அங்கங்களை கொண்ட பாதையையே பின்பற்ற வேண்டியதாக இருக்கிறது. எட்டு அங்கங்கள் என்பது ஒருபோதும் ஒன்பது அங்கங்களாகாது. ஏழு அங்கங்களாகவும் ஆகாது. மைத்ரீ புத்த பகவான் தோன்றும் காலத்திலும் எமக்கு இவ்விடயங்களையே கற்க வேண்டியதாக இருக்கும். ஒருபோதும் மாற்றமுறாததுதான் இந்த தர்மமாகும். அதனால்தான் புத்த பகவான் இவற்றினை ஆரிய சத்தியமாக குறிப்பிட்டுள்ளார். அதேபோல் இந்த ஆரிய சத்தியங்களை உய்த்துணர்ந்தோர் ஆரிய சீடர்கள் என்றே குறிப்பிடப்படுவர்.

### சீலம், சமாதி, ஞானம் என்பன எண்சீர் வழியின் மூன்று பகுதிகளாகும்.

எண்சீர் பாதையினை எத்தனை பாகமாக பிரித்துள்ளனர்? மூன்று பாகங்களாக பிரித்துள்ளனர். அம்மூன்று பாகங்களும் எவை? ஆம்.. அவைதான் சீலம், சமாதி, ஞானம் என்பவை. சம்மா திட்டி, சம்மா சங்கல்ப்பம் எனும் இரண்டு எப்பாகத்திற்குரியது? ஆம்..ஞானம்

எனும் பாகத்திற்குரியதாகும். சம்மா வாச்சா, சம்மா கம்மந்த, சம்மா ஆஜீவ எனும் மூன்றும் சீலம் எனும் பகுதிக்குரியதாகும் சம்மா வாயாம, சம்மா சதி, சம்மா சமாதி என்ற மூன்றும் சமாதி எனும் பாகத்திற்குரியதாகும்.

நாம் மேலோட்டமாக பார்க்கும் போது ஞானம், சீலம், சமாதி என்றபடி இருப்பதை போலவே தோன்றுகிறது. தர்மம் என்றால் என்னவென்று அறியாத சரியான முறையில் யோனிசோ மனசிகாரம் செய்யாத ஒருவர் இதனை தவறாக புரிந்து கொள்ளலாம்.. "சீலம், சமாதி, ஞானம் என்று இதிலில்லை. மாறாக ஞானம், சீலம், சமாதி என்றே இருக்கிறது" என்று. இவ்வாறாக புத்த பகவான் போதிக்காததை கூறுவோறும் இருக்கின்றனர். அவர்கள் வழி தவறி போவதை யாராலும் தடுக்க இயலாது.

**சீலம், சமாதி, ஞானம் என்பவை எண்சீர் வழியில் இருக்கிறது.**

இது தொடர்பான மிகவும் ஒரு சிறந்த விளக்கம் 'மஜ்ஜிம நிகாயம்'எனும் புனித நூலில் 'சுல்ல வேதல்ல' எனும் சூத்திரத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சூத்திரத்தில் விசாக எனும் ஒரு உபாசகன் தம்மதின்னா எனும் அரஹத்தேரியிடம் "புண்ணியமிகு பிக்குனி அவர்களே, சீலம், சமாதி, ஞானம் என்பவற்றுள் ஆரிய அட்டாங்கிக மார்க்கம் உள்ளதா? அல்லது ஆரிய அட்டாங்கிக மார்க்கத்தினுள் சீலம், சமாதி, ஞானம் என்பனவை உள்ளதா?" எனக்கேட்டார். அதற்கு அரஹத் தேரியான தம்மதின்னா அவர்கள், "புண்ணியமிகு விசாக, சீலம், சமாதி, ஞானம் என்பவற்றுள் தான் ஆரிய அட்டாங்கிக மார்க்கம் இருக்கிறது". என்று கூறினார். அப்படியாயின் எதனுள் ஆரிய அட்டாங்கிக மார்க்கம் எனும் எண்சீர் மார்க்கம் இருக்கிறது? ஆம்.. சீலம், சமாதி, ஞானம் என்பவற்றுள் தான் ஆரிய அட்டாங்கிக மார்க்கம் இருக்கிறது. ஆரிய அட்டாங்கிக மார்க்கத்தினுள் சீலம், சமாதி, ஞானம் இருக்கிறது என்றிருந்தால் மேற்கூறப்பட்ட எட்டு அங்கங்களை மாத்திரம் தான் எம்மால் பேச முடியும். புத்த பகவான் சீலம், சமாதி, ஞானம் தொடர்பாக பெருமளவிளாக போதித்துள்ளார். இவ்வாறு போதித்த அனைத்து போதனைகளிலும் ஆரிய அட்டாங்கிக் மார்க்கம் தொடர்பாகவே கூறப்பட்டுள்ளது. புத்த பகவான் இந்த ஆரிய அட்டாங்கிக் மார்க்கத்தின் மதலாவது அங்கமாக சம்மா திட்டியை ஏன் குறிப்பிட்டுள்ளார்? சீலத்தினை (ஒழுக்கத்தினை) குறிப்பிட்டிருக்கலாமே? யாராலும் பதிலளிக்க முடியாதல்லவா?

### சம்மா திட்டி முதலில் ஏன்?

சரி..இப்போது கூறுங்கள் சம்மா திட்டி தோன்றுவது எதனால்? ஆம்.. சத்தர்மத்தினை செவிமடுப்பதனாலும் செவிமடுத்த தர்மத்தினை யோ-னிசோ மனசிகாரம் (அறிவினால் ஆரய்தல்) செய்வதனாலுமாகும். சத்தர்மத்தினை செவிமடுக்காத அறிவினால் ஆராய்வு நடத்தாத ஒருவரால் புத்த பகவான் மொழிந்த சீலத்தினை (ஒழுக்கத்தினை) அனுசரிக்க முடியுமா? முடியாது. சம்மா திட்டிதான் மோட்சப்பாதையின் முதலாவது படியாகும். மோட்சத்தினை அடைவதற்காக ஒருவர் சீலத்தினை தமது வாழ்விற்கு பழக்கப்படுத்துகிறார். ஆனால் அவருக்கு சம்மா திட்டியை தன்னுள் தோற்றுவித்து கொண்ட பின்புதான் சிறப்பான முறையில் சீலத்தினை அனுசரிப்பதற்கு, ஆரியகாந்த (ஒருபோதும் பழுதாகாத) சீலத்தினை அனுசரிப்பதற்கு முடியுமானதாக இருக்கும். அதனால் தான் தர்மத்தில் சம்மா திட்டிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

### சம்மா திட்டி இருவகைப்படும்.

சம்மா திட்டி இருவகைப்படும். என்பதனை நன்றாக நினைவில் வைத்து கொள்ளுங்கள்.அதில் ஒன்றுதான் உலகியல் சம்மாதிட்டியாகும். உலகியல் சம்மாதிட்டி இருப்பவர் பாவ புண்ணியங்கள் என்பன ஏற்றுக்கொள்வார். நன்மையான செயல்களின் நல்விளைவுகளும் தீமையான செயல்களின் தீய விளைவுகளும் இருக்கிறது என்பதனை ஏற்றுக்கொள்வார். இவ்வுலம் மற்றும் மறுவுலகம் என்பன இருப்பதனை ஏற்றுக்கொள்வார். பெற்றோர்களுக்கு பணிவிடை செய்வதில் புண்ணியம் இருக்கிறது என்பதனை ஏற்றுக்கொள்வார். சாதாரண மனிதர்களை விட மனதினை விருத்தி செய்தோர்கள் இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்வார். சேவை செய்வதில் விளைவுகள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்வார். தாய் தந்தை இல்லாது, முட்டையினுள் பிறவாது, ஈரலிப்பான இடத்திலில்லாது எடுக்கும் பிறவிகள் உண்டு, அதாவது ஓபபாதிக பிறப்புகள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்வார். இவ்வுலக உண்மைகளை உய்த்துணர்ந்த மனமாசுகளை அழித்த புத்தர் போன்ற உத்தம புருஷர்கள் இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்வார்கள்.

## உலகியில் சம்மா திட்டி மூலம்!

இவ்வாறு மேற்கூறப்பட்ட விடயங்களையும் ஒருவர் ஏற்றுக்கொள்வாராயின் அவர் உலகியல் சம்மா திட்டி உள்ளவராவார். அதாவது புத்த பகவானொருவர் வாழ்க்கை தொடர்பாக கூறும் கருத்துக்களை அது அப்படியே என ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் ஏற்பட்ட ஒருவராவார். அதுதான் உலகியல் சம்மா திட்டி. உலகியில் சம்மா திட்டி உள்ள ஒருவரால் தான் ஆன்மீக சம்மா திட்டியை தோற்றுவித்து கொள்ளலாம். அதாவது பாவ புண்ணியங்கள் என்பன ஏற்றுக்கொள்ளாத, பிறவிப்பயணமான சன்சாரத்தினை ஏற்றுக்கொள்ளாத ஒருவர் அவற்றை விட கம்பீரமான ஆழமான ஒரு விடயத்தினை ஏற்றுக்கொள்வாரா? இல்லை. ஒருபோதும் இல்லை. ஏன்? ஏனெனில் அவரிடம் உலகியில் சம்மா திட்டி இல்லை.

## நாற்பேருண்மைகளை உய்த்துணர்தலே ஆன்மீக சம்மா திட்டி

புத்த பகவான் மொழிந்த இரண்டாவது சம்மா திட்டியை தான் நாம் இப்போது பார்க்க போகிறோம். எட்டு அங்கங்களையுடைய ஆரிய அட்டாங்கிக பாதையினை பற்றியே நாம் இப்போது பேசுகிறோம். ஆன்மீக சம்மா திட்டி என குறிப்பிடுவது எதனை? நாற்பேருண்மைகளின் உய்த்துணர்தலே ஆன்மீக சம்மா திட்டியாகும். அப்படியாயின் இந்த தர்மத்தினுள் புகுகின்ற ஒருவர் நாற்பேருண்மைகளை உய்த்துணர்வதற்காக தான் செவிமடுக்கும் தர்மத்திற்கேற்ப அறிவினால் ஆராயும் போது செயற்பாட்டு ரீதியாக அவர் தர்மத்துடன் தொடர்புருகிறார். அவரால் இவ்வாழ்வின் யதார்த்தத்தினை கொஞ்சம் கொஞ்சமாக உய்த்துணரும் திறமை கிடைக்கும்.

இங்குள்ள அனைவருக்குமே நாற்பேருண்மைகள் தொடர்பானதொரு அறிவிருக்கிறது. நாம் படிச்சசமுப்பாதம், பஞ்ச உபாதானஸ்கந்தம் என்பன தொடர்பாகவும் கற்றுள்ளோம். நாம் இப்போது எதை பற்றி பேசினோம்? துக்கம் எனும் ஆரிய சத்தியம். அடுத்தாக துக்கத்தின் தோற்றம் எனும் ஆரிய சத்தியம். மூன்றாவதாக துக்க அழிவு எனும் ஆரிய சத்தியம். நான்காவது எது? ஆம்.. துக்கத்தை அழிக்கக்கூடிய செயற்பாடு எனும் ஆரிய சத்தியம். எனும் நாற்பேருண்மைகள் தொடரபாக பேசினோம்.

**படிச்சசமுப்பாதம் (காரண காரிய செயற்பாடு), பஞ்ச உபாதானஸ்கந்தம் என்பன துக்கமே!**

நாம் முதலாவது ஆரிய சத்தியம் தொடர்பாக கற்றுக்கொள்ளும் போது அங்கு பஞ்ச உபாதானஸ்கந்தம் தொடர்பாக கூறப்பட்டிருந்தது உங்களுக்கு நினைவிருக்கும். இந்த பஞ்ச உபாதானஸ்கந்தம் இருக்கும் இடத்தில் படிச்சசமுப்பாதமும் இருக்கும். படிச்சசமுப்பாதம் இருக்கும் இடத்தில் பஞ்ச உபாதானஸ்கந்தம் இருக்கும். அதேபோல் படிச்சசமுப்பாதம் நிலவும் இடத்தில் துக்கம் இருக்கும். துக்கத்திற்கான காரணமும் இருக்கும். அது எவ்வாறு? ஆம்..**'வேதனா பச்சயா உபாதானங், உபாதான பச்சயா பவோ, பவ பச்சயா ஜாதி, ஜாதி பச்சயா ஜரா மரணங் சோக பரிதேவ துக்க தோமனஸ்ஸ "பாயாசா சம்பவந்தீ. ஏவமேதஸ்ஸ கேவலஸ்ஸ துக்கக்கந்தஸ்ஸ சமுதயோ ஹோதி'** (அனுபவிப்பினால் பிணைப்பு ஏற்படுகிறது. பிணைப்பினால் பலனளிக்கும் கர்மங்கள் சேர்கிறது. பலனளிக்கும் கர்மங்களிருப்பதால் பிறப்பு தோன்றுகிறது. பிறப்பினால் அனைத்து துக்கங்களும் தோன்றுகிறது.) இவ்வாறாக துக்கத்தின் தோற்றத்திற்கு தேவையான காரணிகள் அமையும். படிச்சசமுப்பாதத்தில் தான் இந்த தர்மம் முழுமையாக தெளிவுறுகிறது. அதனூடாக பஞ்ச உபாதானஸ்கந்தத்தின் இயல்பினை உணர்ந்து கொள்ளும் போது ஒருவருக்கு வாழ்க்கையின் உண்மை நிலையை உணரக்கூடியதாக இருக்கும்.

புண்ணியவர்களே! உங்களுக்கு தம்ம சக்கபவத்தன சூத்திரத்தின் முதல் பாகம் தொடர்பான பொதுவான அறிவிருக்குமல்லவா? அந்த போதனையை முழுமையாக மனனம் செய்தவர்கள் யாரேனும் இங்கிருக்கிரீர்களா? மிகவும் சந்தோஷம் ஒருவரேனும் இருக்கிறாரே..ஏனெனில் தற்காலத்தில் ஒருவரையேனும் தேடிக்கொள்வது மிகவும் கடினம். அந்தளவிற்கு தர்மத்திலிருந்து தள்ளி நிற்கும் பௌத்தர்களே நம் நாட்டில் வாழுகின்றனர்.

**குறுகிய வட்டத்தில்**

தான் ஒரு சிறந்த பௌத்தன் எனக்கூறிக்கொள்ளும் ஒருவர் என்னிடம் "பெற்றோர்களை கைவிட்டு ஒருவர் துறவு பூணுவதை நான் ஆதரிக்க மாட்டேன்." எனக்கூறினார். அதற்கு நான் "அது உங்களுடைய குறுகிய சிந்தனை. நீங்கள் பிறந்து மடியும் சிறு காலகட்டத்தினையே சிந்தித்தீர்கள். புத்த பகவானும்

இவ்வாறானதொரு குறுகிய சிந்தனையினுள் சிந்தித்திருந்தால் இன்று எமக்கிந்த தர்மம் கிடைத்திருக்குமா? உலக உயிர்களின் துன்பத்திற்கான முடிவு கிடைத்திருக்குமா? நன்மை எது தீமை எது என நாம் எவ்வாறு பகுத்தறிந்திருப்போம்? பெற்றோருக்கு பணிவிடை செய்வது புண்ணியம் என்பதனை நாம் எவ்வாறு அறிநத்திருப்போம்? இவற்றையெல்லாம் எமக்கு புத்த பகவானல்லவா கற்றுக்கொடுத்தார்? புத்த பகவான் இல்லையென்றால் இன்று எமக்கு தர்மமும் இல்லையல்லவா? தர்மாசோக மன்னன் இவ்வாறு சிந்தித்து இருந்தால் மகிந்த தேரர் ஒருவர் இலங்கைக்கு வந்திருக்க முடியாதல்லவா? மேலும் நான் அவரிடம் கூறினேன். அறிவுள்ளவர்களால் பாராட்டப்படும் மூன்று விடயங்களை புத்த பகவான் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலாவது விடயம் தான் தானமளித்தல். அது ஒரு சிறந்த விடயம் என அறிவாளிகள் பாராட்டுவார்கள். இரண்டாவது விடயம் தான் பெற்றோர்களுக்கு பணிவிடை செய்தல். அதுவும் ஒரு சிறந்த விடயம் என அறிவாளிகள் பாராட்டுவார்கள். மூன்றாவது விடயம் தான் துறவு பூணுதல். அவ்விடயமும் ஒரு சிறந்த விடயம் என அறிவா-ளிகள் பாராட்டுவார்கள். நான் அவரிடம், இம்மூன்று விடயங்களையும் பாராட்டி சிறந்த அறிவாளியாகுங்கள்" எனக்கூறினேன். அப்படி அவருக்கு கூறக்காரணம் தனது அறிவினை எவ்வாறு செயற்படுத்த வேண்டும் எனும் அறிவு அவர்களிடம் இல்லை.

சிலவேளை தன்னுடைய குடும்பத்திலே துறவு பூண்டு மோட்சத்தை உறுதி செய்து ஏனையோருக்கும் அதனை பகிர்ந்தளிக்கும் புண்ணியமிருக்கும் ஒருவர் இருக்கலாம். ஆனால் பிறந்திருப்பது துறவை ஏளனப்படுத்தும் ஒரு குடும்பத்தில் என்றால் அவரால் ஒருபோதும் துறவை நோக்கி செல்ல இயலாது. அவற்றையெல்லாம் இழந்தபடி தான் அவருக்கு வாழ நேரிடும். நான் இவ்வாறு கூறுவது தம்மை பௌத்தர்கள் என வெளியே காட்டிக்கொள்ளும் ஆனால் உண்மையான பௌத்தரல்லாதவர்களின் பொதுவான இலட்சணங்களையே! நான் மேலும் அவரிடம் கூறினேன். என்னுடைய பெற்றோர்களும் உங்களை போல் நினைத்திருந்தால் இன்று இவ்விடத்தில் நானிருக்க மாட்டேன் என்று.

### சுந்தரமான சரளமான ஒரே ஒரு இலட்சியம் தான்

நான் இல்லற வாழ்வினை மேற்கொண்டிருந்தால் என்னால் தர்மத்தினை கற்றுக்கொள்ள போதுமான ஓய்விருந்திருக்குமா?

இல்லை. பாருங்கள், எமது வாழ்வினை ..நாம் நினைத்தவுடன் ஆரணியத்துக்கு செல்கிறோம், தியானம் செய்கிறோம், தர்மத்தினை கற்கிறோம், தர்மத்தினை ஏனையோருக்கு பகிர்ந்தளிக்கிறோம். எம்மிடம் சிறு தேவைகளும் வேலைகளும் தான் உள்ளன. நினைத்து பாருங்கள், எமது வாழ்க்கை எவ்வளவு சரளமானதென்று. நான் இல்லற வாழ்வினை மேற்கொண்டிருந்தால் என்னால் இவற்றை செய்திருக்க முடியாது. இவ்வாழ்விலுள்ள பெறுமதியை பெரும்பாலானோலர் அறியாதோர்களாகவே இருக்கிறார்கள். தான் ஒரு பௌத்தன் என வெளியே காட்டிக்கொண்டு தர்மத்தினையே இகழுகின்றனர். சித்தார்த்த குமரன் சம்மா சம்புத்த நிலையை துறவறம் பூண்டதாலயே அடைய முடிந்தது.

**புத்த பகவான் துக்கத்தை ஆரிய சத்தியமாக பார்த்தல்.**

தம்ம சக்க பவத்தன சூத்திரத்தின் மீது எமது கவனத்தை செலுத்துவோம். இந்த போதனையின் முதற்பாகம் நினைவிருக்கிறதா? ஆம்..புத்த பகவான் அடுத்தாக இவ்வாறாக மொழிந்தார். **‘இதங் துக்கங் அரியசச்சந்தி மே பிக்கவே புப்பே அனனுஸ்சுதேசு தம்மேசு’** என்று அதாவது புத்த பகவான் இந்த துக்கம் ஒரு ஆரிய சத்தியம் என்பதனை உய்த்துணர்ந்தார். அது **‘புப்பே அனனுஸ்சுதேசு’** யாரும் சொல்லக்கேட்டிராதது. **‘சக்குங் உதபாதி’** தர்ம விழிகள் தோன்றியது. **‘ஞானங் உதபாதி’** ஞானம் தோன்றியது. **‘பஞ்ஞா உதபாதி’** உய்த்தறிந்து கொள்ளும் சக்தி தோன்றியது. ‘விஜ்ஜா உதபாதி’ மெய்ஞானம் உதித்தது. **‘ஆலோகோ உதபாதி’** அஞ்ஞான காரிருள் நீங்கி ஒளி தோன்றியது. எது தொடர்பான ஞானம்? **‘இதங் துக்கங் அரியசச்சங்’** இந்த துக்கம் ஒரு ஆரிய சத்தியம் எனும் ஞானம் பிறந்தது.

**காலத்திற்கும் அவகாசத்திற்கும இடைப்பட்ட அனைத்துமே துக்கமே!**

இந்த துக்கத்தினை ஏன் ஆரிய சத்தியமாக புத்த பகவான் குறிப்பிட்டார் என்பதனை இப்போது உங்களால் கூற முடியுமா? நான் உங்களுக்கு அதனை புரிந்து கொள்ள மூன்று சொற்களை கூறினேன் அல்லவா? ஆம்..அதில் முதலாவது தான் ‘ததா’ இந்த துக்கத்தின் இயல்பு இவ்வுலகில் எல்லா காலத்திலும் காணப்படும் ஒரு விடயமாகும். உலகில் மாறாத சத்தியமாக நிலவி வருகிறது. அடுத்தது ‘அவி-ததா’ மறுவடிவங்கள் பெறாது உள்ளதை உள்ளவாறே உய்த்தறிய

முடியும். காண முடியும். அதேபோல் 'அனஞ்ஞுதா' இந்த ஆரிய சத்தியம் ஒருபோதும் எந்த சந்தர்ப்பங்களிலும் மாற்றமுறாது
மாற்றமுறாதது எது? ஆம்.. 'துக்கங் அரியசச்சங்' துக்கம் எனும் ஆரிய சத்தியம் ஒருபோதும் இன்னுமொன்றாக மாறாது. அவைதான் பிறப்பு, முதிர்ச்சி அடைதல், நோய் நொடிகள் ஏற்படுதல், மரணமடைதல், மற்றும் தான் விரும்புவது கிடைக்காமை பிரியமற்றவைகளோடும் பிரியமற்ற நபர்களோடும் சேர்ந்திருத்தல், பிரியமான வஸ்துக்களிலிருந்தும் பிரியமான நபர்களிலிருந்தும் பிரிவது எனும் துக்கங்கங்கள் உலகில் எல்லா காலத்திலும் நிலைத்திருப்பதாகும். ஒரு ஆரிய சத்தியமாகும். அப்படியாயின் காலம் மற்றும் அவகாசத்திடையே பற்றுதலுக்குள்ளான ஏதாவது உருவம் இருக்குமாயின், அனுபவிப்பு இருக்குமாயின், இணங்காணல் இருக்குமாயின், சிந்தனை இருக்குமாயின் விஞ்ஞானயம் இருக்குமாயின் அது துக்கமே! இந்த துக்கம் இவ்வுலகின் மாற்றமுறாத நிலவி வரும் ஒரு சத்தியமாகும். இதுதான் முதன் முதலாக பகவான் பெற்றுக்கொண்ட ஞானமாகும். துக்கம் ஆரிய சத்தியம் எனும் ஞானம்.
இவ்வாறு எங்களால் புரிந்துணர முடியுமா? முடியாதா? முடியும். யோனிசோ மனசிகாரத்தில் ஈடுபட்டால் எம்மாலும் உய்த்துணர முடியும். ஆம்..இன்றும் எம்மால் இந்த சத்தியத்தை காண முடியும். ஆகையால் **'சத்யஞான'** எனும் இயல்பினை கொண்டதாகவே இந்த தர்மம் விளங்குகிறது. அதுதான் இந்த துக்கம் எனும் ஆரிய சத்தியம் மாற்றமுறாதவொரு சத்தியமே எனும் ஞானம்.

## துக்கத்தினை என்ன செய்ய வேண்டும்.

**'தங் கோ பனிதங் துக்கங் அரியசச்சங்'** ஆரிய சத்தியமான இந்த துக்கத்தினை நாம் என்னவென்று கற்றோம்? ஆம்.. பிறப்பு, முதிர்ச்சி என்பன துக்கம், என கற்றுக்கொண்டோம். இது உண்மையாகும். இன்றளவிலும் இது உண்மையல்வா? முதிர்ச்சியடையாத யாரேனும் உள்ளனரா? அப்படி யாரேனும் இருந்தால் இது ஆரிய சத்தியமன்று. நோய் நொடிகள் ஏற்படுவது துக்கம் என்பது சத்தியமாகும். மரண-மடைவது துக்கமாகும் அதும் சத்தியமே! இங்கு கூறப்படும் ஒரு சத்தியமேனும் பொய்யாகுமா? இல்லை. பிரியமற்றவைகளோடும் பிரியமற்ற நபர்களோடும் சேர்ந்திருத்தலும் துக்கமாகும். பிரிய-மான வஸ்துக்களிலிருந்தும் பிரியமான நபர்களிலிருந்தும் பிரிவதும் துக்கமாகும். இவை எப்போதாவது யாரேனும் ஒருவருக்காவது

இன்பமாக இருந்திருக்குமா? இல்லை. ஒருக்காலும் இல்லை. சுருங்கக்கூறின் பஞ்ச உபாதானஸ்கந்தங்களே துக்கம் எனக்கூறிய இந்த சத்தியத்தினை **'பரிஞ்ஞெய்யந்தி'** முற்றுமுழுதாக உணர வேண்டுமென்று, அறிய வேண்டுமென்று, புத்த பகவான் எவ்வித குருபதேசமின்றி உய்த்துதுணர்ந்தார். அறிந்து கொண்டார். இங்கு நான் **'பரிஞ்ஞெய்யங்'** என்று ஒரு புதிய சொல்லை கூறினேன். அதன் அர்த்தம் தான் முழுமையாக புரிந்துணர வேண்டும் என்பதாகும். அதன் அர்த்தத்தினை நான் மேலும் தெளிவுபடுத்துகிறேன். துக்கத்தினை ஆரிய சத்தியமாக உய்த்துணர வேண்டும். துக்கத்தின் மீது தான் 'நான்', 'எனது', 'எனக்குரியது' என்று ஏற்றுக்கொண்ட அஞ்ஞானமும் பேராசையும் முற்றுமுழுதாக அழியும் வரை அதே உய்த்துணர்வோடிருக்க வேண்டும். இதனை தான் நாம் முழுமையாக புரிந்துணர வேண்டும். நாம் அனைவருமே 'நான்' என்று, 'எனது' என்று, 'எனது ஆத்மா' என்று எமக்குள்ளே அஞ்ஞானத்தை கட்டியெழுப்பி வைத்துள்ளோம். அதன் மீது பேரவாவும் கொண்டுள்ளோம். அதனால்தான் எம்மால் இவற்றை உணர முடியாதுள்ளது. இந்த அஞ்ஞானமும் பேரவாவும் முற்று முழுதாக அழியும் வண்ணம் நாம் தர்மத்தினை உய்த்துணர வேண்டும். முழுமையாக உய்த்துணர வேண்டும், என புத்த பகவானுக்கு தர்மவிழிகள் உதித்தது. அறிவு தோன்றியது. ஞானம் உதித்தது. ஒளி தோன்றியது. இதுவே **'க்ருத்ய ஞான'** எனப்படுகிறது. அதாவது துக்கத்தினை என்ன செய்ய வேண்டும் எனும் உணர்வு. நாம் இப்போது பேசியது துக்கம் எனும் ஆரிய சத்தியமாகும். இந்த ஆரிய சத்தியத்தினை உய்த்துணர வேண்டும். எவ்விதமாக உய்த்துணர வேண்டும்? நாம் துக்கத்தின் மீது கொண்டுள்ள அஞ்ஞானமும் பேராசையும் அழியும் வண்ணம் உய்த்துணர வேண்டும். நாம் மீண்டும் முதலிலிருந்து மீட்டு பார்ப்போம். துக்கம் என்பது ஒரு ஆரிய சத்தியம் என்பதனை புத்த பகவான் உணர்ந்தார். இவ்விடயம் புரிந்ததா? சரி.

இந்த துக்கத்தினை நாம் எவ்வாறு ஏற்றுக்கொண்டுள்ளோம்? 'நான்' என்று, 'எனது' என்று, 'எனக்குரியது' என்று, பஞ்ச உபாதானஸ்கந்தத்தினையே தான் நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். அது நாம் துக்கத்தின் மீது கொண்டுள்ள அஞ்ஞானமா? மெய்ஞானமா? அஞ்ஞானமாகும். இந்த அஞ்ஞானத்தை முற்றாக அழியும் வண்ணம் இந்த துக்கத்தின் உண்மை நிலையை உய்த்துணர வேண்டும். என்று புத்த பகவானுக்கு ஞானம் பிறந்தது. அந்த ஞானம் தான் **'க்ருத்ய ஞானம்'** எனப்படுகிறது.

'க்ருத்ய' என்றால் செய்ய வேண்டியது. எனப்பொருள்படும். செய்ய வேண்டியதை செய்தாயிற்று எனும் ஞானம். **'தங் கோ பனிதங் துக்கங் அரியசச்சங் பரிஞ்ஞாதன்தி மே பிக்கவே புப்பே அனனுஸ்சுதேசு தம்மேசு'** புத்த பகவான் இந்த துக்கம் எனும் ஆரிய சத்தியத்தை யாரிடமும் கேட்டு அறிந்துகொள்ளாமல் **'பரிஞ்ஞாதங்'** முழுமையாக அறிந்து கொண்டார். அதாவது இதுவரை துக்கம் தொடர்பாக தனக்கிருந்த அஞ்ஞானத்தையும் பேராசையையும் முழுமையாக அழித்து துக்கத்தின் உண்மையான இயல்பினை உய்த்தறிந்து கொண்டாயிற்று எனும் ஞானம் உதித்தது. அதுதான் செய்ய வேண்டியதை முழுமையாக செய்து முடித்தாயிற்று எனும் ஞானம். அதுதான் **'க்ருதக்ஞான'** எனப்படுகிறது. இங்கு மூன்று விடயங்கள் தொடர்பாக கூறப்படுகிறது. ஒன்றுதான் இது ஒரு ஆர்ய சத்தியம் என்பதனை உணரல், இந்த ஆரிய சத்தியத்தினை உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும்., உய்த்துணர்ந்தாயிற்று எனும் ஞானம். ஏனையவற்றை புரிந்து கொள்ள வேண்டுமாயின் இவ்விடயத்தினை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் வாழும் வாழ்க்கையிலும் இவ்வாறில்லையா? எமக்கு ஏதாவது ஒரு காரியம் செய்ய வேண்டும். எமக்கு தெரியும் அக்காரியத்தை செய்ய வேண்டும் என்று. அதன்பின் நாம் அச்செயலை செய்கிறோம். அதேபோல் அதனை செய்து முடிக்கிறோம். அதுபோன்ற ஒரு முறைதான் இங்குள்ளது.

என்ன செய்ய வேண்டும்?

பாருங்கள், புண்ணியவர்களே! புத்த பகவானது தர்மம் எவ்வளவு அறிவுபூர்வமானதென்பதனை. 'சத்யஞான', 'க்ருத்யஞான', 'க்ருதக்ஞான' எனும் மூன்றினையும் இணைத்து பாலி மொழியில் **'திபரிவட்ட'** என புத்த பகவான் குறிப்பிடுகிறார். அப்படியாயின் நாம் முதலாவதாக சத்யஞானத்தினையே எம்முள் தோற்றுவித்து கொள்ள வேண்டும். அதாவது துக்கம் என்பது ஒரு ஆரிய சத்தியம் எனும் உணர்வு இருக்க வேண்டும். செவிமடுக்கும் புத்த பகவானது தூய போதனைகளை அறிவினால் ஆராய்ந்து இரு ஒரு ஆரிய சத்தியமே எனும் உணர்வினை ஏற்படுத்தி கொள்ள வேண்டும். அப்போது தான் சம்மா திட்டி எம்முள் தோன்றும். தர்ம மார்க்கத்தில் முதலாவதாக தோன்றுவது சத்திய ஞானமாகும். அதன் பிறகுள்ள பயணத்தினை அவர் எப்படியும் முழுமைபடுத்திக்கொள்ள முடியும். அதாவது இந்த துக்கம் எனது வாழ்க்கையில் எவ்வாறு செயற்படுகிறது என்பதனை உய்த்தறிய வேண்டும். எனும் எண்ணம்

மனதில் தோன்றும். அதன் பின்னர் தனது எண்ணத்தினை பூர்த்தி செய்வதற்காக முயற்சியும் வீரியமும் செய்வார். அதன் விளைவாக அவர் துக்கத்தினை உய்த்துணர்ந்து கொள்வார். இவ்வாறாக துக்கம் தொடர்பாக மூன்று முறைகளில் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும்.

### துக்கத்தின் தோற்றமும் ஒரு ஆரிய சத்தியம்.

அடுத்ததுதான் துக்கத்தின் தோற்றம். அதுவும் ஒரு ஆரிய சத்தியம். **'இதங் துக்க சமுதயங் அரியசச்சந்தி'** இந்த துக்கத்தின் தோற்றமும் ஒரு ஆரிய சத்தியமே என்பதனை புத்த பகவான் உணர்ந்தார். ஆரிய சத்தியம் என குறிப்பிடுவதற்கான காரணம்? துக்கம் இருக்கும் இடத்தில் கண்டிப்பாக துக்கத்திற்கான காரணமும் இருக்கும். இந்த காரணம் துக்கத்துடனே இருக்கும் ஒன்றாகும். இந்த காரணமும் ஒரு ஆரிய சத்தியமாகும். **'ததா'** இந்த துக்க தோற்றத்தின் இயல்பு இவ்வுலகில் எல்லா காலத்திலும் காணப்படும் ஒரு விடயமாகும் .துக்கத்துடனே இணைந்திருப்பதாகும். துக்கத்திலிருந்து நீங்காமல் இருப்பதாகும்.

### காரணம் பேராசையாகும்

புத்த பகவான், துக்கத்தின் தோற்றம் எது? துக்கம் தோன்றுவதற்கான காரணம் எது? என மொழிந்தார். **'இதங் கோ பன பிக்கவே துக்க சமுதயங் அரிய சச்சங்'** புண்ணியமிகு பிக்குக்களே! இது தான் துக்கத்தின் தோற்றம் எனும் ஆரிய சத்தியம், நிரந்தரமாக இருக்கும் சத்தியம். **'அனஞ்ஞதா'** மாறுமடையாத ஆரிய சத்தியம். அதுதான் பேராசை. துக்கத்தின் தோற்றம் தான் தண்ஹா எனப்படும் பேராசையாகும்.

### மூவகை ஆசைகளையும் நீக்க வேண்டும்.

புத்த பகவான் இந்த தண்ஹா எனப்படும் பேராசையை மூன்று வகையாக வகுத்து கூறினார் அவைதான் காம தண்ஹா, பவ தண்ஹா, விபவ தண்ஹா எனப்படுபவையாகும். இம்மூன்றினாலும் தான் துக்கம் தோன்றுகிறது. காம தண்ஹா என்றால் உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வுக்ள என்பவற்றின் மீதான விருப்பாகும். 'பவ தண்ஹா' என்றால் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கான ஆசையாகும். விபவ தண்ஹா என்றால் பிறவாமலிருப்பதற்கான ஆசையாகும். இம்மூன்றுமே அழிய வேண்டும். இவ்விடயங்களை அறியாத தம்மை பௌத்தர்கள்

எனக்காட்டிக்கொள்ளும் மூடர்கள் “மோட்சம் அடையவும் ஒருவருக்கு ஆசைதானே காரணமாக இருக்கிறது” எனக்கூறுகின்றனர். அப்படியாயின் அதுவும் ஒரு பேராசைதானே எனக்கூறுகின்றனர். இப்படியெல்லாம் கூறுவது தர்மத்தினை அறியாத மூடர்களேயாவர்.

## நிலையாதிருக்க வேண்டும் எனும் ஆசையும் துக்கத்திற்கே

புத்த பகவான் நிலையாதிருக்க வேண்டும் எனும் ஆசையும் துக்கமே. அதனையும் அழிக்க வேண்டும் என மொழிந்தார். அதாவது இவையெதுவுமே நிலையாமல் இருக்க வேண்டும் எனும் ஆசையாகும். உடலும் மனமும் இல்லாதிருக்க விரும்புவோர்கள் இருக்கிறார்கள். அவ்வாறோனோர்கள் எம் நாட்டிலும் இருக்கிறார்கள். அதனால்தான் சிற்சில யோகிமார்கள் உடலும் உள்ளமும் உணராமல் போகும் வண்ணம் தியானங்களை பயிற்சி செய்கிறார்கள். இவ்வாறான தியானங்களை பயிற்சி செய்வோர்கள் ‘அசஞ்ஞ’ உலகங்களில் பிறப்பார்கள். அதுவும் ஒரு பிறவிதான். எவ்விடத்தில் பிறவி இருக்கிறதோ அங்கு துக்கம் இருக்கும். துக்கத்திற்கான காரணமும் இருக்கும். போகும் இடமெல்லாம் இன்பத்துடன் ஏற்றுக்கொள்ளல். புத்த பகவான் இந்த தண்ஹா எனப்படும் பேராசையானது ‘**போனோபவிகா**’ புனர்பவத்தினை தரும், மீண்டும் பிறப்பதற்கு வழிவகுக்கும். அதாவது மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு கர்மத்தினை ஒழுங்குற செய்வதாகும். ஆசையின் இன்னுமொரு பண்புதான் **‘நந்திராகசஹகதா’** விருப்புடன் ஒட்டிக்கொள்ளல். **‘தத்ரதத்ராபினந்தினீ’** அவ்வவ் இடங்களை இன்பத்தோடு ஏற்றுக்கொள்ளல்,

நாம் மனித உலகில் பிறந்தவுடன் இங்கிருக்கும் விடயங்களை மிகுந்த இன்பத்துடன் ஏற்றுக்கொண்டோம். வேறு உலகத்தில் பிறந்தாலும் அங்குள்ளவற்றையும் மிகவும் இன்பத்துடன் ஏற்றுக்கொள்வோம். மிருகலோகத்தில் பிறந்தாலும் அப்பிறப்பினையும் இன்பத்துடனே ஏற்றுக்கொள்வோம். இவ்வாறாக கர்மத்தின் படி பிறக்கும் அனைத்து பிறவிகளையும் இன்பத்துடனே ஏற்றுக்கொள்வோம். நாம் இப்பிறவியை எவ்வளவு விருப்போடு ஏற்றுக்கொண்டோமோ அவ்வாறே நாம் முதல் பிறந்த பிறவியையும் இன்பத்தோடு தான் ஏற்றுக்கொண்டோம். எதிர்காலத்தில் எங்கு பிறந்தாலும் அப்பிறவிகளையும் இன்பத்துடனே ஏற்றுக்கொள்வோம். இதுதான் தத்ரதத்ராபிநந்தினீ அதாவது அவ்வவ் இடங்களை இன்பத்துடனே ஏற்றுக்கொள்ளலாகும்.

### துக்கத்தின் தோற்றம் ஒரு ஆரிய சத்தியமாகும்.

துக்கத்தோடு பிணைக்கப்பட்டுள்ள துக்கத்திற்கு காரணமான தண்ஹா எனப்படும் பேராசையும் ஒரு ஆரிய சத்தியம் எனும் அறிவு புத்த பகவானுக்கு தோன்றியது. அதனைத்தான் தர்ம விழிகள் தோன்றியது, அறிவு தோன்றிது, ஞானம் உதித்தது, மெய்ஞானம் உதித்தது, ஒளி தோன்றியது. என்று மொழிந்தார். துக்க தோற்றத்திற்கு காரணமான பேராசை என்பதனை எம்மால் உணர்ந்து கொள்ள முடியுமா? முடியாதா? முடியும். குறைந்த பட்சம் எம்மால் இதனை உய்த்துணர முடியும் எனும் நம்பிக்கையாவது எமக்கிருக்க வேண்டும். அப்போதுதான் எம்மால் அதற்காக முயற்சி செய்யும் மனப்பான்மை தோன்றும். ஏனெனில் தனக்கு எவ்விதமான பிரயோசனமும் இல்லை எனத்தோன்றும் விடயங்களை யாரும் செய்ய விரும்பமாட்டார்கள். அர்த்தமற்ற பெறுமதியற்ற விடயங்களை அடைவதற்கு எவரும் முயற்சி செய்ய மாட்டார்கள்.

உண்மையாகவே தர்மத்தினை பெறுமதியினை உணர்ந்தவர்கள் இரவும் பகலுமாக இந்த தர்மத்தினை உய்த்தறிந்து கொள்வதற்கே முயற்சி செய்வார்கள். தண்ஹா எனப்படும் பேராசை துக்கதோற்றத்திற்கான பிரதான காரணி என்பதனை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அதுதான் 'சத்யஞான' எனப்படுகிறது. நான் இப்போது கூறும் விடயங்களை நன்றாக நினைவில் வைத்து கொள்ளுங்கள். புத்தகங்களில் எழுதுவதற்கு முதலில் மனதில் எழுதிக்கொள்ளுங்கள். துக்கத்தினை பற்றி முதலில் நாம் கற்றோம். அது சத்தியஞானமாகும். இரண்டாவது ஞானம் எது? அஞ்ஞானமும் தண்ஹா எனப்படும் பேராசையும் நீங்கும் வண்ணம் அந்த துக்கத்தினை உய்த்துணர வேண்டும் எனும் 'க்ருத்ய' ஞானமாகும். அதனை முழுமையாக உய்த்துணர்ந்தாயிற்று எனும் மூன்றாவது ஞானம்தான் 'க்ருதக் ஞானம்' எனப்படுகிறது. அப்படியாயின் துக்கார்ய சத்தியம் தொடர்பாக தோன்றும் ஞானம் மூன்று வகையாகும். அதாவது 'சத்யஞான', 'க்ருத்ய ஞான', 'க்ருதக்ஞான' எனும் மூன்றுமாகும்.

### காரணம் சத்தியமாகும்.

இம்மூன்று ஞானங்களும் துக்கத்தின் தோற்றத்திற்கும் பொருந்துவதாகும். துக்கத்திற்கான காரணம் தான் தண்ஹா எனப்படும் பேராசை என்பதனை உணரும் அறிவுதான் சத்ய ஞா-னமாகும். அந்த பேராசையை தன்னோடு வைத்து கொள்ள

வேண்டுமா இல்லை அழிக்க வேண்டுமா? ஆம்.. அழிக்க வேண்டும். **'பஹாதப்பங்'** அழிக்க வேண்டும். இல்லாமல் செய்ய வேண்டும். தண்ஹா எனப்படும் பேராசையை இவ்வாறு அழிக்க வேண்டும், எனும் ஞானத்தினை எவ்வாறு அழைப்பது? ஆம்.. 'க்ருத்ய ஞானம்' என்பதுதான் அதன் பெயர். அப்படியாயின் மூன்றாவது ஞானம் எது? துக்கத்தினை உய்த்துணரும் போது பேராசைக்கு என்ன நடக்கும் ஆம். **'பஹீனங்'** அழிவுறும். அப்படியாயின் இரண்டாவது ஆரிய சத்தியத்தின் க்ருத்ய ஞானம் தான், இவ்வாறாக ஆசை அழிவுற்றது எனும் அறிவு. இங்கும் மூன்று வகையான ஞானம் தொடர்பாக கூறப்படுகிறது. இதுதான் **'திபரிவட்ட'** எனவும் அழைக்கப்படுகிறது. அப்படியாயின் துக்க தோற்றம் தொடர்பான ஞானங்கள் மூன்றாகும். அவை முறையே சத்ய ஞானம், க்ருத்ய ஞானம், க்ருதங் ஞானம் எனும் மூன்றுமாகும். இவற்றை மீண்டும் மீண்டும் செவிமடுக்கும் போதும் கற்றுக்கொள்ளும் போதும் கிரகித்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

### துக்க அழிவு என்பதும் ஒரு ஆரிய சத்தியமாகும்.

அடுத்ததுதான் **'இதங் கோ பன பிக்கவே துக்க நிரோதங் அரிய சச்சங்'** புண்ணியமிகு பிக்குக்களே! இதுதான் துக்க அழிவு எனப்படும் ஆரிய சத்தியமாகும். வெறும் ஒரு உண்மை மாத்திரம் அல்ல. அது ஒரு ஆரிய சத்தியமாகும். இது ஒரு ஆரிய சத்தியம் என்பதனை நன்றாக நினைவில் வைத்து கொள்ளுங்கள். அது எவ்வாறு ஒரு ஆரிய சத்தியமாகும்? 'ததா' அது நிலையானதெரு சத்தியமாகும். மாற்ற முடியாதது. 'அவிததா' வேறு இயல்பினை பெறாதது. 'அனஞ்ஞதா' இவ்வியல்புகளை உடையதுதான் துக்க அழிவு எனும் ஆரிய சத்தியம் எனும் அறிவு தோன்றினால் அதுவே துக்க அழிவு எனும் ஆரிய சத்தியத்தின் மீதுள்ள சத்திய ஞானமாகும்.

### தண்ஹா எனும் பேராசையை முழுமையாக அழிக்க முடியும்.

துக்கத்திற்கான காரணம் பேராசையாயின் அந்த பேராசையை முற்றாக அழிக்கும் போது துக்கமும் அழிந்து போகிறது. துக்க அழிவினது அதாவது மோட்சத்தின் இயல்பு தொடர்பாக புத்த பகவான் பின்வருமாறு மொழிகிறார். **'யோ தஸ்ஸாயேவ தண்ஹாய'** தண்ஹா எனப்படும் இந்த பேராசையையே, **'அசேச'** மீதமின்றி, **'விராக'** ஒட்டிக்கொள்ளாது, **'நிரோதோ'** ஆசையின் அழிவு **'சாகோ'**

பேராசையை கைவிடுதல், **'படினிஸ்ஸக்கோ'** பேராசையை முழுமையாக இல்லாதொழித்தல். **'முத்தி'** இந்த பேராசையிலிருந்து மீளுதல், **'அனாலயோ'** ஆசையையே முழுமையாக கைவிட்டுவிடுதல் இதுதான் **'துக்க நிரோதங் அரிய சச்சங்'** துக்கத்தின் அழிவு ஏனும் ஆரிய சத்தியம். இது ஒரு ஆரிய சத்தியம் எனும் அறிவு தோன்ற வேண்டும். அப்படியில்லாவிட்டால் சம்மா திட்டி தோன்றாது. சம்மா திட்டி என்றால்? ஆம்.. நாற்பேருண்மைகள் தொடர்பான உய்த்துணர்வாகும். சம்மா திட்டியை சரியான நோக்கம் எனும் மொழிபெயர்ப்பினால் பார்க்கும் போது இந்த அறிவு ஏற்படாது என்பதனை ஏற்றுக்கொள்கிறீர்களா? ஆம்..

**துக்கத்தின் அழிவினை உணரும் முறை.**

ஒரு ஆரிய சீடன் இதுதான் துக்க அழிவு அல்லது துக்க நிரோதம் எனும் சத்தியஞானத்திற்கு வருவது எவ்வாறு? முதன் முதலாக அவர் தர்மத்தினை யோனிசோ மனசிகாரத்தினூடாக அதாவது அறிவினால் ஆராய்வதனூடாக துக்கத்தின் தோற்றத்தினை உணர்ந்துகொள்வார். பஞ்ச உபாதானஸ்கந்தத்தின் உண்மைநிலையை அதாவது யதார்த்தத்தை படிச்சசமுப்பாதத்தினூடாக (காரண காரிய செயற்பாட்டு முறையினுள்) இது இப்படித்தான், இக்காரணத்தினாலயே நிகழ்கிறது. காரணம் அற்றுபோகும் போது அதன் விளைவு தோன்றாது, என்றவகையில் ஆராய வேண்டும். பிணைப்பினால் தான் பலன் கொடுக்கும் கர்மங்கள் உருவாகிறது. பலன் கொடுக்கும் கர்மங்கள் இருப்பதனால் பிறவியெடுக்கும் நிலை ஏற்படுவதாயின் பலன் தரும் கர்மங்கள் அற்றுபோகும் போது பிறவியும் அற்று போகிறது. பிணைப்பில்லாவிடில் பலன் கொடுக்கும் கர்மங்கள் உருவாகாது. ஒட்டிக்கொள்ளாவிடில் (ஆசையில்லாவிடில்) பிணைப்பு ஏற்படாது. அனுபவிப்பின் மீதான அஞ்ஞானம் இல்லாவிடில் அனுபவித்ததன் மீது ஆசை தோன்றியிராது. இவ்வாறாக அறிவினால் ஆராய்வதன் மூலம் பஞ்ச உபாதானஸ்கந்தத்தின் மீதான பேராசையை அழிக்க வேண்டும். இதுதான் துக்க அழிவாகும். துக்க நிரோதம் ஒரு ஆரிய சத்தியம் எனும் அறிவு ஆரியசீடனிடம் தோன்றினால் அதுவே சத்திய ஞானமாகும்.

**துக்கத்தின் அழிவினை உறுதி செய்தல்.**

அடுத்த ஆரிய சத்தியம் என்ன? **'தங் கோ பனிதங் துக்க நிரோதங் அரிய சச்சங்'** இதுதுான் துக்க அழிவு எனும் ஆரிய சத்தியம், **'சச்சிகாதப்பங்'**

அதனை உறுதி செய்ய வேண்டும். எனும் அறிவு தோன்றும். துக்க அழிவு எனும் ஆரிய சத்தியத்தியமானது வெறும் வார்த்தையினால் பயிற்சி செய்யும் விடயமல்ல. மாறாக அதனை உறுதி செய்ய வேண்டும். அதனை தன்னுடைய அனுபவமாக்கிக்கொள்ள வேண்டும். இந்த க்ருத்ய ஞானம் தொடர்பான தர்ம விழிகள் புத்த பகவானிடம் தோன்றியது. அறிவு தோன்றியது. ஞானம் உதித்தது. ஒளி தோன்றியது. அப்படியாயின் புத்த பகவானின் ஆரிய சீடன் முதலில் துக்க அழிவு என்பது ஒரு ஆரிய சத்தியமே எனும் சத்திய ஞானத்தினை கொண்டவராக வேண்டும். அடுத்தாக இந்த ஆர்ய சத்தியத்தினை உறுதி செய்ய வேண்டும். அப்படியாயின் துக்கம் எனும் ஆரிய சத்தியத்தினை என்ன செய்ய வேண்டும்? ஆம்.. உய்த்துணர வேண்டும். துக்கத்தின் தோற்றம் எனும் ஆரிய சத்தியத்தினை? ஆம் அழிக்க வேண்டும். துக்க அழிவு எனும் ஆரிய சத்தியத்தினை உறுதி செய்ய வேண்டும். இவற்றை செய்வதற்கு நுண்ணியமான அறிவு வேண்டும் என்று இப்போது புரிகிறதா? அதனால் தான் புத்த பகவான் **'பச்சத்தங் வேதிதப்போ விஞ்ஞூஹி'** என்று மொழிந்துள்ளார். அதாவது இந்த தர்மத்தினை அவரவது அறிவிற்கேற்பவே உணரலாம். அதாவது அறிவுள்ள சிந்திக்கும் திறமை படைத்த ஒருவருக்குத்தான் இந்த தர்மமாகும். இங்கு குறிப்பிடப்படுவது வேறு வேறு சாதாரண விடயங்களை செய்ய வேண்டிய அறிவல்ல. புத்த பகவானது தர்மத்தினை செவிமடுத்து அதன்படி அந்த தர்மத்தினை அறிவால் ஆராயும் போது தோன்றும் அறிவாகும்.

### வாழ்வில் தர்மம் நிரம்ப வேண்டுமாயின்

தர்மத்தினை அறிவினால் ஆராயும் போது தோன்றும் அறிவு தோன்றுவதற்கு ஒருவர் பெரிய பெரிய படிப்புக்களை படிக்க அவசியமில்லை. ஒருவர் தூய்மையான தர்மத்தினை கேட்பாராயின் அதன்படி தன் சிந்தையை வழிநடத்துவாராயின் எவராலும் இந்த தர்மத்தினை உய்த்துணர முடியும். ஆனால் பிரச்சினை அதுவல்ல. இன்று தர்மம் எனும் பெயரில் அனேகமானோர் அதர்மத்தினையே செவிமடுக்கின்றனர். அதுமட்டுமல்லாது தர்மத்திற்கு எதிரான முட்டாள் தனமான தர்க்கங்களை தன்னகத்தே கட்டியெழுப்பிக்கொண்டுள்ளனர். இந்த தடைகளை கொண்டிராத ஒருவருக்கு இந்த தர்மத்தினை கடைபிடிக்கலாம். அதனை இன்னும் விளக்கிக்கூறினால் திறந்து வைத்திருக்கும் நீர்க்குடத்தினை போன்றதாகும். அதாவது எவ்வித துளைகளுமற்ற

நீர்க்குடத்தினை மூடாது வைத்திருக்கும் போது நீரினால் அது நிரம்புகிறது. அதுபோல் அவரது வாழ்வும் தர்மத்தினால் நிரம்புகிறது.

### துக்கத்தின் அழிவினை உறுதி செய்தாயிற்று.

துக்கத்தின் அழிவினை உறுதி செய்ய வேண்டும் எனும் அறிவே க்ருத்ய ஞானமாகும். அடுத்ததுதான் துக்கத்தின் அழிவினை **'சச்சிகதங்'** அதாவது உறுதி செய்தாயிற்று எனும் ஞானம். இதுதான் க்ருதக் ஞானமாகும். புத்த பகவானுக்கு, துக்கத்தின் மீதான பேராசை நீங்கிற்று எனும் ஞானம் உதயமாகியது. துக்கத்தின் மீது கொண்ட பேரசை என்றால் ஆம்.. பஞ்ச உபாதானஸ்கந்தங்களின் மீது கொண்டிருந்த பேரவா நீங்கிற்று. பஞ்ச உபாதானஸ்கந்தங்களின் மீது கொண்டிருந்த பேரவா நீங்கியது. எவ்வாறு? அதன் மீதுள்ள அஞ்ஞானம் நீங்கும் வண்ணம் தர்மத்தினை உய்த்தறிந்ததாலயே. தண்ஹா எனும் பேராவா நீங்கிற்று. அவ்வாறு நீங்கியதை உணர முடியுமாயின் அதுவெ மோட்சமாகும்.

### துக்க அழிவிற்கான வழிமுறையும் ஆரிய சத்தியமே!

நான்காவது ஆரிய சத்தியம் தான் **'இதங் துக்கநிரோதகாமினி படிபதா அரியசச்சங்'** இதுதான் துக்கத்தினை அழிக்கும் வழிமுறையாகும். இந்த வழிமுறை ஒரு ஆரிய சத்தியமாகும். **'ததா'** அது நிலையானதெரு சத்தியமாகும். **'அவிததா'** பொய்யாகாது. **'அனஞ்ஞதா'** மாற்ற முடியாதது, வேறு இயல்பினை பெறாதது. இப்பண்புகளை உடையதுதான் துக்க அழிவுக்கான மார்க்கம் எனும் ஆரிய சத்தியமாகும். எண்சீர் மார்க்கம் எனவும் அழைக்கப்படும் இந்த துக்க நிவாரண மார்க்கமானது சீலம், சமாதி, ஞானம் எனும் மூன்றினுள் வளர்ச்சியடைவதாகும். இவ்வழிமுறையை விருத்தி செய்ய வேண்டும். ஒரு சிலர் சமாதி தேவையில்லை. ஞானம் மாத்திரம் இருந்தால் போதுமானது என்று கூறுகிறார்கள். 'சுக்கவிபஸ்ஸக' என்று ஒரு வார்த்தையை கேட்டிருக்கிறீர்களா? 'ட்ரய் விபஸ்ஸனா' எனவும் சில புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும். அது பர்மா நாட்டவர் கடைபிடிக்கும் ஒன்றாகும். அவை தர்மம் எனும் பெயரில் குறிப்பிடப்படும் அதர்மமங்களே! தர்மம் எனக்குறிப்பிட்டு தவறான கருத்துக்களையுடைய ஒரு புத்தகத்தினை வாசித்தாலும் தவறான கருத்துக்களே உள்வாங்கப்படும். அதனால் தூய்மையான புத்த போதனைகளையே தேடித்தேடி வாசிக்க வேண்டும். ஒரு உபாசகி என்னிடம் "சுசீம எனும் பிக்கு பஞ்ஞாவிமுத்த அல்லவா?

அவர் சமாதியில்லாது அரஹத் நிலையை அடைந்தவரல்லவா?" எனக்கேட்டார். சமாதியற்று விபஸ்ஸனா மாத்திரம் செய்வதால் ஒருவருக்கு சகல மனமாசுகளையும் அழிக்க முடியுமா? முடியாது.

### சமாதி இல்லாமல் விபஸ்ஸனா இல்லை.

புத்த பகவானது தர்மத்திலே 'உபதோபாக விமுத்த', 'பஞ்ஞாவிமுத்த' என்று இரு சொற்கள் குறிப்பிடப்படுகின்றன. உபதோபாக விமுத்த எனும் நிலையானது சமத தியானங்களை அட்ட சமாபத்தி நிலைவரை விருத்தி செய்ய வேண்டும். உபதோபாக விமுத்த நிலையை அடைந்த ஒருவர் அதாவது சமத தியானங்களை அட்ட சமாபத்தி நிலைவரை விருத்தி செய்த ஒருவரால் விபஸ்ஸனா தியானத்தினூடாக நிரோத சமாபத்தி நிலையை அடைய முடியும்.

### விபஸ்ஸனா தியானத்தால் மட்டும் முடியாது.

மேற்குறிப்பிடப்படும் திறமை பஞ்ஞாவிமுத்த நிலையை அடைந்த ஒருவருக்கு இல்லை. ஆனால் அவர் கண்டிப்பாக எண்சீர் மார்க்கத்தின் சம்மா சமாதியை உடைவராக வேண்டும். சம்மா வாயாம, சம்மா சதி, சம்மா சமாதி எனும் மூன்று அங்கங்களும் சமாதி எனும் பகுதிக்குரியவையாகும். ஒருவர் இம்மூன்றினையும் துறந்து எவ்வாறு தர்மத்தினை உய்த்துணர முடியும்? எண்சீர் பாதையின் ஐந்து அங்கங்களை மாத்திரம் கடைபிடிப்பதால் மோட்சமடைய முடியுமா? முடியாது. அவ்வாறாயின் தவறான கருத்துக்களையுடைய புத்த தர்மம் எனக்குறிப்பிடப்படும் புத்தகங்களை வாசிப்பதால் ஒரு பயனும் இல்லை. அவற்றை வாசிப்பதனால் குறைந்தபட்சம் புத்த பகவான் மீது பக்தியைக்கூட உருவாக்கிகொள்ள முடியாது.

### தர்மம் மிகவும் நுண்ணியமானது

நாம் புத்த பகவான் மொழிந்தருளிய நான்காவது ஆரிய சத்தியத்தினை பற்றியே கற்றுக்கொண்டிருக்கிறோம். புத்த பகவான், 'இதங் துக்கநிரோதகாமினி படிபதா' இதுதான் துக்க நிவாரணத்திற்கான மார்க்கமான எட்டு அங்கங்களையுடைய பாதை என மொழிந்தார். 'அரியசச்சங்' இது ஒரு ஆரிய சத்தியம் எனும் சத்திய ஞானத்திற்கு வரவேண்டும். மேற்குறிப்பட்டது போன்று தவறான கருத்துக்களையுடைய ஒருவரால் இந்த சத்திய ஞானத்திற்கு வர முடியுமா? முடியாது. சமாதியில்லாமல் தர்மத்தினை உய்த்துணர முடியும் என்போர்கள் எட்டு அங்கங்களையுடைய

எண்சீர் மார்க்கத்தினை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நுண்ணியமான செயற்பாடுகளையுடைய ஒரு இயந்திரத்தினுள் சிறு மண்துகள் சென்று இறுகி செயலிழந்து போவது போல் சிறு விடயம் தவ-றினால் கூட நாம் தர்ம பாதையிலிருந்து அகன்று விடுகிறோம். அதனால் தான் புத்த பகவான் இந்த தர்மத்தினை மிகவும் ஒழுங்கமைய போதித்தருளியுள்ளார். புத்த பகவான் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த தர்மத்தினை தவறாக கற்றுக்கொள்ள வேண்டாம், அது தேவ மனிதர்களுக்கும் தீமையையே விளைவிக்கும் என அறிவுறுத்தியுள்ளார்.

நான் உங்களுக்கு இப்போது கூறும் விடயங்களையும் நீங்கள் வேண்டுமானால் சூத்திர போதனைகளோடு ஒப்பிட்டு பாருங்கள். அவ்வாறு நீங்கள் ஒப்பிட்டு பார்க்கும் போது எனது ஏதேனும் தவறுகள் இருந்தால் அவற்றை மனதிலிருந்து அகற்றிடுங்கள். புத்த பகவான் மொழிந்த சூத்திர போதனையில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளதோ அதனையே ஏற்றுக்கொள்ளுங்கள். எவ்விதமான தனிப்பட்ட நபருடைய கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டாம். நான் இவ்வாறாக உங்களுக்கு இந்த போதனைகளை கற்றுக்கொடுக்கும் போது ஏதேனும் வார்த்தைகள் தவறினாலும் அதனை அக்கணமே விட்டுவிடுங்கள். புத்த போதனைகளோடு ஒப்பிட்டு பார்க்கும் போது அவை எதிர்மறையாக இருந்தால் அவற்றை அக்கணமே துறந்து விடுங்கள்.

### எண்சீர் மார்க்கத்தினை பயிற்சி செய்ய வேண்டும்.

**‘துக்க நிரோதகாமினி படிபதா’** துக்க நிவாரணத்திற்கான மார்க்கம் ஒரு ஆரிய சத்தியம். துக்கம் எனும் ஆரிய சத்தியத்தினை உய்த்துணர வேண்டும். துக்க தோற்றம் எனும் ஆரிய சத்தியத்தினை அழிக்க வேண்டும். துக்க நிவாரணம் எனும் ஆரிய சத்தியத்தினை உறுதி செய்ய வேண்டும். துக்க நிவாரண மார்க்கத்தினை **‘பாவேதப்பங்’** பயிற்சி செய்ய வேண்டும். பாருங்கள் புண்ணியவர்களே! இந்த தர்மம் எவ்வளவு தெளிவானது என்று. இந்த வழிமுறையினை (எண்சீர் மார்க்கத்தினை) பயிற்சி செய்ய வேண்டும் என்று பகவானின் அகத்தே தர்ம விழிகள் தோன்றியது. அறிவு தோன்றியது. மெய்ஞானம் உதித்தது. ஒளி தோன்றியது.

### வழிமுறையைபின்பற்றுவதால்..

பயிற்சி செய்ய வேண்டும் எனும் கருத்து தோன்றியவுடன் என்ன செய்ய

வேண்டும்? ஆம் அந்த வழிமுறையை பின்பற்ற வேண்டும். புத்த பகவானிடம், **'தங் கோ பனிதங் துக்க நிரோதகாமினி படிபதா அரியசச்சங்'** இந்த துக்க நிவாரண மார்க்கத்தினை **'பாவிதன்தி'** பயிற்சி செய்தாயிற்று எனும் அறிவு தோன்றியது. அதாவது **'கதங் கரணீயங்'** செய்ய வேண்டியதை செய்து முடித்தாயிற்று. எனும் ஞானம் தோன்றியது.

**வழிமுறை ஆரிய சத்தியமே!**

ஆரிய அட்டாங்கிக மார்க்கம் அதாவது எண்சீர் மார்க்கம் ஒரு ஆரிய சத்தியமே என எற்றுக்கொள்வதுதான் இதன் சத்திய ஞானமாகும். இந்த எண்சீர் மார்க்கத்தினை பின்பற்ற வேண்டும் எனும் உணர்வுதான் க்ருத்ய ஞானம். அதேபோல் எண்சீர் மார்க்கத்தினை முழுமையாக பயிற்சி செய்தாயிற்று. பின்பற்றியாயிற்று எனும் உணர்வு தான் க்ருதக் ஞானமாகும். இந்த எண்சீர் மார்க்கத்தில் முதலாவது அங்கமான சம்மா திட்டியை நோக்கி வரும் பகுதி எஞ்ஞானத்திற்குரியது? ஆம்.. சத்திய ஞானத்திற்கு. இந்த சத்திய ஞானம் தோன்றிய பின்புதான் க்ருத்ய ஞானம் தோன்றும். அப்படியாயின் முதலில் தோன்ற வேண்டியது சத்திய ஞானமாகும். ஒருவருக்கு இந்த சத்திய ஞானம் தோன்ற வேண்டுமாயின் அவர் முதலில் தர்மத்தினை செவிமடுக்க வேண்டும். பின்னர் அந்த தர்மத்தின் படி அறிவினால் ஆராய வேண்டும். சத்திய ஞானம் தோன்றிய ஒருவர் தான் சோவான் நிலையை அடைவார். இவ்வாறாக சம்மா திட்டியை தன்னுள் தோற்றுவித்து கொள்ளும் ஒருவர் எண்சீர் மார்க்கத்தினை நோக்கியே வருவார். அதனால் தான் அது சத்தியஞானமாகிறது.

**முழுமையாக போதிக்கப்பட்டதாகும்.**

இந்த தர்மத்தில் எங்காவது ஆரம்பத்திலாவது அல்லது கடைப்பகுதியிலாவது ஏதேனும் குழப்பங்கள் இருக்கிறதா? இல்லை. ஒன்றுக்கொன்று மிகவும் பொருந்துவதாகவே கூறப்பட்டுள்ளது. அப்படியாயின் இந்த தர்மம் பிழைகளுடன் போதிக்கப்பட்டதா? அல்லது முழுமையாக போதிக்கப்பட்டதா? ஆம் முழுமையாக போதிக்கப்பட்டதாகும். அதாவது இந்த தர்மம் **'சுவாக்காத்த'** எனும் குணத்தினை உடையதாகும். அதாவது இந்த தர்மத்தின் முதற்பகுதி, இடைப்பகுதி, கடைப்பகுதி எனும் முப்பகுதிகளும் முழுமையாகவும் பரிபூரணமாகவும் போதிக்கப்பட்டதாகும்.

**அறிவுள்ள சிந்திக்கும் திறனுடையோரது தர்மம்.**

நாம் முன்னர் கற்ற சத்திய ஞானத்தினை எம்முள் தோற்றுவித்து கொள்ள முடியுமா? முடியாதா? கண்டிப்பாக முடியும். ஏனெனில் இந்த தர்மம் **'சன்திட்டிக்க'** எனும் குணம் படைத்ததாகும். அதாவது ஒருவர் இந்த தர்மத்தினை பயிற்சி செய்தால் அதன் நல்விளைவகளை இவ்வாழ்விலேயே உணரக்கூடியதாகும். இந்த சத்தியத்தினை எக்காலத்திலும் உய்த்துணர முடியும். எவ்வித கால வரையறையுமற்றது. காலாவதியாகாத இந்த தர்மமானது **'அகாலிக'** எனும் குணம் படைத்ததாகும். இந்த தர்மம் மிக மிக வெளிப்படையானதாகும். மூவுலகத்தோராலும் வந்து ஆராய்வுகளை செய்யலாம். 'வாருங்கள் வந்து பாருங்கள்' என அறைகூவல் விடும் இந்த புத்த பகவானது தர்மத்தின் அடுத்த குணம் தான் **'ஏஹிபஸ்ஸிக'** என்பதாகும். இந்த தர்மத்தினை தன்னுள்ளே தான் காண வேண்டும் அதனால் இந்த தர்மம் **'ஓபனய்க'** எனும் குணம் படைத்தாகும். இந்த தர்மத்தினை அறிவுள்ளோரால் தமது அறிவுக்கேற்ப தான் பயிற்சி செய்யும் அளவிற்கு தன்னால் உய்த்துணர கூடியதாக இருக்கும். இந்த தர்மம் **'பச்சத்தங் வேதிதப்போ விஞ்ஞூஹி'** எனும் குணம் கொண்டதாகும். நாம் தர்மத்தினை வழிபடும் போது கூறும் செய்யுளில் உள்ள அனைத்து பண்புகளும் நாம் இப்போது கற்ற போதனைலும் புத்த பகவானது அனைத்து போதனைகளிலும் இருக்கின்றன.

**புத்த பகவானை காண முடியும்.**

அதனால் தான் புத்த பகவான் **'யோ தம்மங் பஸ்ஸதி, சோ மங் பஸ்ஸதி'** எவரேனும் ஒருவர் தர்மத்தினை காண்பாராயின் அவர் என்னை காண்கிறார். என மொழிந்துள்ளார். புத்த பகவான் பின்வருமாறு மொழிந்தார் **'யாவகீவங் ச மே பிக்கவே இமேசு சதுசு அரியசச்சேசு ஏவங் திபரிவட்டங் த்வாதசாகாரங் யதாபூதங் ஞானதஸ்ஸனங் ந சுவிசுத்தங் அஹோசி'** என்று. நாற்பேருண்மைகளை பன்னிரைண்டு வகைகளாக இங்கு **'திபரிவட்ட'** என்று ஒரு சொல் குறிப்பிடப்படுகிறது. திபரிவட்ட என்றால் மூன்று முறைகளாக என்று பொருள்படும். அதாவது துக்கம் எனும் ஆரிய சத்தியத்தில் மூன்று முறைகளாக சத்ய ஞான, க்ருத்ய ஞான, க்ருதக் ஞான என்பதை போல் துக்க தோற்றம் எனும் ஆரிய சத்தியத்தில் சத்ய ஞான, க்ருத்ய ஞான, க்ருதக் ஞான என்ற மூன்று முறைகள். துக்க நிவாரணம் எனும் ஆரிய சத்தியத்தில் சத்ய ஞான, க்ருத்ய ஞான, க்ருதக் ஞான என்று மூன்று முறைகள். துக்க நிவாரண மார்க்கத்திலும் சத்ய ஞான, க்ருத்ய

ஞான, க்ருதக் ஞான என்று மூன்று முறைகளாக உய்த்துணர்தல்.

ஒரு ஆரிய சத்தியத்தினை மூன்று முறைகளில் என்ற அடிப்படையில் நால்வகை உண்மைகளையும் **'த்வாதசாகாரங்'** பன்னிரெண்டு வகைகளில் **'யதாபூதங்'** அதே இயல்புடன் **'ஞானதஸ்ஸனங்'** உய்த்துணர்வோடு காணல். **'ந சுவிசுத்தங் அஹோசி'** அவ்வாறு காண்பதானது தூய்மையடையாத வரை **'நேவதாவாஹங் பிக்கவெ சதேவகே லோகே சமாரகே சம்ப்ரஹ்மகே சஸ்ஸமண ப்ராஹ்மணியா பஜாய சதேவமனுஸ்ஸ ாய அனுத்தரங் சம்மா சம்போதிங் அபிசம்புத்தோ பச்சஞ்ஞாசிங்'** புண்ணியமிகு பிக்குக்களே! நான் தேவர்கள், பிரம்மாக்கள், மாரன், ஸ்ரமணர்கள், பிராம்மணர்கள் கொண்ட உலகத்தோர் முன்னிலையில் இவ்வாறாக மூன்று முறைகளுடனும் பன்னிரெண்டு வகைகளிலும் இந்த நாற்பேருண்மைகளை உய்த்துணரும் வரை நான் சம்மா சம்புத்த நிலையை அடைந்தேன் எனக்கூறவில்லை. **'யதோ ச கோ மே பிக்கவே இமேசு சதுசு அரியசச்சேசு'** புண்ணியமிகு பிக்குக்களே! நான் இந்நாற்பேருண்மைகளை **'ஏவங் திபரிவட்டங்'** இம்மூன்று முறைகளுடன் **'த்வாதசாகாரங்'** பன்னிரைண்டு வகையாக **'யதாபூதங் ஞானதஸ்ஸனங் சுவிசுத்தங் அஹோசி'** அதன் உண்மை நிலையை ஞானத்தினால் எனது உய்த்துணர்வாக **'அதாஹங் பிக்கவெ சதேவகே லோகே சமாரகே சம்ப்ரஹ்மகே சஸ்ஸமண ப்ராஹ்மணியா பஜாய சதேவமனுஸ்ஸாய அனுத்தரங் சம்மா சம்போதிங் அபிசம்புத்தோ பச்சஞ்ஞாசிங்'** தெளிவாகிய பின்னர் தான் நான் தேவர்கள், பிரம்மாக்கள், மாரன், ஸ்ரமணர்கள், பிராம்மணர்கள் கொண்ட உலகத்தோர் முன்னிலையில் சம்மா சம்புத்த நிலையை அடைந்தேன் என தெரிவித்தேன்.

புத்த பகவான், **'ஞானஞ்ச்ச பன மே தஸ்ஸனங் உதபாதி'** எனக்கு பரிபூரணமான ஞானம் தோன்றிவிட்டது. **'அகுப்பா மே சேதோ விமுத்தி'** நான் முழுமையாக தண்ஹா எனும் பேராசையிலிருந்து விடுதலையடைந்து விட்டேன். அவ்வாறு அடைந்த விடுதலையானது ஒரு போதும் மாற்றமடையாது. **'அயமன்திமா ஜாதி'** இதுதான் இறுதி பிறப்பாகும். **'நத்திதானி புனப்பவோ'** பலனளிக்கும் வகையிலான கர்மங்களின் சேர்க்கை முடிவுற்றது.

### கொண்டஞ்ஞ பிக்கு

**'இமஸ்மிஞ்ச பன வெய்யாகரணஸ்மிங் பஞ்ஞமானே'** புத்த பகவான் இந்த போதனையை போதித்து முடிவுறும் போது **'ஆயஸ்மதோ**

**கொண்டஞ்ஞஸ்ஸ'** கொண்டஞ்ஞ எனும் பிக்குவிற்கு **'விரஜங்'** கிலேச மாசுகளற்ற, **'விதமலங்'** தவறான கருத்துவாதங்கள் எனும் துறு நீங்கிய **'தம்மசக்குங் உதபாதி'** தர்மவிழிகள் தோன்றியது. தர்ம விழிகள் என்றால் என்ன? **'யங் கிஞ்சி சமுதய தம்மங்'** ஏதேனும் காரணங்களால் தோன்றும் இயல்பினை உடையதாக இருக்கிறதோ **'சப்பங் தங் நிரோத தம்மங்'** அவ்வனைத்தும் காரணங்கள் அற்றுபோகும் போது இல்லாமல் போகும் இயல்பிலானவை, என்பதனை தன்னுள் உய்த்துணர்ந்தார். அதுதான் தம்மசக்கு அதாவது தர்மவிழிகள் ஆகும்.

### காரணங்களினால் தோன்றுபவை காரணமற்றுப்போகும் போது

நாமும் தர்மத்தினை செவிமடுத்து அந்த தர்மத்தினை அறிவினால் ஆராய்ந்து அதன் மூலம் எண்சீர் மார்க்கத்தினை பின்பற்றி என்றாவது ஒருநாள் சோவான் நிலையை அடைவதாயின் இம்முறையில் தான் அடைய முடியும். அது என்ன முறை? **'யங் கிஞ்சி சமுதய தம்மங்'** ஏதேனும், காரணங்களால் தோன்றும் இயல்பினை உடையதாக இருக்கிறதோ **'சப்பங் தங் நிரோத தம்மங்'** அவ்வனைத்தும் காரணங்கள் அற்றுபோகும் போது இல்லாமல் போகும் இயல்பிலானவை எனும் உணர்வு. இந்த உய்த்துணர்வு தோன்றும் போது எம்முள் சத்திய ஞானம் தோன்றும். அதாவது துக்கம் ஆரிய சத்தியமே. எனும் சத்திய ஞானம் தோன்றும். துக்கத்தின் தோற்றம் ஆரிய சத்தியமே. துக்க அழிவு அல்லது துக்க நிவாரணம் ஆரிய சத்தியமே. எனும் சத்திய ஞானம் தோன்றும். துக்க நிவாரண மார்க்கமான எண்சீர்பாதை ஒரு ஆரிய சத்தியமே. எனும் சத்திய ஞானம் தோன்றும். இவ்வாறானவர் ஆன்மீக சம்மாதிட்டி உடையவராவார்.

### தர்ம வழிகள் தோன்றினால்!

இவ்வாறாக சம்மா திட்டியை உடைய ஒருவர் புத்த பகவான் மீது கொண்டுள்ள சத்தா எனப்படும் நம்பிக்கையுடன் கூடிய பக்தி இல்லாது செய்துகொள்வாரா? இல்லை. தர்மத்தினை அதர்மத்தோடு கலந்து பேசுவாரா? இல்லை. தனக்கு தேவையான வகையில் தர்மத்தினை மாற்றி பேசுவாரா? இல்லை. அதற்கு காரணம் யாது? அவர், எண்ணிலடங்காத துன்பங்களிலிருந்து நீங்குவதற்கு இந்த தர்மமே துணையாக இருந்தது என்பதனை உணர்ந்தவராக இருப்பார். அதனால் அவர் இந்த ஆரிய தர்மத்தினை அளவிலாத வகையில் கௌரவிப்பார். அவர் புத்த பகவானது ஆரிய சீடர்களை ஒருபோதும் தூற்றமாட்டர். அதற்கு காரணம் என்ன? புத்த பகவானது

உத்தம ஆரிய சீடர்கள் அளவிலாத தியாகங்களை செய்தே இந்த சீலம், சமாதி, ஞானம் என்பவற்றை விருத்தி செய்துகொண்டார்கள் என்பதனை உணர்ந்திருப்பார்.

இந்த தர்ம மார்க்கத்தில் இலகுவான சிறு பயணமா செல்ல வேண்டும்? இல்லை. இந்த தர்மத்தினை பயிற்சி செய்வதற்கு இடைவிடாத முயற்சியும் வீரியமும் மேற்கொள்ள வேண்டும். பஞ்ச சீலங்களை முறையாக அனுஷ்டிப்பது எவ்வளவ கடினமான விடயம் என்பதனை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். சீலத்தினை அனுஷ்டிப்பவருக்குத்தான் அதன் கடினம் புரியும். பஞ்ச சீலத்திலும் உயர்வான சீலத்தினை அனுஷ்டிக்கும் ஒருவருக்குதான் அந்த சீலத்தினை பாதுகாப்பது எவ்வளவு கடினம் என்பது புரியும். சுயவுணர்வினை நிலைநிறுத்த முயற்சிக்கும் ஒருவர் தான் அதன் கஷ்டத்தினை உணருவார். சமத தியனத்தினை மேற்கொள்ளும் ஒருவரால் அதேபோல் விபஸ்ஸனா தியானத்தை மேற்கொள்ளும் ஒருவரால் தான் அது எவ்வளவு கடினமான விடயம் என்பதனை உணர முடியும்.

அப்போது தான் ஆரிய சீடர்கள் மீது மரியாதை தோன்றும். “இவ்வுலகத்தோர் பயணிக்கும் பாதையில் பயணிக்காது இந்த துக்கத்திலிருந்து மீள்வதற்கான உன்னதமான வழியை கடைபிடித்த புத்த பகவானது சீடர்கள் எவ்வளவு உத்தமமான வாழ்வினை வாழ்ந்துள்ளார்கள்” என்று. இவ்வாறு சிந்திக்கும் போது பகவானது சீடர்கள் மீது அசைக்க முடியாத கௌரவம் தோன்றும். சாதாரண உலகில் ஒரு தேள் கடித்தால் அனைத்து தேள்களுக்கும் ஏசுவார்கள். ஆனால் உண்மையான சீடன் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டான். தன்னை பௌத்தன் என பிறருக்கு காட்டிக்கொள்ளும் சிலர் எவரேனும் ஒரு பிக்கு செய்யும் தவறுகளை பிடித்து கொண்டு அனைத்து சங்கத்தினரையும் தூற்றுவதில்லையா? தூற்றுவார். தர்மத்தினை உய்த்துணர்ந்நத ஒருவரால் இவ்வாறெல்லாம் தூற்ற முடியாது. இதுவும் தர்மத்தினை பின்பற்றும் ஒருவரது பண்பாகும்.

### பழுதாகாத சீலம்

தர்மத்தினை உய்த்துணர்ந்தவரது சீலம் எப்படியானது? ஆரியகாந்த சீலம். அதாவது பழுதாகாத துளைகள் இற்ற தூய்மையான சீலம். சம்மா திட்டியை அடிப்படையாகக்கொண்டே அந்த சீலம் நிலைத்திருக்கும். சம்மா திட்டியில் துவங்கி மோட்சத்தினை அடையும் மிகவும் தெளிவான பாதயையே இந்த தர்மம் கூறுகிறது.

### சத்தானுசாரி

புத்த பகவான், இந்த தர்மம் மீது (சிரத்தை) பக்தி கொள்ளும் ஒரு-வரை 'சத்தானுசாரி' எனக்குறிப்பிட்டுள்ளார். சத்தானுசாரி என்றால் அவர் தர்மத்தின் மீது மிகுந்த விருப்புடன் இருப்பார். புத்த பகவான், இந்த சத்தானுசாரி எனும் நிலையை அடைந்தவர் மரணத்தின் பின் சுவர்க்கத்தில் பிறப்பார் என உறுதியாக கூறியுள்ளார்.

### சோதாபன்ன நிலை.

புத்த பகவான் ஒரு போதனையில் அழகான உவமை ஒன்றினை மொழிந்துள்ளார். ஆற்றின் வெள்ளப்பெருக்கின் போது ஒரு பசு அவ்வாற்றினை கடந்து செல்கிறது. அப்பசுவின் கன்றானது தன் தாயின் ஓசைக்கேற்ப அதன் பின்னே ஆற்றினை கடந்து நீந்தி செல்லும். வெள்ளமிகுந்த ஆற்றினை கடந்து செல்லும் பசு இவ்வாறு நீந்துவதால் கரையேரலாம் என்பதனை அறிந்தே செல்கிறது. அதேபோல் தாய்பசுவின் பின்னால் செல்வதால் தானும் கரையேற முடியும் என்பதையறிந்தே கன்றும் பின்தொடர்கிறது. அதேபோல் எமக்கும், இந்த உத்தம மனிதர்களும் இவ்வழிமுறையை பின்பற்றியதாலயே சன்சாரம் எனும் பிறவிப்பெருங்கடலை கடந்து சென்றனர். நானும் அவ்வழிமுறையையே பின்பற்ற வேண்டும். என்று அதன்படி செல்ல வேண்டும். என்று தோன்ற வேண்டும். இப்படியானவர் தான் சத்தானுசாரி எனும் நிலையில் உள்ளவர் என புத்த பகவான் மொழிந்தார். இவ்வாழ்விலே மென்மேழும் அவர் சத்தர்மத்தினை செவிமடுத்து அதன்படி அறிவினால் ஆராய்வாராயின் சோதாபன்ன நிலையை அதாவது ஏழு பிறவிகளை மாத்திரம் பிறந்து தனது ஏழாவது பிறவியில் முக்தியடையும் நிலையை அடைந்த ஒருவாக முடியும். சத்தானுசாரி ஒருவருக்கு அதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது. புத்த பகவானது தர்மத்தினை தெளிவாகவும் தூய்மையாகவும் மென்மேழும் வாசிக்கவும் செவிமடுக்கவும் வேண்டும். இப்போது எம்மாலும் இந்த தர்மத்தின் மீது பக்தியை ஏற்படுத்தி கொள்ள முடியும்.

புத்த பகவானது காலத்தில் ஒரு முதியவர் சோதாபன்ன நிலையை அடைந்திருந்தார். மாரனுக்கு இவரது நிலையை மாற்ற வேண்டும் எனும் எண்ணம் தோன்றி அவர் முனபு ஒரு அழகிய தேவனை போல் தோற்றமளித்தான். அந்த முதியவரிடம் 'புத்த பகவான் மொழிந்த அனைத்துமே பொய்யான விடயங்களாகும். அவர் கூறிய ஒன்றுமே அநித்தியமல்ல. அவையனைத்தும் நித்தியமானவையாகும்.'

என்று கூறினான். தர்மத்தினை தமது வாழ்வில் உறுதி செய்து கொண்ட இந்த முதியவர் ‘துரதிஷ்டமானவரே! நீ இவ்வளவு பெரிய முட்டாளா?’ என்று கேட்டார். இந்த தர்மத்தினை உய்த்துணராத ஒருவராயின் என்ன நடந்திருக்கும்? ஆ......நித்தியமானவையும் இருக்கிறதா? அவை எங்குள்ளது? என கேள்வியும் கேட்டிருப்பார். அவர் அதனை ஏற்றுக்கொண்டிருப்பார்.

### எமது மக்கள் மிகவும் ஏமாறுகிறவர்கள்.

மேலேத்தேய வெள்ளையர்கள் தப்பித்தவறியேனும் நித்தியமானவையும் இருக்கிறது என்று அறிக்கை விட்டால் அனைத்தும் முடிந்து விடும். பௌத்தர்களாக தம்மை காட்டிக்கொள்வோர், ‘அப்படியாயின் புத்த மதம் முடிவுற்றது’ எனக்கூறுவார்கள். அவர்கள் சரணமடைந்த விடயத்தினை உணர முடியுமல்லவா? சரியான முறையில் ஒருவர் தர்மத்தினை அணுகுவாராயின் இவ்வாறு ஒருபோதும் நடக்காது. சரி. நாம் வெகு நேரமாக இந்த தர்மத்தினை செவிமடுத்தோம். நாம் அனைவரும் புத்த பகவானது தர்மத்தின் மூன்று முறைகளான சத்தியஞானம் க்ருத்ய ஞானம் க்ருதக் ஞானம் எனும் ஞானங்களை எம்முள் தோற்றுவித்துக்கொண்டு நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து அனைத்து துன்பங்களிலிருந்தும் நிரந்தரமாகவே நீங்குவோமாக!

**சாது! சாது!! சாது!!!**

*நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மாசம்புத்தஸ்ஸ*

அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மாசம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 03

# சமயம் எதற்காக?

நாம் அனைவரும் இன்று இங்கு ஒரு முக்கியமான விடயத்தினை பற்றி ஆராய்வதற்காகவே கூடியுள்ளோம். ஒரு மனிதனுக்கு ஆன்மீக தலைவர் ஒருவர் எதற்காக வேண்டும் என்பதனை பற்றியே நாம் இன்று கலந்துரையாடவுள்ளோம். நாம் வாழும் இவ்வுலகத்தில் பல்வேறுபட்ட சமயங்கள் உள்ளன. இந்த எல்லா சமயங்களின் ஆன்மீக தலைவருள்ளும் புத்த பகவான் தான் ஒருவர் எதற்காக சமயத்தினை பின்பற்ற வேண்டும்? என மொழிந்தார். எமக்கு தெரியும் பெரும்பாலான மக்கள் தனக்கு நோய்களோ அல்லது வேறு பிரச்சினைகளோ ஏற்படும் பட்சத்தில்தான் சமயத்தினை தேடுகின்றனர்.

சுருக்கமாக கூறினால் தனது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி கொள்வதற்காகத்தான் ஒருவர் சமயத்தினை தேடவும் அதனை பின்பற்றவும் செய்கிறார். ஒருவர் இம்மாதிரியாக சமயத்தினை தேடுவதை புத்த பகவான் ஆதரிக்கவில்லை. ஒருவர் இவ்வாறான சிறு சிறு தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சமயத்தினை தேடுவதானது மேன்மையற்றது எனவும் உசிதமற்றது எனவும் புத்த பகவான் மொழிந்துள்ளார். ஒருவர் பிறப்பு, முதிர்ச்சி மரணம் மற்றும் சகல துன்பங்களிலிருந்தும் நீங்குவதற்காகவே சமயத்தினை தெரிவு செய்ய வேண்டும். என புத்த பகவான் மொழிந்துள்ளார். இவ்வாறான தெளிவான இலக்கொன்று இல்லாத ஒரு சமயத்தினை ஒருவர் பின்பற்றுவதால் அவர் மென்மேழும் அறியாமைக்கே இழுத்து செல்லப்படுவார். ஒருவர் தெளிவான ஒரு நோக்கம் இல்லாத ஒரு சமயத்தினால் தெரிவு செய்யவதால் எவ்விதமான புகலிடத்தையும் அடைய முடியாது.

## பிறப்பு இறப்பு சுழற்சி இருக்கிறதா?

ஒரு ஆன்மீக தலைவரான புத்த பகவான் மக்களை அறிவாளிகளாக்கினார். புத்த பகவானது ஸ்ரீ சத்தர்மத்தில் தான் இந்த உயிர்கள் ஒரு சன்சார பயணத்தில் அதாவது பிறப்பு இறப்பு எனும் சுழற்சியில் சிக்கியிருப்பதாக குறிப்பிடப்படுகிறது இந்து சமயத்தில் மாத்திரம் அது தொடர்பாக குறிப்பட்டிருக்கிறதேயன்றி உலகில் வேறு எந்த வொரு சமயத்திலுமே இது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## சிந்திக்கும் முறையில் மாற்றம்

நாம் சிந்திக்கும் முறையில் தவறு இருப்பதால் தான் நாம் மீண்டும் மீண்டும் பிறக்கிறோம் என்றாவது ஒரு-நாள் நாம சிநதிக்கும் முறையினை மாற்றிக்கொள்ளும் போது இந்த பிறவிப்பெருங்கடலிலுருந்து மீளலாம் எனவும் புத்த பகவான் மாத்திரமே மொழிந்தார். இந்த கொடிய பிறவிப்பெருங்கடலிலிருந்து மீளவதானது புத்த பகவானது தர்மத்தினை பின்பற்றுவதால் மாத்திரமே முடியும். புத்த பகவானது தர்மத்தினை செவிமடுத்து எமது சிந்தனைகளை மாற்றிக்கொள்ளும் போது ஏழு பிறவிகளிலே இந்த கொடூரமான சன்சாரப்பாதையை முடிவுக்கு கொண்டுவர முடியும். இதற்கு தேவை-வயானது ஒன்றுதான் அதுதான் புத்த பகவானது ஸ்ரீ சத்தர்மம்.

## பெறுமதியானது

நாம் இவ்வாறு நினைத்து பார்ப்போம். இவ்வுலகிலுள்ள விலை மதிப்புமிக்க அனைத்து பொருட்களையும் ஒரு குவியலில் இடுகிறோம் என்று. இவ்வுலகிலுள்ள விலை மதிப்புமிக்கவை எவை? ஆம்.. பொன், வெள்ளி, முத்து, மாணிக்கம், பணம், என்பவற்றை ஒரு குவியலாக்கி ஒருவருக்கு கொடுத்து “இங்கிருக்கும் அனைத்து செல்வத்தினையும் பயன்படுத்தி இந்த பிறவிப்பயணத்தினை ஏழு பிறவிகளாக குறைத்துக்கொள்ளுங்கள்.” என்று கூறுகிறோம்.

அவரால் அதனை செய்ய முடியுமா? முடியாது. அவரால் மட்டுமல்ல. இவ்வுலகிலுள்ள யாராலும் அதனை செய்ய முடியாது. இதிலிருந்து எம்மால் ஒரு விடயத்தினை நன்கு உணர முடியும். அதுதான் இவ்வுலகிலுள்ள

அனைத்து செல்வத்தினையும் விட புத்த பகவானது தர்மமே பெறுமதிமிக்கதாகும் என்பதே அதுவாகும். இவ்வுலகிலுள்ள அனைத்து செல்வத்தினையும் செலவளித்தாலும் சன்சார பயணத்தினை நிறுத்த முடியாது. நாம் சிந்திக்கும் முறையை மாற்றினாலன்றி அதனை ஒருபோதும் வேறு வழிகளில் செய்ய முடியாது. தனது சிந்தையை மாற்றியமைக்க வேண்டும் எனும் தேவை அனைவருள்ளும் இருக்க வேண்டியதாகும். சிந்தனையை மாற்றி சீர்த்திருத்தும் வல்லமை புத்த பகவானது தர்மத்திற்கு மாத்திரமே முடியும். வேறு யாராலுமே அதனை செய்ய முடியாது.

## நவீன விஞ்ஞானம்.

எமது எண்ணங்களில் நிரம்பியிருப்பது அஞ்ஞானமாகும். அஞ்ஞானம் என்றால் எமது வாழ்வின் உண்மை நிலையினை அறியாமையாகும். இவ்வாறான அறியாமையை கொண்டவர்கள் என்ன செய்வார்கள்? நால்வகை தாதுக்களால் உருவாகிய விடயங்களை மாற்றத்திற்குள்ளாக்குவார்கள். நிலத்தில் செல்லக்கூடிய, வானில் செல்லக்கூடிய, நீரில் செல்லக்கூடிய வாகனங்களை உருவாக்குவார்கள். இயந்திர மனிதர்களை, கணிணிகளை உருவாக்குவார்கள். இன்னும் எத்தனையோ உருவாக்குவார்கள். இவற்றினால் நன்மைகளும் இருக்கின்றன. ஆனால் உயிர்களது மிகப்பெரும் பிரச்சினையான சன்சார விடுதலைக்கு அது உதவாது. அதற்கு காரணம் என்ன? இவற்றை உருவாக்கும் போது அதற்கு துணையாக

அஞ்ஞானமிகுந்த மனமே அடிப்படையாக இருந்தது

**அஞ்ஞானத்தினால் தோற்றம் பெருவது?**

ஆசை தோன்றுவது அஞ்ஞனாத்திலாகும். கோபம் தோன்றுவது அஞ்ஞனாத்திலாகும். அறியாமை, ஆணவம், பொறாமை, உலோபத்தனம், மூட நம்பிக்கை, என்பன தோன்றுவதற்கு அடிப்படையாக இருப்பது அஞ்ஞானமாகும். அப்படியாயின் உயிர்களிடம் பொதுவாக இருப்பது அஞ்ஞானமிகுந்த சிந்தனைகளாகும் என்பது புலனாகும். இவ்வாறான அஞ்ஞானமிகுந்த சிந்தனையிருக்கும் ஒருவருக்கு இவ்வுலகிலுள்ள அனைத்து செல்வத்தினை கொண்டேனும் மெய்ஞானத்தை தோற்றுவிக்க முடியாது. மெய்ஞானத்தை தோற்றுவித்த ஒருவரது துணை வேண்டும்.

எவராயினும் ஒருவரது அகத்தே மெய்ஞானத்தை தோற்றுவிக்க வேண்டுமாயின் அவருக்கு மெய்ஞானத்தை தோற்றுவித்த ஒருவரது வழிகாட்டல் அவசியமாகும். "புத்தங் சரணங் கச்சாமி" என நாம் அதனையே செய்கிறோம். இவ்வாறாக நாம் மும்மணிகளையும் சரணடைந்த பின்பு தான் எமது சிந்தனை போராட்டத்தில் பரிபூரணமாக ஈடுபட முடியும்.

**நிலம், நீர், சமுத்திரம், தர்மம்.**

புத்த பகவானது தர்மமானது நீரினால் சூழப்பட்ட ஒரு தீவினை போன்றதாகும். பிறவிப்பயணத்தினை புத்த பகவான் பெருங்கடலுக்கே உவமித்துள்ளார். ஒருவர் கடலில் விழுந்தால் கடலில் வாழும் ஆபத்து மிகுந்த

உயிரினங்களினால் பாதிக்கப்படலாம். கடலுக்குள் விழுந்தவர் இந்த ஆபத்தினை உணர்வாராயின் என்ன செய்வார்? அவர் சுற்றும் முற்றும் நிலம் தென்படுகிறதா என பார்ப்பார். இவ்வாறாக நீந்தி நீந்தி பார்க்கும் போது அவருக்கு நிலமேதும் தென்பட்டால் அவர் அத்திசையை நோக்கி நீந்துவார் அல்லவா? அதற்கு காரணம் என்ன? ஆம் நிலம் அவருக்கு பாதுகாப்பளிக்கிறது என்பதனை அவர் உணர்நதார். அதுவே காரணம். புத்த பகவானது வாழ்க்கையும் அவரது சீடர்களுக்கு ஒரு தீவினை போன்றதாகும். நாம் அதனை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் அந்த தர்மத்தினை நோக்கி பயணிக்க முடியும். நாம் வேறு வேறு திசையில் பயணித்தால் ஒருபோதும் சரியான புகலிடத்தினை அடைய முடியாது. எவரேனும் ஒருவர் தீவினை அடைய முயற்சிக்காது வேறு வேறு திசைகளில் பயணிப்பாராயின் அவரது கண்களின் எல்லைக்கு மகா சமுத்திரமே இருக்கும். அப்படியாயின் அவரது வாழ்வு பாதுப்பற்றதல்லவா? புகலிடம் தேவையாயின் தீவை நோக்கியே பயணிக்க வேண்டும். ஒருவர் இவ்வாறே தான் பின்பற்றுவதற்கான சமயத்தினையும் தெரிவு செய்ய வேண்டும்.

## உங்களுக்கும் ஒரு இலக்கு இருக்க வேண்டும்.

ஒருவர் பிறப்பு, முதிர்ச்சி, மரணம் மற்றும் சகல துன்பங்களிலிருந்தும் நீங்குவதற்காகவே சமயத்தினையோ அல்லது ஒரு ஆன்மீக தலைவரையோ தெரிவு செய்ய வேண்டும். இக்காரணங்களுக்காகத்தான் ஒருவர் சமயத்தினை தெரிவு செய்ய வேண்டும்

என புத்த பகவான் கூறியது மிகவும் அற்புதமான விடயமாகும். இவ்வுலகில் வேறு ஒருவரும் இதனை கூறவில்லை என்றால் அது பிழையாகாது. நாம் அனை-வருமே புத்த பகவானை சரணடைவதற்கான ஒரே நோக்கமும் அதுவேயாகும். எவரேனும் ஒருவருக்கு இந்த இலக்கு இருந்தால் அவர் புத்த பகவானை நோக்கி வருவார். அந்த தர்மத்தினை நோக்கி வருவார்.

**பிரார்த்தனையினால்...**

எம்மிள் பெரும்பாலான மக்கள் "வயது முதிர்ந்தவுடன் மோட்சமடைவதையோ அல்லது தியானம் செய்வதை பற்றியோ யோசிக்கலாம். இப்போது வாழும் வாழ்வினை நன்றாக சாப்பிட்டு குடித்து கொண்டு இருக்க வேண்டும்." என்றே சிந்திக்கிறார்கள். இதுவரை தோன்றாத எதிர்காலத்தினுள் மோட்சமடையும் இலக்கினை விட்டு வேறு வேறு விடயங்களில் உழன்று கொண்டிருப்பதானது அஞ்ஞானமிகுதியாலயே!. நாம் இவ்விடயங்களை நன்கு உணர்ந்து கொள்ள வெண்டும். இன்னும் எத்தனையோ கோடிக்கோடியான பிறப்புகள் நாம் பிறக்க வேண்டிய பயணத்திலேயே பயணித்து கொண்டிருக்கிறோம் கோடிக்கோடியான பிறப்புகள் பிறந்து அனுபவிக்க வேண்டிய துக்கத்தினை நிறுத்தும் ஒரு செய்றபாடே தர்மமாகும். அதனை நாம் காலதாமதம் செய்வதென்றால் அது எமக்கே நாம் செய்துகொள்ளும் மிகப்பெரிய துரோகமாகும்.

**புத்த பகவானது தர்மம் இன்னும் உயிரோடுள்ளது.**

அறிவுள்ளவர் தமது வாழ்வில் உள்ள

பிரச்சினையை இணங்காண திறமையுள்ளவராக வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும். தனது வாழ்விலுள்ள பிரச்சினையை தன்னால் இணங்காண முடியாவிடில். அதனை உணர முடியாவிடில் ஒருபோதும் அதனை தீர்க்க முடியாது. எமது பெரும் பாக்கியத்தின் விளைவாக புத்த பகவானது தர்மத்தினை நாம் சந்தித்துள்ளோம். எனக்கிருக்கும் பிரச்சினைதான் இந்த உன்னதமான தர்மத்தினை பின்பற்றி முடிவு புலப்படாத இந்த சன்சாரப்பயணத்தினை நிறுத்துவதற்காக முயற்சி செய்யுவோர்கள் இல்லையே என்பதாகும்.

## அஞ்ஞானம் என்றால் என்ன?

துக்கத்திலிருந்து விடுதலை பெறுவதனை எதிர்காலத்திற்கு தள்ளிவைப்பது இந்த அஞ்ஞானத்தினாலயே ஆகும். அறியாமையுடன் கூடிய மனம் உடையதாலயே ஆகும்.

01. பொதுவான கண்ணோட்டத்தோடு இவ்வுலகை பார்க்கும் போது நித்தியமானதாகவே தோன்றுகிறது. நாம் இணங்காணும் அனைத்தும் அநித்தியமாக எமக்கு தென்படுவதில்லை. நித்தியமானதாகவே தோற்றமளிக்கிறது. நிரந்தரமானவையாகவும் உறுதியானவையாகவுமாகவே தென்படுகிறது. எமது வாழ்வு தொடர்பாக சிந்திக்கும் போதும் நாம் நித்தியமானதாகவே சிந்திக்கிறோம். இவ்வனைத்துமே அறியாமை எனும் அஞ்ஞானத்தினாலயே உருவாகியுள்ளது.

02. நாற்புறமும் இன்பத்தினையே நாம் காணுகிறோம். இன்பத்தினை உருவாக்க முடியும் என்பதனையும் நாம் நம்புகிறோம். அந்த சுகத்தினை தொடர்ந்தும் நிலைத்து வைத்துக்கொள்ள முடியும் எனவும் நாம் நினைக்கிறோம். நாம் நித்தியமான சுகத்தினையே விரும்புகிறோம். இதுவும் அறியாமை கொண்ட ஒரு மனதின் இயல்பாகும்.

03. நாம் இருக்கும் எல்லா இடங்களிலும் சுப-மான விடயங்களையே எதிர்பார்க்கிறோம். அழக-ான விடயங்களை எதிர்பார்க்கிறோம். அதுவும் அஞ்ஞானத்தினாலயே தோற்றம் பெற்றதாகும்.

04. நான் என்று ஒருவர் இருக்கிறார். நான் என்று நித்தியமான ஒருவர் இருக்கிறார் என்றே நாம் உணருகிறோம். இதுவும் அஞ்ஞானத்தினால் தோற்றம் பெற்றதொரு எண்ணமே.

அன்றாட வாழ்வில் நாம் காணும் அனைத்து விடயங்களுமே நித்தியமானவை, அழகானவை, சுகமானவையே. அவை மாற்றமுறாது, நான் என்று ஒருவர் உள்ளார். என்றே நாம் நினைக்கிறோம். இதுதான் அஞ்ஞானம். இந்த அஞ்ஞானத்தினால் எமது மனம் மறைக்கப்பட்ட பின்னர் உண்மை எமக்கு புலப்படாது. அதனை காணவும் விரும்ப மாட்டோம். இந்த சத்தியத்தினை விரும்பவும் மாட்டோம். இந்த உண்மையை விரும்பாததால் பொய்மையை நிலைநிறுத்த முயற்சி செய்வோமே தவிர உண்மையை உணர முயற்சிக்க மாட்டோம்.

இந்த பயணத்தினை முடிக்க முடியுமா? நாம் காணும் அனைத்து விடயங்களுமே நித்தியமானவை, அழகா-

னவை, சுகமானவையே. அவை மாற்றமுறாது, நான் என்று ஒருவர் உள்ளார். என்பது உண்மையல்ல என ஏற்றுக்கொள்ளாததாலயே நாம் இவ்வளவு காலமும் பிறந்து கொண்டும மடிந்து கொண்டும் இந்த சன்சார பயணத்தில் பயணித்தோம். இதே கண்ணோட்டத்தில் நாம் தொடர்ந்தும் இருப்போமேயானால் எமது இந்த பயணம் இன்னும் நீளமாகுமே தவிர குறையாது. என்றோ ஒருநாள் இந்த பொய்யான பார்வையை விடுத்து மெய்யொளியை எம்முள் தோற்றுவித்து கொள்ளும் போது எமது பயணம் அன்றோடு முடிந்துவிடும். அநித்தியமானது, துக்கமானது, நான் என்ற ஒருவர் இல்லை என்பதனை காணும் போது, நாம் இந்த சன்சார பயணத்திற்கு முற்றுப்புள்ளியிட்டு விடலாம் மெய்ஞ்ஞான சிந்தனை எனக்கூறுவது அதனையே. இந்த மெய்ஞானத்தை தோற்றுவித்து கொள்ளும் வரை இதனை நிறுத்த முடியாது. இந்த சன்சாரப்பயணத்தினை நிறுத்த வேண்டுமாயின் நாம் புத்த பகவான் கூறிய தர்மத்தினையே பின்பற்ற வேண்டும்.

### மெய்ஞான சிந்தனை

மீண்டும் பிறப்பதற்கான கர்ம ஒழுங்கமைப்பை நாம் நிறுத்த வேண்டுமாயின் எம் சிந்தனையானது எமக்கு புலனாகும் இவ்வனைத்தையும் ஊடுருவிச்செல்வதாக அமைய வேண்டும். சாதாரண ஒரு சிந்தையாலோ அல்லது சாதாரண சிந்தனையாலோ இதனை செய்ய முடியாது. அதற்காகத்தான் ஒரு ஆன்மீக தலைவர் எமக்கு தேவைப்படுகிறார். இந்த தேவை ஏற்படும் போதுதான் புத்த பகவானது தர்மம் எமக்கு

தேவைப்படுகிறது. பொதுவான உலகினை மீறியதாக எழுந்து வரும் சிந்தனை சக்தி புத்த பகவான் மொழிந்த தர்மத்திழன்றி வேறு எதிலுமே கிடைப்பதில்லை. இவ்வாறான தர்மத்தினை போதித்தருளிவர் ஒருவ-ரே அவரே பாக்கியமுள்ள புத்த பகவானாவார். குறுகிய சிந்தனை வட்டத்தின் வறையறையை தகர்தெறிந்ததாகவே புத்த பகவானது தர்மம் திகழ்கிறது. இந்த தர்மத்தினை பயிற்சி செய்வதால் அதற்கான பெறபேறுகளை இவ்வாழ்விலேயே காணக முடியும். அப்படியிருக்க அதனை தள்ளிவைப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனமாகும்? “நான் இந்த தர்மத்தினை முதிர்ச்சியடையும் போது பயிற்சி செய்வேன்” என தோன்றியிராத எதிர்காலத்தில் தள்ளி வைத்துவிட்டு ஏன் நாம் துன்புற வேண்டும்? அதனால் அறிவினை பயன்படுத்துங்கள்.

புத்த பகவானது தர்மமத்தினை தூய்மையாக கேட்பது மிகவும் அரிதானதாகும். புத்த பகவானது தர்மம் எல்லாக்காலங்களிலும் கேட்கக்கூடிதொன்றல்ல. மிக மிக அரிதாகவே இந்த தர்மத்தினை செவிமடுக்க முடியும். அதனால் இந்த தர்மத்தினை கொண்டு எமது உள்ளக வாழ்விற்கு நல்லதோர் அடித்தளத்தினை நாம் இட வேண்டும். மிக அரி-தாக கிடைக்க வேண்டிய அனைத்துவிடயங்களுமே எமக்கு கிடைத்திருக்கிறது. புத்த பகவான் ஒருவரை-யோ அவர் மொழிந்த தர்மத்தினையே ஒருவருக்கு சந்திக்க நேர்ந்தால் அது மிகவும் அரிதாக நிகழும் ஒரு நிகழ்வாகும் அதேபோல் மனித பிறவி என்பதுவும் மிகவும் அரிதான விடயமே. இவ்வனைத்தும் எமக்கு

கிடைத்திருக்கிறது. கிடைத்து கொண்டிருக்கிறது. இந்த அரிதான சந்தர்ப்பத்தினை நழுவ விடாதீர்கள். அப்படி நீங்கள் செய்து கொண்டீர்களாயின் அது உங்களுக்கு நீங்களே செய்துகொள்ளும் மிகப்பெரிய தீங்காகும்.

**தெளிவானதொரு இலட்சியம் வேண்டும்.**

நான் இவ்வாழ்விலேயே எவ்வாறாவது அனைத்து துன்பங்களிலிருந்தும நீங்க வேண்டும் எனும் ஒரு இலட்சியம் இருக்க வேண்டும். இவ்வாறானதொரு இலட்சியத்தினை உருவாக்கிகொள்ளாமல் துக்கத்திலிருந்து நீங்க முடியாது. எமது வாழ்வினை நாம் இணங்கான வேண்டும். அதேபோல் துக்கம் என்பது என்ன? என்பதனையும் இணங்கான வேண்டும். இந்த வாழ்வினை உய்த்துணர வேண்டும்.

**பிரார்த்தனை செய்வதால் துக்கத்திலிருந்து மீள முடியாது.**

நாம் இவ்வாறு நினைத்து பார்ப்போம். ஒருவர் ஆழமானதொரு குளத்தில் தவறி விழுந்துவிட்டார். அவருக்கு நீந்தவும் தெரியும். ஆனால் அவர் நீந்தி கரையேற முயற்சிக்காமல் 'ஐயோ எனக்கு கரையேறும் பாக்கியம் கிடைக்க வேண்டும்' என பிரார்த்தனை செய்துகொண்டிருந்தால் அவரால் கரையேற முடியமா? முடியாது.

அதேபோல் சன்சாரம் எனும் பிறவிப்பெருங்கடலில் விழுந்த உயிர்களும் 'இந்த சன்சாரத்திலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும்'. என வாய்ப்பேச்சில் மாத்திரம் கூறிக்கொண்டிருந்தால் அவர் தாமாகவே மோட்சத்தினை நோக்கி செல்வாரா? இல்லை. அவர்

அதற்காக முயற்சி செய்தேயாக வேண்டும்.

### இன்னும் தாமதமில்லை.

புத்த பகவான் தரித்திருந்த காலத்தில் நாம் இருந்திருந்தால் எமது இந்த சன்சார பிரச்சினை முற்றுப்பெற்றிருக்கும். புத்த பகவான் இப்போது இல்லை. இல்லை என்றாலும் எமக்கு அது மிகப்பெரிய நஷ்டமில்லை. புத்த பகவான் எம்மை தனிமைபடுத்தி பரிணிர்வாணம் எய்துவிடவில்லை. எமக்கு ஒரு புகலிடத்தினை அமைத்து கொடுத்தே பரிணிர்வாணம் அடைந்தார். அதனால் இன்றும் புத்த பகவானை எம்மால் காண முடியும். புத்த பகவானை அவர் மொழிந்தருளிய தர்மத்தினாலயே காண முடியும் வேறு வழிகளில்லை. அதனால் எம்மனைவருக்கும் கிடைத்துள்ள இந்த அரிய வாய்பினை இழந்து விடாதீர்கள். எமது சிந்தையுனுள் புத்த பகவானது அளப்பரிய ஞானத்தினை உணர வேண்டும். புத்த பகவானது ஒப்பற்ற ஞானத்தினை நாம் உணர வேண்டுமாயின் எம்மிடம் சில விடயங்கள் இருக்க வேண்டும். அதில் முதலாவதுதான் சிரத்தை எனப்படும் நம்பிக்கையுடன் கூடிய திடகாத்திரமான பக்தியாகும். அது பாளி மொழியில் சத்தா எனக்கூறப்படுகிறது.

### சத்தா என்றால் என்ன?

வருடத்திற்கு ஒருமுறை யாத்திரை செல்வதையே சத்தா என சிலர் நினைத்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் தாம் வீடுகளில் சமைக்கும் உணவிலுர்ந்து சிறிதினை புத்த பகவானுக்கு படைத்து

பூஜிப்பதனை சத்தா என சிலர் நினைக்கின்றனர். அவ்வாறில்லாவிடில் வருடத்திற்கு ஒருமுறை ஒரு தாதுகோபுரத்திற்கு மகா பூஜைகளை செய்வதை சிலர் சத்தா என நினைத்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு செய்கின்ற அனைவருக்கும் நம்பிக்கையுடன் கூடிய திடகாத்திரமான பக்தி எனப்படும் சத்தா இருக்கிறது என்று கூற முடியாது. சத்தா என்றால் தாம் பின்பற்றும் விடயம் தொடர்பாக மிகத்தெளிவாக இணங்கண்டு கொள்ளலும் அவ்வாறு இணங்கண்டதன் மீது ஏற்படும் விருப்புமாகும்.

**புத்த பகவானை இணங்கண்டுகொள்வோம்.**

புத்த பகவான், "தெளிவான முறையில் புத்த பகவா-னை இணங்கண்டு கொள்வதனையே சத்தா" எனக்குறிப்பிட்டுள்ளார். அப்படியாயின் நாமும் புத்த பகவானை சரியாக அறிந்து கொள்ள வேண்டும். அந்த மகா உத்தமர் யார் என்பதனை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒருவர் புத்த பகவா-னை அறிந்துகொண்டதன் பின்னர் அவர் மொழிந்த தர்மத்தினை உணரக்கூடியதாக இருக்கும். அவ்வாறில்லாவிடில் எம்மனதில் தோன்றியிருக்கும் இந்த பக்தியானது மிகவும் சிறிதளவேயாகும். அந்த சத்தாவை யாராலும் எப்போதும் மாற்ற முடியும். அவ்வாறு மாற்றமடையும் சில சந்தர்ப்பங்களை நான் உங்களுக்கு கூறுகிறேன்.

"..நாம் இவ்வளவு காலமும் புத்த பகவா-னை சரணடைந்திருக்கிறோம்..இவ்வளவு பூஜைகளை செய்கிறோம். ஆனால் எமக்கு ஒன்றுமே சரிவந்த

*நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ*
*சம்மாசம்புத்தஸ்ஸ*
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மாசம்புத்த
பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 04.

# விபங்க சூத்திரம்.

நாம் இன்று செவிமடுப்பது விபங்க சூத்திரமாகும். இந்த சூத்திரத்தினை புத்த பகவான் சாவத்திய நகரிலிருந்து போதித்தார்.

புத்த பகவான், “பிக்குக்களே! நான் உங்களுக்கு படிச்சசமுப்பாதத்தினை (காரண காரிய செயற்பாட்டினை) கூறுகிறேன். தெளிவுபடுத்ததுகிறேன்.” என்று கூறி பின்வருமாறு மொழிந்தார்.

“**அவிஜ்ஜா பச்சயா சங்காரா, சங்கார பச்சயா விஞ்ஞானங், விஞ்ஞான பச்சயா நாமரூபங், நாமரூப பச்சயா சழாயதனங், சழாயதன பச்சயா பஸ்ஸே ா, பஸ்ஸ பச்சயா வேதனா, வேதனா பச்சயா தண்ஹா, தண்ஹா பச்சயா உபாதானங், உபாதான பச்சயா பவோ, பவ பச்சயா ஜாதி, ஜாதி பச்சயா**

**ஜரா மரணங் சோக பரிதேவ துக்க தோமனஸ்ஸ "பாயாசா சம்பவந்தீ. ஏவமேதஸ்ஸ கேவலஸ்ஸ துக்கக்கந்தஸ்ஸ சமுதயோ ஹோதி"**

இந்த கூற்றின் இறுதியாக **'ஏவமேதஸ்ஸ கேவலஸ்ஸ துக்கக்கந்தஸ்ஸ சமுதயோ ஹோதி.'** அதாவது இவ்வாறு தான் இவ்வுலகின் அனைத்து துக்கங்களும் தோன்றுகிறது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியாயின் படிச்சசமுப்பாதம் என்பதன் அர்த்தம் துக்கம் தோன்றும் விதம் என்பதாகும். படிச்சசமுப்பாதம் என்று கூறுவது துக்கம் தோன்றுவதற்கான காரண கார- ிய விதிமுறையாகும். எமது வாழ்க்கை படிச்சசமுப்பாத முறைக்கேற்ப அமைந்திராவிட்டால் துக்கம் என்பது தோன்றாது. துக்கம் இல்லாமல் போய்விடும். துக்கம் எமது வாழ்வில் நிலைத்திருக்க காரணம் படிச்சசமுப்பாதம் எனும் செயற்பாட்டினாலாகும். புத்த பகவான் இதனை பல்வேறு முறைக- ளில் மொழிந்துள்ளார். இந்த போதனையில் புத்த பகவான் படிச்சசமுப்பாதத்தினை ஒவ்வொன்றாக விபரிக்கிறார். எமக்கு இலகுவாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்வதற்காகவே புத்த பகவான் இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளார். நாம் 'நான்' என்ற ஒருவரை எமது வாழ்க்கையில் இறுக பற்றிப்பிடித்திருப்பதற்கு காரணம் எமக்குள் இடம்பெறுவது, ஒரு காரண காரிய செயற்பாடு என்பதனை அறிந்திராமையாலயே.

ஒருநாள், ஆனந்த தேரர் புத்த பகவானிடம் 'பாக்கிமுள்ள பகவானே! என்னால் இந்த படிச்சசமுப்பாத செயற்பாட்டினை தெளிவாக உணரக்கூடியதாக இருக்கிறது. என்னால் இந்த படிச்சசமுப்பாத

செயற்பாட்டினை இலகுவாக புரிந்துணர முடியும் என்றே நினைக்கிறேன்' என்று கூறினார். அதற்கு புத்த பகவான் 'ஆனந்த அவ்வாறு கூற வேண்டாம். இந்த படிச்சசமுப்பாத செயற்பாட்டினை உய்த்துணர முடியாததால்தான் உயிர்கள் சிக்குண்ட நூல் பந்தினை போல் மென்மேலும் சிக்கி திணருகிறார்கள். எவ்விதமான முறையிலும் அடி முடி தேடிக்கொள்ள முடியாத வண்ணம் இந்த பிறவிப்பெருங்கடலில் மூழ்கியிருக்கிறார்கள். ஒருவர் இந்த படிச்சசமுப்பாத செயற்பாட்டினை உய்த்துணர்ந்து கொள்வாராயின் அவர் முழுமையாகவே துன்பத்திலிருந்து நீங்கி விடுவார்' என மொழிந்தார். அப்படியாயின் புண்ணியவர்களே! நாமும் இந்த படிச்சசமுப்பாத செயற்பாட்டினை நன்றாக செவிமடுத்து சிறப்பாக கற்றுணர்ந்து, கல்லில் எழுதிய எழுத்தினை போல் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். தாகத்தில் உள்ள ஒருவர் நீரருந்துவது போல் மிகுந்த பக்தியுடனும் ஆர்வத்துடனும் செவிமடுக்க வேண்டும். இவ்வாறாக ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அதனை உய்த்துணர முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறாக உய்த்துணர்ந்தால் உறுதியாகவே இந்த பிறவிப்பெருங்கடலிருந்து எம்மால் நீங்க முடியும்.

### பிறப்பதால் துக்கம்.

புத்த பகவான் இந்த துக்கம், கவலை என்பனவற்றின் தோற்றத்தினை இவ்வாறு விபரிக்கிறார். 'ஜாதி பச்சயா ஜரா மரணங் சோக பரிதேவ துக்க தோமனஸ்ஸுபாயாசா சம்பவந்தீ.' இந்த படிச்சசமுப்பாத செயற்பாட்டினால் தோன்றியிருக்கும்

அதன் இறுதி விளைவினை புத்த பகவான் கூறுகிறார். அவைதான் முதிர்ச்சியும் மரணமுமாகும். ஒருவரேனும் முதிர்ச்சி மற்றும் மரணத்திலிருந்து விடுதலை பெற்றவர்களாக இல்லை. இன்னும் எத்தனை பிறப்புக்களில் இந்த முதிர்ச்சி மற்றும் மரணத்திலிருந்து நாம் அவஸ்தைபடுவோம் என்பதனையும் நாம் அறிந்திரோம். முதிர்ச்சி மற்றும் மரணம் எனும் இரண்டும் மனித உலகினோர்க்கு மாத்திரம் உரியதானதல்ல. அது முழு உலக தாதுக்களுக்கே பொதுவான ஒரு விடயமாகும். தேவ, பிரம்ம உலங்களிலும் முதிர்ச்சி மற்றும் மரணம் இருக்கிறது. மிருகலோகத்தில் இவை இருப்பதனை நாம் கண்களாலேயே காணுகின்றோம். மனிதர்களாக வாழும் நாம் இதனை அனுபவிக்கிறோம்.

முதிர்ச்சியடைந்த ஒருசிலர் தான் இருக்கும் இடத்திலேயே மலசலம் கழித்து கொள்கின்றனர். வாயினால் உணவு உண்ண முடியாது. மூக்கினுள் குழாய்களை செலுத்தியே உணவினை வயிற்றுக்கு அனுப்ப வேண்டும். சுய உணர்விழந்தே அதிக நேரங்களில் இருப்பார்கள். பேசவும் முடியாது. ஆனால் இறக்கவும் இல்லை. இம்மாதிரியான நிலைமைகளுக்கு ஆளாக நாம் விரும்புவோமா? நாம் விரும்பாவிடிலும் இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் எம்வாழ்வில் ஏற்படாது என்று எம்மால் கூற முடியாது. இம்மாதிரியான நிலமை ஏற்பட்டால் என்ன செய்வது? என்னதான் செய்வது மீண்டும் அடுத்த பிறவி பிறப்பதற்கு ஒட்டிக்கொள்ள வேண்டியதுதான். வேறு என்ன செய்வது? “இந்த வீடு மிகவும் சிறிதாக உள்ளது. இதனை விட மி-

கவும் வசதி படைத்த பெரியதொரு வீட்டில் பிறக்க வேண்டும்" என்று தான் மனதில் தோன்றும். சன்சாரத்தின் பயங்கரத்தை சிந்திக்காவிட்டால் முதிர்ச்சியடைவதால் எம்மால் தொடர்ந்தும் கவலையுறாமல் இருப்பதனை தவிர வேறொன்றும் செய்ய இயலாது. தோல் சுருங்குதல், பற்கள் விழுதல், முடி நரைத்தல், கைகால்கள் சக்தியிழந்து போதல் போன்றவை என்ன? அதுதான் **'ஆயுனோ சங்ஹானி'** **'ஆயு'** என்றால் உயிர் வாழ்வதற்கான சக்தியாகும். அது தீர்ந்து போகும். **'இந்திரியானங் பரிபாகோ'** கண் காது போன்ற புலன்கள் முதிர்சியடையும். எமது கண்கள் புலப்படும் வரை, காதுகள் கேட்கும் வரை கால்களால் சுயமாக நடந்து செல்லும் வரை நாம் திடகாத்திரமானவர்களாகவே இருப்போம். இந்த புலன்கன் வலுவிழந்து போகும் போது எமது ிழறநச எம்மையறியாமலேயே இல்லாமல் போகிறது. நாம் இதனிலிருந்து ஒரு விடயத்தை உணர வேண்டும். அதுதான் எமக்கும் இதே கதிதான் ஏற்படும். ஒருநாளும் அதனை தடுக்க முடியாது என்பதனையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். விஞ்ஞானமோ தொழிநுட்பமோ எவ்வளவு முன்னேறினாலும் இதனை யாராலும் தடுக்க முடியாது.

ஒரு சந்தர்ப்பத்தில் புத்த பகவான் ஆராமத்தின் நிழலிலே ஓய்வெடுத்து கொண்டிருந்த போது ஆனந்த தேரர் பகவானிடம் "பாக்கியமுள்ள பகவானே! தங்களின் திருமேனி முன்பு போலில்லை. தோல் சற்று சுருங்கியுள்ளது. லேசாக கூன் விழுந்தும் உள்ளது" எனக்கூறினார். அதற்கு புத்த பகவான் "இந்த உடல்

இவ்வாறான இயல்பினை கொண்டதாகவே உள்ளது. இவ்வுடல் இழிவுமிக்கதாகும்." எனக்கூறினார். இவ்வாறாக புத்த பகவான் தன்னுடைய திருமேனியையே இழிவுக்குட்படுத்தியுள்ளார். அந்த திருமேனியும் இன்றில்லை. அந்த திருமேனியும் அழிவுக்குட்பட்டுவிட்டது.

**முதிர்ச்சிக்கு அடுத்த படியாக இருப்பது மரணமாகும்.**

முதிர்ச்சியடைந்து மரணிக்கின்றனர். தேவ உலகங்களிலிலென்றால் மறைந்துவிடுவார்கள். **'மச்சு மரணங்'** மரணித்து விடுவார்கள். உருவம், அனுபவிப்பு, இணங்காணல், சிந்தனை, விஞ்ஞானயம் எனும் ஐந்தும் சிதறிப்போகுமென்றால் அதுவே மரணமாகும். இந்த பஞ்ச உபாதானஸ்கந்தங்கள் எம்மனைவருள்ளும் இருக்கிறது. இது மரணிக்கும் இயல்பினை கொண்டது. நீங்கள் மரணிப்பதனை விரும்புகிறீர்களா? தர்மத்தினை உய்த்தறிந்து நான் எனும் எண்ணத்தை அகற்றிய காலத்தில் மரணிப்பது எமக்கு பிரச்சினையாக அமையாது. எமக்குள்ள எல்லா பிரச்சினைகளுக்கும் காரணம் 'நான்' எனும் எண்ணத்தினால் அனைத்தையும் பற்றிக்கொண்டதனால்தான். நாம் இவ்வாறாக அனைத்தையும் பற்றிக்கொண்டிருக்கும் வரை துக்கம் எனும் செயற்பாடு இடைவிடாது எம்முள் செயற்பட்டுக்கொண்டே இருக்கும்.

**முதிர்ச்சியும் மரணமும் பிறப்பினால்தான்**

நாம் வாழும் இவ்வாழ்க்கையில் எவ்வளவு சோகங்கள், அழுகைகள், புலம்பல்கள், துக்கங்கள், கவலைகள்

சந்திக்க வேண்டியதாக உள்ளது? புத்த பகவான் “முதிர்ச்சி மற்றும் மரணத்தோடு சோகங்கள், அழுகைகள், புலம்பல்கள், துக்கங்கள், கவலைகள் என்பன நாம் அனுபவிக்க காரணம் பிறப்பேயாகும்.” என்று மொழிந்துள்ளார். சில முட்டாள்கள் இவ்வாறாக நினைத்து கொண்டிருக்கின்றனர். “பிறந்ததால் தானே இந்த துக்கம் அதனால் நான் இறந்து விடுகிறேன்” என்று தற்கொலை செய்து கொள்கின்றனர். இவ்வாறாக இறப்போருக்கு என்ன நடக்கும்? மறுபடியும் துக்கம் இருமடங்காகி பிறப்பார்கள். முட்டாள்கள் இறந்து தனது துக்கத்தினை னழரடிடந செய்து கொள்கிறார்கள். ஒரு கர்மத்தினை அனுபவிக்கவிருக்கும் போது மேலும் அனுபவிப்பதற்காக இன்னுமொரு கர்மத்தினையும் சேகரித்து கொண்டு மரணிக்கிறார்கள். அதன-ால் இருகர்மங்களை அனுபவிக்க வேண்டும். ஒரு-நாளும் மரணிப்பதால் நிம்மதியடைய முடியாது. மாறாக தர்மத்தினை உய்த்துணருவதாலயே நிரந்தரமாக நிம்மதியடைய முடியும்.

புத்த பகவான், பிறப்பு எனும் காரணத்தினாலயே துக்கம் ஏற்படுகிறது என்பதனை மிகத்தெளிவாகவே மொழிந்துள்ளார். உலகில் வேறு எந்த சமயங்களிலும் பிறப்பதால் தான் துக்கம் ஏற்படுகிறது என்று குறிப்பிடப்படவில்லை. நாம் மரணித்து மீண்டும் மனித உலகில் பிறக்க நேரிட்டால் நாம் எச்சமயத்தினை சார்ந்ததொரு குடும்பத்தில் பிறப்போம் என்று கூற முடியாது. அதனால் இவ்வாழ்விலேயே தர்மத்தினை உய்த்துணரவே முழு முயற்சி எடுக்க வேண்டும்.

அவ்வாறில்லாவிடில் இதுபோன்ற் துரதிஷ்டம் வேறெதுவும் இல்லை என்றே கூறலாம். உங்களை நீங்களே நினைத்து பாருங்கள். “இதை விட செத்துபோனால் நல்லம்” எனும் எண்ணம் தோன்றாத ஒருவரேனும் இங்கு இருக்கிறீர்களா? இல்லை. வாழ்வில் ஒரு நொடியேனும் நாம் இவ்வாறு நினைத்திருக்கிறோமல்லவா? அந்தளவிற்கு எமது வாழ்க்கை வெறுத்து போகும் சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த முதிர்ச்சியும் மரணமும் கடவுளால் தோற்றுவிக்கப்பட்ட விடயங்களன்று என புத்த பகவான் மொழிந்துள்ளார். முதிர்ச்சியும் மரணமும் தானாக தோன்றும் விடயங்களுமல்ல. காரணத்தினாலயே தோன்றியுள்ளது. பிறப்பு என்ற காரணத்தினால் தான் முதிர்ச்சி எனும் பலன் தோன்றியுள்ளது.

**பிறப்பு.**

பிறப்பு என்றால் என்ன? அவ்வவ் இடங்களிலே எமது பஞ்ச உபாதானஸ்கந்தத்தின் தோற்றம் பிறப்பு எனப்படுகிறது. விஞ்ஞானயத்தின் செயற்பாட்டிற்கு என்ன நடந்தது? விஞ்ஞானயம் தாயின் வயிற்றுக்கு வந்து வளர்ச்சியுற்றது. அதனால் நாம் பிறந்தோம். விஞ்ஞானயம் என்றால். ஒன்றினை விசேடமாக அறிந்துகொள்ளும் மனவியல்பாகும். விஞ்ஞானயம் ஒரு போதும் தனியே செயற்படாது. விஞ்ஞானயம் இருப்பது உருவத்தினை பற்றிக்கொண்டபடி அனுபவிப்பு, இணங்காணல், சிந்தனை, எனபவற்றினை பற்றியபடி பேராசையுடனே இருக்கிறது. இவ்வாறாயின் அங்கு பஞ்ச உபாதானஸ்கந்தங்களுமே இருக்கிறது.

**நரகத்திற்கு செல்லும் மூட நம்பிக்கை கொண்டோர்..**

ஒரு உபாசகி, உபாசகி என்றும் கூற முடியாது..மூட நம்பிக்கை கொண்ட ஒரு பெண் எனக்கு விஞ்ஞானயம் தொடர்பாக குறிப்பிடப்பட்ட கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தார். பெண் விஞ்ஞானயம், ஆண் விஞ்ஞானயம் என்று இரண்டு உள்ளது. இரு விஞ்ஞானயமும் சேரும் சந்தர்ப்பத்தில் குழாய் மூலம் இவ்விரு விஞ்ஞானயமும் பயணித்து குழந்தை பிறக்கும். இந்த குழந்தைதான் உருவம். குழந்தைக்கு பெயரிட்டதும் அதுவெ நாமம். இது தான் நாம ரூபம் என்று குறிப்பிடப்பட்டடிருந்தது. பாருங்கள், இந்த பெண்ணுக்கு எவ்வளவு பெரிய மூட நம்பிக்கை இருந்துள்ளதென்று. அதில் மேலும் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

நீங்கள் போதனைகளில் குறிப்பிடுவது பெண் விஞ்ஞானயம் தொடர்பாகவா? அல்லது ஆண் விஞ்ஞானயம் தொடர்பாகவா? என்று. நான் முழுக்கடிதத்தின் மீது சிவப்பு நிற பேனையால் பிழை அடையாளமிட்டு "நீங்கள் மூட நம்பிக்கைகளை கொண்டிருக்கிறீர்கள். இந்த மூட நம்பிக்கைகளை உங்களுக்கு கற்று கொடுத்தது யார்? புத்த பகவா-னது தர்மத்தில் இல்லாத விடயங்களை புத்த பகவா-னது தர்மத்தில் உள்ளது இப்படித்தான் எனக்கூறி புத்த பகவானது தர்மத்தினை நிந்தனை செய்யும் பெரும் பாவத்தினை செய்து கொள்ளாதீர்கள். இவ்போதனைகளை வாசித்து உங்களது மூட நம்பிக்கைகளிலிருந்து விடுதலை அடைந்து தெளிவு பெருங்கள்" என்று குறிப்பிட்டு புத்த போதனைகள் சிலவற்றையும் அவருக்கு அனுப்பி வைத்தேன். எவ-

ரேனும் ஒரு மூட நம்பிக்கை கொண்ட முட்டாள் கூறுவதை செவிமடுத்து தன்னையும் முட்டாளாக்கி கொள்பவர்கள் தான் இவர்கள். பாருங்கள் புண்ணியவர்களே! பெறுமதியான தர்மத்தினை உய்த்துணரும் பெரும் பாக்கியத்தை இழந்துவிட்டார்கள். அப்படியாயின் அசத்தர்மத்திலிருந்து சத்தர்மத்தினை வேறுபடுத்தி அறிந்து கொண்டு சத்தர்மத்தினை செவிமடுப்பதற்கு நாம் திறமை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

## தனிமையான விஞ்ஞானயம் இல்லை.

விஞ்ஞானயம் தனித்திருப்பது அல்ல. உயிர்கள் பிறக்கும்
முறைகள் எத்தனை? ஆம்..நான்கு வகைப்படும்

01. அண்டஜ (முட்டையுனுள் பிறத்தல்)
02. ஜலாபுஜ (தாயின் வயிற்றில் பிறத்தல்)
03. சங்சேதஜ (ஈரலிப்பான இடங்களில் பிறத்தல்)
04. ஓபபாதிக்க (இம்மூன்று முறைகளிலல்லாது பிறத்தல்)

தேவர்கள், பிரம்மர்கள், நரகவாசிகள், பிரேத ஆத்மாக்கள் என்போர் ஓபபாதிக்க முறையில் தோன்றுவார்கள் இதாவது முட்டையுனுள் இல்லாது தாயின் கருவறையிலல்ாது ஈரலிப்பான சூழலில்லாது தோன்றுதல் தான் ஓபபாதிக பிறப்பாகும். மிக மிக அரிதாக சிற்சில மனிதர்களும் ஓபபாதிக முறையில் தோன்றுவார்கள் என்று தர்மத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. புத்த பகவான் தான் இவற்றினை மொழிந்தார். புத்த பகவான் இவற்றினை பார்த்தார். புத்த பகவானது தர்மத்தினை நாம் கற்க வேண்டுமானால் அவர்

மொழிந்த தர்மத்தினையே செவிமடுக்க வேண்டும். வேறு வேறு மூட நம்பிக்கைகளையும் செவிமடுத்தால் அதன் நஷ்டம் தமக்கே உரியது.

## நிறுவனங்களின் தோற்றமே பிறப்பு.

நாம் ஒரு விடயத்தினை நன்கு புரிந்து கொள்ள வேண்டும் அதுதான் எங்கு பிறந்தாலும் முதிர்ச்சியும் மரணமும் நிச்சயமாக பிறப்போடு தொடர்ந்து வரும் ஒரு விடயம் என்பதனை. நாம் பிறப்பதனால் எமக்கு கிடைப்பது என்ன? கண், காது, நாசி, நாவு, உடல், மனம் என்ற நிறுவனங்களாகும். இன்று பிறந்த குழந்தையிடம் இருப்பதுவும் இவைதான். இவற்றை தவிர வேறு எதுவும் இல்லை. இந்த ஆறு நிறுவனங்களிலுள்ளும் இருப்பது ரூப(உருவம்), வேதனா(அனுபவிப்பு), சஞ்ஞா (இணங்காணல்), சங்கார (சிந்தனை), விஞ்ஞான (விஞ்ஞானயம்) **'கந்தானங் பாதுபவோ..'** எனும் ஐவகையான ஸ்கந்தங்களின் தோற்றமாகும். **'ஆயதனானங் படிலாபோ'** கண், காது, நாசி, நாவு, உடல், மனம் என்ற நிறுவனங்களின் தோற்றமாகும். இதுதான் பிறப்பு. முதிர்ச்சியும் மரணமும் நிகழ்வது அதனால்தான்.

## பகவான் புத்தர் ஒருவரது உதவி அவசியம்

புத்த பகவான் ஒருவரை சந்திக்கும் வரை இந்த செயற்பாட்டினை யாராலும் அறிந்து கொள்ள முடியாது. புத்த பகவானது தர்மத்தினை தெளிவாகவும் சரியாகவும் செவிமடுக்காவிடில் இந்த செயற்பாட்டினை இவ்வுலகில் யாராலுமே அறிந்து கொள்ள முடியாது.

## பிறந்தது ஏன்?

எதனால் பிறப்பு கிடைத்தது? கடவுளின் விருப்பத்தினாலா? இல்லை. தானாக இயற்கையாக நிகழும் ஒன்றா? இல்லை. தன்னுடைய விருப்பின் பேரிலா? இல்லை. தன்னுடைய விருப்பின் படி இவ்வாறு நிகழ்வதென்றால் அடுத்த பிறவியை பிறக்காமலும் இருக்கலாம் தானே. அவ்வாறில்லாவிடில் தான் விரும்பும் இடத்திலாவது பிறக்கக்கூடியதாக இருக்கும். சிலபேர் என்னிடம் வந்து “சுவாமியே! அடுத்த பிறவி என்றால் எனக்கு வேண்டாம்!..” எனக்கூறுகின்றனர். இவ்வாறு விரும்புவதால் பிறக்காமல் இருக்க முடியுமா? நாம் வேண்டாம் வேண்டாம் எனும் போது தான் இவ்வளவு காலமும் பிறந்துள்ளோம். பிறப்பதற்கான காரணத்தை அழிக்கும் வரை நாம் விரும்பினாலும் விரும்பாவிடிலும் பிறந்து கொண்டே தான் வருவோம்.

## பிறப்பிற்கு காரணம் பலனளிக்கும் கர்மமே!

பிறப்பிற்கு காரணம் பலனளிக்கும் கர்மமே (பவ) என புத்த பகவான் மொழிந்தார். இதனை புத்த பகவானே கண்டு பிடித்தார். இதனை வேறு எவரும் கண்டு பிடிக்கவில்லை. வேறு எவரும் கூறவுமில்லை. புத்த பகவான் இதனை எவ்வித குருவினது உபதேசமுமின்றி தன் சுய ஞானத்தினாலயே உய்த்துணர்ந்தார். பவ என்றால் பலனளிக்கும் வகையில் கர்மங்கள் சேர்வதாகும். நாம் மனதினால் பலனளிக்கும் வகையில் கர்மங்களை சேகரிக்கிறோம். நாம் வார்த்தையினால் பலனளிக்கும் வகையில் கர்மங்களை சேகரிக்கிறோம். அதேபோல் நாம் உடலினால் பலனளிக்கும் வகையில் கர்மங்களை சேகரிக்கிறோம். இவ்வாறாக

கர்மங்களை செய்யும் போது எமக்கும் பலனளிக்கும் வகையில் கர்மம் சேர்கிறது என்பதனை நாம் ஒருபோதாவது சிந்தித்து பார்த்திருக்கிறோமா? இல்லை. ஏனெனில் இந்த செயற்பாடு தொடர்பாக நாம் அறிந்திருக்கவில்லை. ஏதோ சற்றேனும் தர்மத்தினை செவிமடுத்திருப்பதால் பெரிய பெரிய பாவங்கள் செய்யும் போது இப்போது நான் செய்வது பாவமான ஒரு செயலாகும் என்பதனை உணர முடிகிறது. ஆனால் இந்த புரிந்துணர்வு போதாது. நாம் இதனை மிகச்சரியாக புரிந்துணர வேண்டும்.

## கர்மம் தோன்றுவதற்கு அடிப்படை யாது?

சிந்தனையினாலயே கர்மம் தோன்றுகிறது. சிந்தனை மனதிலே தோன்றுகிறது. மனதினில் சிந்தனை தோன்றுவது எண்ணங்களினாலயே

01. கண்களுக்கு புலனாவது உருவங்கள். அந்த உருவத்தினை அடிப்படையாகக்கொண்டு சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

02. காதுகளினால் சப்தத்தினை செவிமடுக்கிறோம். அந்த சப்தத்தினை அடிப்படையாகக்கொண்டு சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

03. நாசியினால் மணத்தினை நுகர்கிறோம். அந்த மணத்தினை அடிப்படையாகக்கொண்டு சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

04. நாவினால் சுவையை உணருகிறோம் அந்த சுவையினை அடிப்படையாகக்கொண்டு சிந்தனை

செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

05. உடலினால் உடலுணர்வுகளை உணருகிறோம். அந்த உடலுணர்வினை அடிப்படையாகக்கொண்டு சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

06. மனதினால் எண்ணங்களை சிந்தனை செய்கிறோம்.. அந்த எண்ணங்களை அடிப்படையாகக்கொண்டு மென்மேழும் சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

**இவ்வாறான சிந்தனைகள் எம்முள் தோன்றுவதில்லையா?**

நன்றாக சிந்தித்து பாருங்கள் எதாவது சிந்தனைகள் எம்மனதில் தோன்றினால் அவை கண்ணினால் பார்த்த ஒரு உருவினை, காதினால் கேட்ட சப்தத்தினை, நாசியினால் நுகர்ந்த மணத்தினை, நாவ-ினால் சுவைத்த சுவையினை, உடலினால் உணர்ந்த உடலுணர்வினை, அல்லது மனதில் தோன்றிய எண்ணவலைகளை அடிப்படையாகக்கொண்டே தோன்றியிருக்கிறது. இவ்வாறால்லாத வேறு முறை-றயில் சிந்தனை தோற்றம் பெறாது. அப்படியாயின் நாம் சிந்திப்பது, பேசுவது, மற்றும் உடலினால் செயற்படுவது எனும் அனைத்துக்குமே எண்ணங்களே முதன்மையாக இருக்கிறது. இவ்வாறு செய்யும் அனைத்துமே பலனளிக்கும் கர்மத்தினையே தோற்றுவிக்கிறது.

**சிந்தனை அடிப்படையான கர்மம்.**

நாம் சிந்தனையை அடிப்படையாகக்கொண்டு

உடலினால், வார்த்தையினால், மனதினால் செயற்படும்போது பலனளிக்கும் கர்மங்கள் சேர்கிறது. அப்படியாயின் எம்மால் சிந்தனையின் மூலம் கர்மத்தினை தடை செய்ய முடியுமா? முடியாது. “நான் இவ்வாறானதொரு கர்மத்தினை செய்தேன் அதன் விளைவு இல்லாமல் போக வேண்டும்” என நிறுத்த முடியாது. சிந்தனையை உய்த்துணர்வதன் மூலமே கர்மத்தினை நிறுத்த முடியும். சிந்தனையை உய்த்துணரவும் சிந்தனை ஒன்றே அவசியமாகும் என்பதனை தெளிவாக புரிந்துகொள்ளுங்கள். இந்த தர்மத்தினை பரிபூரணமாக உய்த்துணரும் போது எமது அனைத்து கர்மங்களும் அழிந்து போய்விடும்.

## பவ

அடுத்ததாக நாம் பவ எனும் விடயம் தொடர்பாக ஆராய்வோம். புத்த பகவான் மூன்று வகையான பவங்கள் இருப்பதாக மொழிந்துள்ளார்.

01. காம பவ
02. ரூப பவ
03. அரூப பவ

01. உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வுகள், எனும் ஐந்தும் காமத்திற்குரியதாகும். இவ்வைந்து விடயங்களையும் கொண்ட உலகங்கள் காம உலகங்களாகும். முற்பிறப்புகளிலே உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வுகள் என்பனவற்றை அனுபவித்ததாலயே இப்பிறப்பில் காம உலகத்தில் நாம் அனைவரும்

பிறந்துள்ளோம். நாம் மீண்டும் மீண்டும் இவற்றையே விரும்பினால் எம்முள் தோன்றும் பலனளிக்கும் கர்மம் அதாவது பவத்தினால் நாம் காம உலகத்திலேயே பிறப்போம். அது நரகமாகவோ,பிரேத உலகமாகவோ அல்லது மிரு-லோகமாகவோ கூட இருக்கலாம்.

02. ஒருவர் சமத தியானங்களை செய்து நால்வகை தியான நிலகளில் ஏதேனும் ஒரு தியான நிலையை பெற்றுக்கொள்கிறார். இந்த உளச்சமாதி நிலையில் உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வுகள் என்பவற்றின் மீதான ஆசையை அடக்கிகொள்கிறார். அப்போது அவருள் ரூப பவ எனும் கர்மமே வேறூன்றும் அந்த கர்மத்தின் விளைவாக ரூப பவத்தினுள் பிறப்பார்.

03. ஒருவர் மேற்கூறிய நிலைகளை மென்மேலும் தன்னுள் வளர்த்து கொண்டு உருவத்தினை கைவிட்டு முழுமையாக மனதினை மட்டும் மேன்மைபடுத்துவதால் தோன்றும் கர்மமானது அருவ உலகங்களில் பிறப்பதற்கு காரணமாக அமையும். பிறப்பினை அழிப்பதற்கு பவத்தினை அழிக்க வேண்டும்.

இவ்வாறாக எம்முறையிலாவது எம்முள் கர்மம் தோன்றிக்கொண்டே இருக்கிறது. தர்மத்தினை முழுமையாக புரிந்துணர்ந்நது அந்த தர்மத்தினை எம்முள் காணும் வரை இதனை நிறுத்த முடியாது. விளைவுகள் தரும் வண்ணம் கர்மம் ஒழுங்குறுவது கர்மத்தின் ஒரு பண்பாகும். பவத்தினால் தான் பிறவி தோன்றுகிறது. பவ இல்லை என்றால் பிறப்பில்லை.

அப்படியாயின் பிறவி இல்லாமல் போக வேண்டுமாயின் பவத்தினை அழிக்க வேண்டும். பவ அழிகிறதென்றால் அழிவது என்ன? ஆம்.. பலனளிக்கும் கர்மம் தான் அழிகிறது. அதாவது சிந்தனையின் மூலம் கர்மம் தோன்றாமலிருக்க வேண்டும். சங்ஸ்காரங்கள் தோற்றம் பெறாமல் விசங்காரமாக வேண்டும்.

### பவ உபாதானத்தினாலயே

பவ அதாவது விளைவுகள் தரும் கர்மங்கள் தோன்றுவதற்கு காரணம் இருக்கிறது. அது தாமா-கவே தோன்றியதல்ல. பவ தோன்றுவதற்கு காரணம் யாது? ஆம்..பவ தோன்றுவதற்கு உபாதானம் தான் காரணமாக அமைந்தது. உபாதானம் என்றால், மன-தின் மீது இறுக பிணைந்து போதலாகும். இறுக பற்றிக்கொள்ளல் என சாதாரண பேச்சு வழக்கில் கூறுவோம். ஆனால் பற்றிக்கொள்ளல் என்றால் சிறு பிரச்சினை ஒன்று தோன்றும். அதுதான் பற்றிக்கொள்வதாயின் பற்றிக்கொள்ளும் ஒரு நபர் இருக்க வேண்டும். அதனை செய்யும் ஒருவரிருக்க வேண்டும். ஆனால் அப்படியான ஒருவர் இங்கில்லை. இங்கிருப்பது ஒரு செயற்பாடு மாத்திரமே. இதனை நாம் புரிந்துணர வேண்டும். ஒருநாள் புத்த பகவா-னிடம் ஒரு பிக்கு இவ்வாறு கேட்டார்.

“பாக்கியமுள்ள பகவானே! உபாதானம் என்றால் என்ன? உபாதானம் யாருக்குரியது?”

“புண்ணியமிகு பிக்குவே! உபாதானம் என்றால் என்ன? உபாதானம் யாருக்குரியது? எனக்கேட்க வேண்டாம். அந்த கேள்வி பிழையானதாகும். உபாதானம் எதனை

காரணமாகக்கொண்டு தோன்றியது எனக்கேளுங்கள்." என புத்த பகவான் கூறினார். அதன் அர்த்தம் என்ன? ஒரு செயற்பாடு தொடர்பாகவே இங்கு கேட்கப்படுகிறது. நாம் பற்றிக்கொள்ளல் என்றால் இங்கு அவ்வினையை செய்யும் ஒருவர் இருக்க வேண்டும். அப்போது உபாதானமானது தன்னால் செய்யப்பட்டதாகும் எனும் கருத்துக்கு ஒருவர் வரலாம். இவ்வாறு உபதானத்தை ஒருவர் செய்வதற்கில்லை. இந்த தர்மத்தினை உய்த்துணர்வதற்கு கடினமாவதற்கு காரணம் இதுதான். துக்கத்திலிருந்து முழுமையாக விடுபட வேண்டுமாயின் மிகவும் வீரியத்துடன் இந்த தர்மத்தினை பின்பற்ற வேண்டும்.

சிந்தனையை அடிப்படையாக்கொண்டு பவத்தின் தோற்றத்திற்காக ஏதேனும் ஒன்றுக்கு இறுக பற்றிப்போதல் உபாதானமாகும். பற்றிப்போதல் என்பது ஒரு உந்துசக்தியாக செயற்படுவதாகும். உபாதானங்கள் நால்வகைப்படும்.

01. காம உபாதானம்.
02. திட்டி உபாதானம்.
03. சீலப்பத உபாதானம்.
04. அத்தவாத உபாதானம்.

**காம உபாதானம்** என்றால் உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வுகள், எனும் ஐந்தின் மீது மனம் பற்றிக்கொள்வதாகும். இவ்வாறான விடயங்களின் மீது எமது மனம் பற்றிக்கொள்வதானது எம் அனைவரது மனதிலுள்ள சாதாரணதொரு இயல்பாகும். உபாதானம் என்பது இதற்குத்தான். கர்மம் தோன்றுவது இவ்வாறு பற்றிக்கொள்வதாலயே. பவ தோன்றுவது இந்த

உபாதானத்திலாகும். உபாதானம் இல்லையெனில் பவ இல்லை.

**திட்டி உபாதானம்** என்றால் ஒவ்வொரு கருத்துவாதங்கள் மீதான பற்றுதலாகும். சிலர் கேட்கின்ற கேள்விகளின் மூலமாக அவர்களது மனம் கருத்துவாதங்கள் மீது பற்றிக்கொண்டிருப்பதனை நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

நாம் வாழும் எமது சமூகத்தை சற்று அவதானித்து பாருங்கள் அவர்கள் தர்மத்தின் பெயரை கூறி ஆர-ாயும் விடயங்கள் என்ன? ஆவிகள் இருக்கிறதா? அவர்களுக்கு சிறகுகள் இறுக்கிறதா..? எவ்வகையான கால்கள் இருக்கிறன்றன? நகங்கள் வளருமா? அவர்கள் மிதந்து செல்பவர்களா..? அவர்களின் ஆடை என்ன? உண்ணும் உணவு என்ன..? முதுகெலும்பு இருக்கிறதா..? எனத்தேடுகின்றனர். இவ்வாறு அவர்கள் எதனை ஆராய்வு செய்கின்றனர். கருத்துவாதங்களையே தவிர வேறு எதுவுமல்ல. இவ்வாறான மூட கருத்துக்களின் பின்னே சென்றுக்கொண்டிருக்கும் போது தன்னையுமறியாமல் முதிர்ச்சியடைகின்றனர். அதன் பிறகு என்னவாகும்? ஆம்.. தன்னால் இதுவரை சேகரித்து கொண்ட கர்மத்தின் படி அனுபவிக்க வேண்டியதுதான். தனக்கு அதிலிருந்து மீளும் வழி அற்றுபோகிறது.

**கருத்துவாதங்கள் என்பன மிகவும் ஆபத்தானவையாகும்.**

ஒருநாள் புத்த பகவானிடம் ஒரு பிக்கு வந்து இவ்வாறு கேட்கிறார்.

‘பாக்கிமுள்ள பகவானே! உலகங்களின் முடிவு

என்று ஒன்றிருக்கிறதா? இல்லையா? நீங்கள் எனக்கு இவ்விடயத்தினை கற்று கொடுக்காவிடில் நான் எனது துறவினை இன்றோடு முடித்துகொள்வேன்.'

“புண்ணியமிகு பிக்குவே! நான் உங்களிடம் 'நீங்கள் என்னிடம் துறவு பூணுங்கள் அப்போது நான் தங்களுக்கு இவ்வுலகிற்கு முடிவு இருக்கிறதா? அல்லது இல்லையா என கற்றுத்தருகிறேன்' என்று கூறினேனா?”

'இல்லை. பகவானே!'

'அதனை நான் இப்போதும் கூறப்போவதுமில்லை.' என்று கூறினார்.

## பிரார்த்தனை மாத்திரம் செய்தால் பலனில்லை.

புத்த பகவான் ஒரு உவமையை மொழிந்துள்ளார். ஈட்டியால் குத்தப்பட்ட ஒருவர் இருக்கிறார். ஏனை-யோர் அவரை வைத்தியரிடம் அழைத்து செல்ல முற்படும்போது அவர் “பதற்றப்பட வேண்டாம்.. என்னை வைத்தியரிடம் அழைத்து செல்வதற்கு முன்பு இந்த ஈட்டி எந்த நாட்டில் உருவாக்கப்பட்டது என்பதனை பாருங்கள். அதற்கு எவ்வகையான உலோகத்தினை உபயோகித்திருக்கிறார்கள்? இந்த எ..்.தின் பின்பாகத்தில் இணைத்துள்ள இறகு எப்பறவையினுடையது? இந்த தகவல்களை பெறும்வரை இந்த ஈட்டியை அகற்றாதீர்கள். அதேபோல் என்னை வைத்தியரிடமும் கொண்டு செல்லாதீர்கள்.” என்று கூறுகிறார். இவ்வாறாக வாதம் செய்து கொண்டிருக்கும் போதே அவர் மரணித்துவிடுகிறார்.

இவ்வாறாகவே கருத்துவாதங்களின் விளைவும் அமைகிறது. கருத்துவாதங்களின் பின்னே இடைவிடாது ஓடிக்கொண்டிருப்பவர்களும் அதற்கான தீர்வையோ அல்லது விடையையோ காண்பதற்கு முன்னரே மரணத்தினை தழுவிக்கொள்கின்றனர். உயிர்களுக்கு மிகவும் பாரிய பிரச்சினையாக இருக்கின்ற சன்சாரம் எனும் பிறவிப்பெருங்கடலிருந்து மீள்வதனை விடுத்து மனதில் தோன்றுகின்ற கருத்துவாதங்களில் சிக்கி அந்த சிக்கல்களிலிருந்து மீள முடியாமல்தான் பெரும்பாலானோர்கள் மரணிக்கின்றனர். இவ்வாறு பல்வேறுபட்ட கருத்துக்களில் ஒட்டிக்கொள்வது மனதின் ஒரு இயல்பாகும். பசையில் ஒட்டிக்கொண்டாலும் அதனிலிருந்து கழன்றுவிடலாம். ஆனால் கருத்துவாதங்களில் ஒருவர் ஒட்டிக்கொள்வாராயின் அதனிலிருந்து மீள்வது மிக மிக கடினமாகும். இவ்வாறான மூட கருத்துக்களில் எமது மனதினை சிக்க வைப்பதற்கு பதிலாக நாம் எவ்வாறாவது இந்த சன்சாரத்திலிருந்து மீள வேண்டும். அனைத்து துக்கத்திலிருந்தும் விடுதலை அடைய வேண்டும் என்றே நினைக்க வேண்டும். ஒருவர் கருத்துவாதங்களிலிருந்து மீள வேண்டுமாயின் அவர் சத்தர்மத்தினையே செவிமடுக்க வேண்டும்.

**சீலப்பத உபாதானம்** என்றால் பிழையான விரதங்களை இறுக பற்றிக்கொண்டு அவற்றினை கடைப்பிடிப்பதாகும். சிலர் துன்பங்களிலிருந்து நீங்க வேண்டும் என்று தர்மத்தினை பின்பற்றாது பிழையான விரதங்களை மேற்கொள்கின்றனர். அவர்கள்

வழிதவறிப்போகின்றனர். சீலம் என்றால் என்ன என்பதனை தெளிவாக அறிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் சீலமல்லாத விடயங்களையும் சீலம் என்று நினைத்து நாம் ஏமாறக்கூடும். இதுவும் மனதின் ஒரு இயல்பாகும். தியானம் செய்து கொண்டிருந்த ஒரு பிக்கு இயன்றளவு சரளமான வாழ்வினை மேற்கொள்ள வேண்டும் என நினைத்து சீலமல்லாத பிழையான விரதங்களை அவர் பற்றிக்கொண்டார். அவர் தர்மத்தினை பற்றிக்கொள்ளவில்லை. நான் உணவு உண்ணும் இந்த பாத்திரம் மற்பாத்திரமாகவோ அல்லது உலோக பாத்திரமாகவோ இருக்கக்கூடாது. நான் இயன்றளவு சரளமான வாழ்வினை வாழ வேண்டும் என நினைத்து மயானத்திற்கு சென்றார். அங்கிருந்த ஒரு மண்டையோட்டினை எடுத்து அதனை உணவு பாத்திரமாக உபயோகித்தார். மண்டையோட்டினை எடுத்து கொண்டு உணவிற்காக ஒரு வீட்டிற்கு சென்றபோது அவ்வீட்டிலிருந்த பெண் 'ஐயோ! ஒரு பேய் என் வீட்டுவாசலில் நிற்கிறது' என அலறிக்கொண்டு கதவினை மூடினாள். புத்த பகவானுக்கு இந்த சம்பவம் தெரிய வந்தது. இச்சம்பவத்தை முன்னிட்டு இம்மாதிரியான விடயங்களை செய்ய வேண்டாம் என புத்த பகவான் தனது சீடர்களுக்கு பணித்தார். சீலம் தொடர்பான பல்வேறு கருத்துவாதங்கள் அன்றைய சமூகத்தில் இருந்தன. இன்றைய சமூகத்தில் சீலம், ஒழுக்கம் தொடர்பான எவ்வித விழிப்புணர்வும் இல்லை என்றே கூறலாம். புத்த பகவானது காலத்தில் அவ்வாறில்லை. சீலம், ஒழுக்கம் தொடர்பாக பெரும்பாலான மக்கள் மத்தியில் ஆர்வம் இருந்தது.

அந்த ஆர்வத்தினால் பல்வேறு வகையான பிழை-யான விரதங்கள் மக்கள் மத்தியில் பரவியிருந்தது. சீலப்பத உபாதானத்தினால் தான் இவ்வனைத்தும் தோன்றியது.

**அத்தவாத உபாதானம் என்றால்**. 'நான்' என்று ஒன்று இந்த உருவத்தில், அனுபவிப்பில், இணங்காணலில், சிந்தனையில், விஞ்ஞானயத்தில் இருக்கிறது என்று அதன் மீது மனம் கட்டுண்டிருத்தலாகும். நால்வகை தாதுக்களால் உருவாகிய இந்த உருவத்தின் மீது அனுபவிப்பின் மீது, இணங்காணலின் மீது, சிந்தனையின் மீது போன்றே மனதின் மீதும் நான், எனது, எனக்குரியது என்ற வேறூன்றிய உணர்வொன்று எம்மனைவருள்ளும் இருக்கிறது. இந்த உணர்விருக்கின்ற வரை எம்மால் இதனிலிருந்து விடுதலையடைய முடியாது. மேற்கூறப்பட்ட நால்வகை உபாதானங்களினால் தான் பவ தோன்றுகிறது. பிறப்பினை இல்லாது செய்வதற்கு பவத்தினை அழிக்க வேண்டும். பவத்தினை அழிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? உபாதானத்தினை அழிக்க வேண்டும். உபாதானத்தின் ஆபத்தினை உங்களால் உணர முடிகிறதா? இதனை அழிப்பது இலகுவான கார-ியமா? "என்னுள் இருக்கிற உபாதானங்கள் அழிய வேண்டும்." என்று பிரார்த்தனை செய்தால் முடியுமா? முடியாது. மாறாக இந்த தர்மத்தினை தன்னுள் உய்த்துணர்வதாலலே முடியும்.

## உபாதானத்தின் பிணைப்பு ஏற்படுவதும் ஒரு காரணத்தினாலயே

புத்த பகவான், காமத்தின் மீது பிணைப்பு ஏற்படுவதற்கு,

கருத்துவாதங்கள் மீது பிணைப்பு ஏற்படுவதற்கு, தவறான விரதங்கள் மீது பிணைப்பு ஏற்படுவதற்கு, நான் எனது என்று பிணைப்பு ஏற்படுவதற்கு காரணம் இருக்கிறது. தர்மம் தொடர்பான இவ்விடயங்களை நாம் முறையாக அறிந்திராவிட்டால் நாம் வழிதவறிவிடுவோம்.

**உபாதானத்திற்கு காரணம் ஆசையே**

புத்த பகவான் பிணைப்பு (உபாதானம்) ஏற்படுவதற்கு காரணம் ஆசை,விருப்பு, பேராசை என்றெல்லாம் கூறப்படும் தண்ஹாவே என மொழிந்தார். புத்த பகவான், பேராசை எனப்படும் தண்ஹாவை மூன்று வகைப்படுத்தியுள்ளார். அவை முறையே காம தண்ஹா, பவ தண்ஹா, விபவ தண்ஹா எனப்படும்.

01. ரூப தண்ஹா - கண்ணினால் உருவங்களை கேட்கவிருக்கும் ஆசை

02. சப்த தண்ஹா - காதினால் சபதங்களை கேட்கவிருக்கும் ஆசை

03. கந்த தண்ஹா - நாசியினால் மணத்தை அறியவிருக்கும் ஆசை

04. ரச தண்ஹா - நாவினால் சுவையை உணர்வதற்கான ஆசை

05. பொட்டப்பதண்ஹா - உடலினால் உடலுணர்வுகளை உணரவிருக்கும் ஆசை

06. தம்ம தண்ஹா - மனதினால் நினைத்து கொண்டிருப்பதற்கான ஆசை என்பன காம தண்ஹாவாகும். 'பவ தண்ஹா' என்றால் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கான ஆசையாகும். 'விபவ தண்ஹா' என்றால் பிறவாமலிருப்பதற்கான ஆசையாகும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆசைகளும் எம்முள் இருக்கிறதல்லவா? இவ் அனைத்து ஆசைகளையும் மனதில் வைத்துக்கொண்டு “எனக்கென்றால் இனி பிறப்புக்களே வேண்டாம்” என்று கூறினால் அது சரியா? இந்த தண்ஹா எனப்படும் பேராசையின் செயற்பாடு மிகவும் புதுமையானது. இதனை நாம் முதலில் உணர வேண்டும். புத்த பகவான், உயிரினங்களின் வாழ்க்கை நிலவுகைக்கு இந்த ஆசை முக்கிய காரணியாக இருக்கிறது என மொழிந்துள்ளார். ஒரு விருட்சம் வளர வேண்டுமாயின் நீரில்லாமல் எவ்வளவு உரமிருந்தாலும் பயனில்லை. அதேபோல் சன்சாரம் எனும் மரம் வளர்வதற்கு தேவையான நீரே தண்ஹா எனப்படும் பேராசையாகும். என புத்த பகவான் மொழிகிறார். எம்மால் இதனை செயற்கை முறையில் நிறுத்த முடியாது. எம்முள்ளே உய்த்துணர வேண்டும். உருவங்கள், சப்தம், மணம், சுவை, உடலுணர்வுகள், எண்ணங்கள் என்பவற்றின் மீதான ஆசை தனியே தோன்றியதல்ல. அது சுயமாக தோன்றியதென்றால் நாம் வேறு எந்த முறையிலாவது இதனை நிறுத்தியிருக்கலாம். உருவங்களின் மீதான ஆசை சுயமாக தோன்றியிருந்தால் இந்த ஆசையை அழிப்பதற்கு கண்களை குருடாக்கி கொள்ளலாம். ஆனால் இந்த ஆசையை அழிப்பதாதனது மிகவும் நுண்ணிமான ஒரு விடயமாகும். அதனை தர்மத்தினை உய்த்துணர்வதன் மூலமே உணரலாம்.

உலகில் எத்தனையோ பேர் இந்த துக்கங்களிலிருந்து சன்சாரத்திலிந்து நீங்க வேண்டும் என நினைக்கிறார்கள். ஒரு சமயம் நான் ரிஷிகேஷில் இருக்கும் போது ஒரு

வெள்ளைக்கார தம்பதியினர் “இந்த ஆசைகளை நீக்க வேண்டும் துக்கத்திலிருந்து முழுமையாக விடுதலை அடைய வேண்டும். அதற்கான வழிமுறையை கூறுங்கள்” என அழுதுகொண்டு கூறினார்கள். இதேபோல் இவ்வுலகில் இன்னும் துக்கத்திலிருந்து விடுதலை அடைய வேண்டும் என நினைப்போர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதற்கான வழிமுறையை அறியாதோர்களாக இருக்கிறார்கள்.

## தண்ஹா (பேராசை) அனுபவிப்பினாலே

தண்ஹா தோன்ற காரணம் என்ன? புத்த பகவான் ஆசை தனிமையானது அல்ல என மொழிந்துள்ளார். காரணத்தினால தோற்றம் பெற்றது. தண்ஹா எனப்படும் பேரவா தோன்ற காரணமாக இருப்பது அனுபவிப்பாகும். இப்போது நன்கு சிந்தித்து பாருங்கள். எமக்கு எப்போதாவது ஆசை தோன்றியிருந்தால் அது அனுபவிப்பின் காரணமாகத்தான தோன்றியிருக்கும். அந்த அனுபவிப்பின் போது ஏற்பட்ட சுகத்தின் காரணமாக ஆசை பிறந்தது. சுகமற்ற, இன்பமளிக்காத விடயங்கள் மீது நாம் ஆசை கொள்வதில்லையல்லவா? அதன் மீது தண்ஹாவும் ஏற்படுவதில்லை. ஒரு உருவத்தின் மீது ஆசை கொண்டோமேயானால் அந்த உருவத்தினால் கிடைத்த சுகமான அனுபவிப்பின் மீதே ஆசை பிறந்தது. ஒரு சப்தத்தின் மீது ஆசை கொண்டால் அதற்கு காரணம் அந்த சப்தத்தினால் கிடைத்த சுகமான அனுபவிப்பே. மணத்தின் மீது ஆசை கொண்டோமேயானால் அந்த மணத்தினால் கிடைத்த சுகமான அனுபவிப்பின் மீதே ஆசை தோன்றியது.

சுவையின் மீது ஆசை பிறந்தது என்றால் அதற்கு காரணம் அந்த சுவை இனிமையான அனுபவிப்பினை தந்ததுவேயாகும். உடலுணர்வின் மீது ஆசை பிறந்ததென்றால் அந்த உடலுணர்வினால் கிடைத்த சுகமான அனுபவிப்பின் மீதே ஆசை தோன்றியது. எண்ணங்கள் மீது விருப்பு தோன்றியதென்றால் அந்த எண்ணங்களினால் கிடைக்கும் சுகமான அனுபவிப்பின் மீதே ஆசை பிறந்தது. என்றாவது ஒருநாள் இந்த சுகமான அனுபவிப்பு இல்லாமல் போகும் போது அதன் மீதுள்ள ஆசையும் இல்லாமல் போய்விடும்.

அனுபவிப்பு இருப்பதால்தான் ஆசை பிறக்கிறது. அனுபவிப்பு அற்று போகும் போது ஆசையும் அற்றுப்போகிறது. அனுபவிப்பு எங்கு தோன்றுகிறது? கண்ணினால் உருவத்தினை பார்த்து அனுபவிப்பு தோன்றுகிறது. காதினால் சப்தத்தை கேட்பதால் அனுபவிப்பு தோன்றுகிறது. நாசியினால் மணத்தை நுகர்வதால் அனுபவிப்பு தோன்றுகிறது. நாவினால் சுவையுணர்வதால் அனுபவிப்பு தோன்றுகிறது. உடலுக்கு உடலுணர்வுகள் கிடைக்கும் போது அனுபவிப்பு தோன்றுகிறது. மனதினால் இவற்றை சிந்திக்கும் போது அனுபவிப்பு தோன்றுகிறது. இவ்வனுபவிப்பானது பிரதானமாக மூன்று வகைப்படும். சுகம், துக்கம், சுகமோ துக்கமோ அற்ற சமநோக்கான அனுபவிப்பு என்பனவே அவையாகும்.

### அனுபவிப்பு ஸ்பரிசத்தினாலயே

அனுபவிப்பு தனிமையாக தோற்றம் பெறுவதல்ல. மாறாக அனுபவிப்பானது ஸ்பரிசத்தினாலயே தோற்றம்

பெறுகிறது என புத்த பகவான் மொழிந்தார்.

### ஸ்பரிசம் என்றால் என்ன?

ஸ்பரிசம் என்றால் ஒரு சேர்க்கையாகும். அனுபவிப்பு ஏற்பட வேண்டுமாயின் மூன்று விடயங்கள் ஒன்று சேர வேண்டும். இம்மூன்று விடயங்களும் ஒன்று சேராவிடில் அனுபவிப்பு தோன்றாது.

01. கண்களும் உருவமும் கண்ணின் மனது (சக்கு விஞ்ஞானயமும்) ஒன்று சேர்தல் கண்ணின் ஸ்பரிசமாகும். இம்மூண்றும் ஒன்று சேர்வதால் உருவத்தின் மீதான அனுபவிப்பு தோன்றுகிறது.
02. காதுகளும் சப்தமும் சோத்த விஞ்ஞானயமும் ஒன்று சேர்தல் காதின் ஸ்பரிசமாகும். இம்மூண்றும் ஒன்று சேர்வதால் சப்தத்தின் மீதான அனுபவிப்பு தோன்றுகிறது.
03. நாசியும் மணமும் காண விஞ்ஞானயமும் ஒன்று சேர்தல் நாசியின் ஸ்பரிசமாகும். இம்மூண்றும் ஒன்று சேர்வதால் மணத்தின் மீதான அனுபவிப்பு தோன்றுகிறது.
04. நாவும் சுவையும் ஜிவ்ஹா விஞ்ஞானயமும் ஒன்று சேர்தல் நாவின் ஸ்பரிசமாகும். இம்மூண்றும் ஒன்று சேர்வதால் சுவையின் மீதான அனுபவிப்பு தோன்றுகிறது.
05. உடலும் உடலுணர்வும் காய விஞ்ஞானயமும் ஒன்று சேர்தல் உடலின் ஸ்பரிசமாகும். இம்மூண்றும் ஒன்று சேர்வதால் உடலுணர்வின் மீதான அனுபவிப்பு தோன்றுகிறது.

06. மனதும் எண்ணங்களும் மனோ விஞ்ஞானயமும் ஒன்று சேர்தல் மனதின் ஸ்பரிசமாகும். இம்மூண்றும் ஒன்று சேர்வதால் எண்ணத்தின் மீதான அனுபவிப்பு தோன்றுகிறது.

ஸ்பரிசம் தோன்றியவுடன் அனுபவிப்பு தோன்றும் அப்படியாயின் அனுபவிப்பு ஸ்பரிசத்தினாலயே தோன்றுகிறது. என்னிடம் ஒருவர் “சுவாமியே! எனக்கு சில வருடங்களுக்கு முன்பு உளச்சமாதி இருந்தது. அது மிகவும் சுகமானதாக இருந்தது. காலப்போக்கில் இது இல்லாமல் போய்விட்டது.” என்று கூறி-னார். அது ஒரு ஸ்பரிசத்தினால் ஏற்பட்டதொரு அனுபவிப்பு என்பதனை அவர் உணரவில்லை. அவர் அந்த உளச்சமாதியினால் கிடைத்த சுகத்தின் மீது ஆசைகொண்டார். அவர் அதன்பின் உளச்சமாதியை பற்றி சிந்திக்கவில்லை. மாறாக அதனால் ஏற்படும் சுகத்தினை மாத்திரமே சிந்தித்தார். அதனை-யே விரும்பினார். ஸ்பரிசத்தினால் ஏற்பட்டதொரு அனுபவிப்பு என்பதனை புரிந்து கொள்ளாது அது இல்லாமல் போன பின்பு அந்த சுகத்தினை அடைய வேண்டும் என்பதற்காக தியானம் செய்தால் அந்த எதிர்பார்பின் காரணமாக மனம் சலனமடையும். சலனமடையும் மனம் ஒன்றிணையாது. இவ்வாறு முயற்சிக்கும் போது மனம் சமாதி நிலையை அடை-யாது அதனால் மனம் கவலையுறும். இவ்வாறான மனதினால் சமாதியடைய முடியாது.

சுகம், துக்கம், சமநோக்கு (சுக துக்கம் அற்ற நிலை) என்பன தொடர்பான அறிவு எமக்கு இருக்க வேண்டும். ஸ்பரிசத்தினால் அறுவகையான அனுபவிப்புக்கள்

எம்முள் தோன்றுகின்றன. கண்ணினால் உருவத்தினை, காதினால் சப்தத்தினை, நாசியினைால் மணத்தினை, நாவினால் சுவையினை, உடலினால் உடலுணர்வுகளை, மனதினால் எண்ணங்களை அனுபவிக்கிறோம். இந்த அனுபவிப்பினை நான் என்ற ஒருவர் அனுபவிக்கவில்லை. ஸ்பரிசத்தினால் தோற்றம் பெற்ற அனுபவிப்பே என்பதனை நாம் உணர வேண்டும்.

ஸ்பரிசத்தினை புத்த பகவான் உயிரோடு தோலுரிக்கப்பட்ட ஒரு பசுவிற்கு உவமைபடுத்தியுள்ளார். உயிரோடு இருக்கும் ஒரு பசுவினை தோலுரித்து விட்டால் இந்த பசு எங்கிருந்தாலும் தப்பிக்க முடியாது. ஏனைய மிருகங்கள் புச்சிகள் இந்த பசுவினை சாப்பிட முயற்சிக்கும். அவற்றிலிருந்து தப்புவதற்காக அந்த பசு நீரினால் இறங்கியிருந்தாலும் நீரிலுள்ள உயிரினங்கள் அதனை துன்புறுத்தும். மரநிழலில் இருக்க சென்றால் மரத்திலுள்ள பூச்சியினங்கள் அந்த பசுவை கடித்து துன்புறுத்த துவங்கிவிடும். இந்த பசுவிற்கு எவ்விதமான விடுதலையும் இல்லை. அதேபோல் தான் இந்த ஸ்பரிசமுமாகும். இந்த ஸ்பரிசத்திலிருந்து விடுதலையடைவதும் மிகவும் கடினமாகும்.

## ஸ்பரிசத்திலிருந்து விடுதலை அடைய வேண்டுமாயின்

ஸ்பரிசத்திலிருந்து விடுதலை அடைய வேண்டுமாயின் ஸ்பரிசத்தின் மீதான அறியாமையை நீக்க வேண்டும். ஸ்பரிசத்தினை நான் என நினைத்து கொண்டிருப்பதை நிறுத்த வேண்டும். எனது, எனக்குரியது என நினைத்து கொண்டிருக்கும் எண்ணத்தினை கைவிட வேண்டும். இவ்வாறு செய்வதனாலயே

ஸ்பரிசத்திலிருந்து விடுதலை அடைய முடியும். மனதினை ஒன்றிணைத்து சமாதி நிலையை தன்னுள் தோற்றுவித்து தர்மத்தினை தன்னுள் காணும் போது இந்த ஸ்பரிசத்தினால் முழுமையாக விடுதலை அடைய முடியும். அவ்வாறில்லாவிடில் தோலுரித்த பசுவினை போல் இருக்க வேண்டியதுதான்.

### ஸ்பரிசம் அறுவகை புலன்களினாலே

புத்த பகவான், ஸ்பரிசம் தனிமையாக காரணமற்று தோற்றம் பெற்றதொன்றல்ல என மொழிந்தார். கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் அறுவகை புலன்கள் உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வுகள், எண்ணங்கள் என்பனவை விஞ்ஞானத்துடன் சேர்வதானது அதாவது ஸ்பரிசமானது தாமாக இடம்பெறும் ஒன்றல்ல. காரணம் இருந்ததாலயே அது நிகழ்ந்தது. அந்த காரணம் யாது? ஆம் ஸ்பரிசம் தோன்றுவதற்கு காரணம் புலன்களே.

### அறுவகை நிறுவனம் எனப்படும் அறுவகை புலன்கள்.

நாம், பிறந்தது எனக்கூறுவது எதற்கு? பிறந்தது என்றால் கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் ஆறும் கிடைப்பதாகும். இந்த அறுவகை நிறுவனங்களை தவிர வேறெதுவும் கிடைப்பதில்லை.

### கர்மத்தின் அடிப்படையில்

பிறக்கும் போது இவ் அறுவகை புலன்கள் கிடைக்குமாயின் அதற்கு அடிப்படையாக இருப்பது

கர்மமாகும். இந்த கர்மத்தின் ஒழுங்கமைப்பானது மனதிலும் உடலிலும் இருக்கிறது. 'நான்' என்று நினைத்து கொண்டிருந்தாலும் நாம் அனுபவிப்பது கர்மத்தின் அடிப்படையிலாகும். . 'நான்' என்று நினைத்து கொண்டு அனுபவிப்பது கர்மத்தின் படி ஒழுங்கமைந்ததொன்றாகும்.

## அறுவகை புலன்களும் துக்கமே

புத்த பகவான் இந்த அறுவகை புலன்கள் துக்கத்திற்குரியன என மொழிந்துள்ளார். துக்கம் மீண்டும் துக்கத்தினை தோற்றுவிப்பதற்காகவே ஒழுங்கமைகிறது. கண் என்று ஒன்றிருந்திராவிட்டால் கண்களும் உருவமும் விஞ்ஞானயமும் சேர்ந்திருக்க முடியாது. அதாவது ஸ்பரிசம் ஏற்பட்டிருக்காது. காதுகள் இல்லாதிருந்தால் காதும் சப்தமும் விஞ்ஞானயமும் சேர்ந்திருக்க முடியாது. அதாவது காதின் ஸ்பரிசம்ஏற்பட்டிருக்காது நாசி இல்லாதிருந்திருந்தால், நாவு இல்லாதிருந்தால், உடல் இல்லாதிருந்தால், மனம் இல்லாதிருந்தால் ஸ்பரிசம் தோன்றியிருக்காது. அப்படியாயின் இவ்வனைத்திற்கும் அடிப்படையானது அறுவகை புலன்கள் கிடைத்தலாகும்.

## அறுவகை புலன்களின் தேவை வேண்டாமா?

ஒருநாள் புத்த பகவான் இந்த கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் அறுவகை புலன்கள் மீது கொண்டுள்ள பற்றுதலை நீக்குவது தொடர்பான ஒரு போதனையை தனது சீடர்களுக்கு போதித்து கொண்டிருந்தார். அப்போது மாடு மேய்ப்பவனை

போல் தோற்றமளிக்கும் ஒருவன் புத்த பகவானிடம் வந்து 'பகவானே! எனது மாடுகள் இந்த திசையால் செல்வதனை பார்த்தீர்களா?' எனக்கேட்டான். புத்த பகவானது சீடர்களான பிக்குமார்கள் மனதினை நன்கு ஒருங்கிணைத்து தர்மத்தினை செவிமடுத்து கொண்டிருக்கும் போதுதான் இது நிகழ்ந்தது. புத்த பகவான் இடையனை போல் வந்தவன் யாரென்பதை அறிந்து கொண்டு 'மாரனே, உனது மாடுகளை நீயே பார்த்துக்கொள்' எனக்கூறினார். உயிர்களை சன்சாரத்தில் பிணைத்து வைத்திருக்கும் மாரன் எவ-ரேனும் கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் அறுவகை நிறுவனங்களிலிருந்து விடுதலை பெறுவதை விரும்பாதவன். அவன் மேலும் புத்த பகவானிடம் பின்வருமாறு உரையாடுகிறான். பகவா-னை பார்த்து

'ஸ்ரமணரே! இந்த கண்கள் என்னுடையது'

'ஆம்..இந்த கண்கள் என்னுடையதல்ல. அவை உன்னுடையதுதான்'

ஸ்ரமணரே! இந்த காதுகள் என்னுடையது'

'ஆம்..இந்த காதுகள் என்னுடையதல்ல. அவை உன்னுடையதுதான்'

'ஸ்ரமணரே! இந்த நாசி என்னுடையது'

'ஆம்..இந்த நாசி என்னுடையதல்ல. அது உன்னுடையதுதான்'

'ஸ்ரமணரே! இந்த நாவு என்னுடையது'

'ஆம்..இந்த நாவு என்னுடையதல்ல. அதுவும் உன்னுடையதுதான்'

'ஸ்ரமணரே! இந்த உடல் என்னுடையது'

'ஆம்..நீ மிகச்சரியாக கூறினாய் இந்த உடல் என்னுடையதல்ல. அதுவும் உன்னுடையதுதான்'

'ஸ்ரமணரே! உன்னுள் இருக்கும் உள்ளமும் என்னுடையது'

'ஆம்..இந்த மனமும் என்னுடையதல்ல. அதுவும் உன்னுடையதுதான்'

'ஸ்ரமணரே! எவராயினும் ஒருவர் இந்த ஆறு வகை புலன்களையும் நான், எனது, எனக்குரியது என்று கூறுகிறார்களோ அவர்கள் அனைவரும் எனக்கு சொந்தமானவர்களே..'

'ஆம்..மாரனே, எவரேனும் இந்த ஆறு வகை புலன்களையும் நான், எனது, எனக்குரியது என்று கூறுகிறார்களோ அவர்கள் அனைவரும் உனக்கு சொந்தமானவர்களே!. அதேபோல் எவரேனும் ஒருவர் நான், எனது, எனக்குரியது எனும் எண்ணத்திலிருந்து முழுமையாக விடுதலை அடைந்தால் அவர்கள் யாருக்குரியவர்கள்?'

'ஸ்ரமணரே! அவர் எனக்குரியவரல்ல...'

இது மாரனுக்கும் புத்த பகவானுக்குமிடையில் ஏற்பட்டதொரு உரையாடலாகும். நாமெல்லாம் யாருக்குரியவர்கள் என்பதனை இப்போது அறிவீர்களா? மாரனுக்குரியவர்கள். பாருங்கள் இந்த அறுவகை புலன்களினால் நாம் எவ்வளவ தூரம் செல்கிறோம் என்பதனை. எவரேனும் ஒருவர் நான், எனது, எனக்குரியது எனும் எண்ணத்திலிருந்து முழுமையாக விடுதலை அடைந்தால் அவர் அனைத்து துக்கத்திலிருந்தும் முற்று முழுதாக விடுதலையடைந்தவராவார்.

**அறுவகை புலன்கள் (நிறுவனங்கள்)**

புத்த பகவான் இந்த அறுவகை புலன்களும் தன-
ிமையாக தோன்றியதல்ல என மொழிந்துள்ளார்.
கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும்
அறுவகை புலன்களுமே காரணத்தினாலயே
தோற்றம் பெற்றுள்ளது. அறுவகை புலன்கள்
நாமரூபத்தினாலயே தோற்றம் பெற்றது.

### நாம ரூபம்

நாம - ரூபம் என்பதில் எம்நாட்டில் பலருக்கு பிழையான கருத்துக்கள் உள்ளன. சிலர் உடல் நாமம் என்றும் மனம் ரூபம் என்றும் ஏனையோருக்கு கற்றுகொடுக்கின்றனர். அது பிழையாகும். புத்த பகவான் இவ்வாறு கூறவில்லை. புத்த பகவான் அனுபவிப்பு, இணங்காணல், சிந்தனை, ஸ்பரிசம், மற்றும் மனசி-காரம் எனும் ஐந்தும் நாமத்திற்குரியதாகும். இது புத்த பகவானது ஒப்பற்ற ஞானத்தின் வெளிப்பாடு என்பதனை நாம் உணர வேண்டும். நாமும் எமது அறிவினாலயே இவற்றினை ஆராய வேண்டும். ரூபம் என்றால் பட்டவி - நிலம்(மண்), ஆபோ - நீர், தேஜோ - வெப்பம் அல்லது தீ, வாயொ - வளி எனும் நால்வகை தாதுக்களால் உருவாகியவையா-கும். இந்த நாமரூபத்தின் செயற்பாட்டினால்தான் கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் ஆறும் தோன்றியுள்ளது. இது மிகவும் ஆழமான விடயமல்லவா?

### நாமரூபம் விஞ்ஞானயத்தினால்தான்

புத்த பகவான், இந்த நாமரூபம் தனிமையாக
தோன்றியதன்று. அதுவும் ஒரு காரணத்தினாலயே

தோற்றம் பெற்றது என மொழிந்துள்ளார். நாமரூபம் தோன்ற விஞ்ஞானயமே காரணம். அறுவகை புலன்களிலிருந்து நீங்க வேண்டுமாயின் விஞ்ஞானயத்தினை நீக்க வேண்டும்.

### விஞ்ஞானயம்.

விஞ்ஞானயம் என்றால் என்ன? ஏதேனும் விடயத்தினை விசேடமாக அறநிது கொள்ளும் இயல்பே விஞ்ஞானயமாகும்.விஞ்ஞனயத்தினை ஒரு மாயாவிக்கு உவமைபடுத்தியே புத்த பகவான் மொழிந்துள்ளார். விஞ்ஞானயம் என்பது மாயாவியை போன்றது. மனதினால் நினைத்து கொண்டிருக்கும் போது மனதில் தோன்றும் மாயங்களை அறிவீர்களல்லவா? எமது உள்ளம் புதுமை நிறைந்ததாகும்.

ஒருநாள் ஒரு இளைஞன் ‘சமாகாஹா’ எனும் ஒரு குளத்தின் ஓரத்தில் அமர்ந்தபடி “இன்று நான் உலகின் முடிவு வரை சிந்திப்பேன்” என நினைத்து சிந்திக்க துவங்கினான். இம்மாதிரியான பித்து பிடித்ததை போல் சிந்திபபோர்கள் இன்றும் உள்ளனரல்லவா? அதுபோல்தான். இந்த இளைஞன் இப்போது குளத்திலிருக்கும் ஒரு தாமரை தண்டை பார்த்துக்கொண்டு சிந்திக்க துவங்கினான். இவ்வாறு வெகு நேரமாக சிந்தித்து கொண்டிருக்கும் போது அவன் பார்த்துக்கொண்டிருந்த தாமரை தண்டின் வழியாக மனிதர்கள் போன்ற உருவினை கொண்டோர் சிலர் வரிசையாக செல்வதை போல் பார்த்தான். இதனை கண்டவுடன் மிகுந்த பதற்றமடைந்த இவ்விளைஞன் தன் நண்பர்களிடம் சென்று “நான் இன்று நான்

உலகின் முடிவு வரை சிந்திப்பேன் என நினைத்து குளக்கரையில் அமர்ந்து சிந்தித்து கொண்டிருந்தேன். அப்போது இவ்வாறாதொரு விடயத்தினை பார்த்தேன்" என கூறினான். நண்பர்கள் அதனை நம்பவில்லை. "உனக்கு பைத்தியம் பிடித்துவிட்டது" என கேலி செய்தனர். அவ் இளைஞனுக்கு உண்மையிலேயே பைத்தியமும் பிடித்து விட்டது. அந்த தாமரை தண்டின் சம்பவமானது உண்மையாகவே நிகழ்ந்ததொன்று என புத்த பகவான் மொழிந்தார்.

தனது மனதினால் உணர முடியாத விடயம் என்பதாலயே பித்து பிடித்தது என புத்த பகவான் மொழிந்தார். எம்முள் இருக்கும் விஞ்ஞானயத்தின் இயல்பும் இவ்வாறே இந்த விஞ்ஞானயம் எமக்கு இலகுவில் தகர்த்தெறிந்திட முடியாத ஒரு மாயையை எம்முள் தோற்றுவித்து கொடுத்தது. அது என்ன? ஆம் அதுதான் 'நான்' ஒவ்வொருவருள்ளும் 'நான்' எனும் ஒருவரை தோற்றுவித்து கொடுத்தது. விஞ்ஞானயத்தின் மாயையினால் எங்கு பார்த்தாலும் எமக்கு நான், எனது, எனக்குரியது போன்றுதான் தென்படுகிறது. ஆனால் அது வெறும் மாயை மாத்திரமே. இந்த மாயை தகர்த்தெறிய முடியாமலே நாமுள்ளோம். இந்த மாயை மிகுந்த விஞ்ஞானயம் எமது கண், காது, நாசி, நாவு, உடல், மனம் என்பவற்றில் தோற்றம் பெறுகிறது. அவ்வாறு தோன்றும் போது நாரூபம் தோன்றுகிறது. அனுபவிப்பு, இணங்காணல், சிந்தனை, ஸ்பரிசம், மனசி-காரம் மற்றும் நால்வகை தாதுக்களால் உருவாகிய உருவம் எனும் இவ்வனைத்திலும் விஞ்ஞானயத்தினை காரணமாகக்கொண்டே இருக்கின்றன. இதனை நன்கு

நினைவில் வைத்துகொள்ளுங்கள். விஞ்ஞானயம் தனியாக இயங்கும் ஒன்றல்ல. நாமரூபத்துடன் நில-வுவதாகும். எவ்வுலகில் விஞ்ஞானயம் இருந்தாலும் இவ்விஞ்ஞானயம் நாபரூபத்தினால் தோற்றம் பெற்றதாகும் எந்த உலகில் நாமரூபம் இருந்தாலும் அது விஞ்ஞானயத்தினை காரணமாக கொண்டு தோற்றம் பெற்றதாகும்.

## விஞ்ஞானயம் சங்ஸ்காரத்தின் பலனே

விஞ்ஞானயம் தனியாக தோன்றியதன்று. காரணத்தினால் தோற்றம் பெற்றதாகும். புத்த பகவான் ‘விஞ்ஞானயம் தோன்றியிருப்பது சங்ஸ்காரத்தினாலயே’ என மொழிந்துள்ளார்.

## சங்ஸ்காரம்

முக்கிமான விடயம் ஒன்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. புத்த பகவான் சங்ஸ்காரத்தினை மூன்று வகைப்படுத்தியுள்ளார்.

01. காய சங்ஸ்காரம்.
02. வசீ சங்ஸ்காரம்.
03. சித்த சங்ஸ்காரம்.

காய சங்ஸ்காரம் - உள் மூச்சு, வெளி மூச்சு

வசீ சங்ஸ்காரம் - விதக்க விசார, இந்த விதக்க விசார என்றால் என்ன? ஏதேனும் ஒரு விடயத்தினை நாம பேசும் முன்னர் நாம் மனதினால் பேசுவோமல்லவா? இவ்வாறு மனதினால் பேசுவது இன்னும் வேகமாகி வார்த்தைகளாக வெளிவருகிறது. இதுவே விதக்க விசாரவாகும்.

சித்த சங்ஸ்காரம் - இணங்காணல், அனுபவிப்பு
இந்த செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டுதான் விஞ்ஞானயம் நிலவுகிறது.

### சங்ஸ்காரம் அஞ்ஞானத்தினாலயே

புத்த பகவான் இவ்வனைத்துமே நிலவுவது ஒரு காரணத்தினாலயே என மொழிந்தார். அதுதான் அஞ்ஞானம். சங்ஸ்காரம் தோன்றுவதற்கு காரணம் அஞ்ஞானமாகும்.

### அஞ்ஞானம்

அஞ்ஞானம் என்றால்

01. துக்கத்தினை ஒரு ஆரிய சத்தியமாக உய்த்துணராமை
02. துக்கத்தின் தோற்றத்தினை ஒரு ஆரிய சத்தியமாக உய்த்துணராமை
03. துக்கத்தின் அழிவினை ஒரு ஆரிய சத்தியமாக உய்த்துணராமை
04. துக்க அழிவிற்கான பாதையை ஒரு ஆரிய சத்தியமாக உய்த்துணராமை.

இந்த நாற்பேருண்மைகளை ஒருவர் ஆரிய சத்தியமாக உய்த்துணரும் போது அவருள் சங்ஸ்காரம் தோற்றம் பெறாது.

நாம் இதுவரை படிச்சசமுப்பாதம் தொடர்பாகவே பேசினோம். இந்த படிச்சசமுப்பாதம் துக்கத்திற்குரியதாகும். எம்மிடமிருக்கும் அனைத்து விடயங்களுமே துக்கத்திற்குரியதாகும். இவ்வாறான துன்பத்தினை

அளிக்கும் விடயங்களைத்தான் நாம் 'நான்' என ஏற்றுக்கொண்டுள்ளோம். 'நான்' என அனுபவிக்கிறோம். 'நான்' என எம்மையே நாம் ஏமாற்றிக்கொண்டிருக்கிறோம். புத்த பகவான் ஒரு சமயத்தில் **'துக்கமேவ உப்பச்ஜமானா உப்பச்ஜதி'** அதாவது தோன்றினால் தோன்றுவது துக்கம் மாத்திரம் தான் **'துக்கமேவ நிருச்ஜமானா நிருச்ஜதி'** அழிவதாயின் அழிவதும் துக்கம் மாத்திரம் தான் என்று மொழிந்துள்ளார். அப்படியாயின் எமக்கு உய்த்துணர வேண்டியது துக்கத்தினையே. அழிக்க வேண்டியது துக்த்திற்கான காரணத்தினையாகும். உறுதி செய்ய வேண்டியது துக்க நிவாரணம் எனும் பரம சுகமான மோட்சத்தினையாகும். பின்பற்ற வேண்டியது துக்க அழிவிற்கான ஒரே பாதையான எண்சீர் வழியையாகும். இங்கு கூறப்பட்ட விடயங்களை புரிந்துணர்ந்து படிச்சசமுப்பாதத்தினை முழுமையாக உய்த்துணர்ந்து, இந்த காரண காரிய செயற்பாட்டினை தகர்த்தெறிந்து இவ்வனைத்து துக்கங்களிலிருந்தும் முழுமையாக விடுதலையடையும் பாக்கியம் எம்மனைவருக்கும் கிடைக்கட்டும்

**சாது! சாது!! சாது!!!**